படைப்பு

ஊற்று-4 | நதி-4 | ஆகஸ்ட்-2021 | திங்களிதழ்

ISSN : 2582-4015

www.padaippu.com

தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

புனைவு என்ற பெயரில் மக்களுக்குச் சம்பந்தமே இல்லாததை எழுதி இலக்கியம் என்று சொல்வது நியாயமற்றது..

- எழுத்தாளர் அ.கரீம் அவர்களுடனான நேர்காணல்

- மனதை ஊடுருவும் கவிதை வேர்கள்
  - கார்த்திக் திலகன்

- கேள்விக்கணைகளாகும் கவிதைகள்
  - கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

- சாளரம் திறக்கும் கவிதைகள்
  - விஜயராணி மீனாட்சி

படைப்பு
தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-4 | நதி-4 | ஆகஸ்ட் 2021

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
ஸ்டெல்லா தமிழரசி
கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

உள்ளே...

- **தலையங்கம்** -பக். 04
- **“புனைவு என்ற பெயரில் மக்களுக்குச் சம்பந்தமே இல்லாததை எழுதி இலக்கியம் என்று சொல்வது நியாயமற்றது..”**
  - எழுத்தாளர் அ.கரீம் அவர்களுடனான நேர்காணல் -பக். 05
- **கவிதைக்குள் கலந்திருக்கும் கதை**
  - மு.முருகேஷ் -பக். 16
- **மனதை ஊடுருவும் கவிதை வேர்கள்**
  - கார்த்திக் திலகன் -பக். 22
- **இசைக்கு நடை கற்பிக்கும் தாளக்கருவி - பறை**
  - கோ.லீலா -பக். 31
- **புத்தனைத் தேடி..**
  - கவிஜி -பக். 34
- **கேள்விக்கணைகளாகும் கவிதைகள்**
  - கலிங்கப்பட்டி க.கருப்பசாமி -பக். 38
- **சாளரம் திறக்கும் கவிதைகள்**
  - விஜயராணி மீனாட்சி -பக். 43
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் -பக். 48
- **கற்பதுவே.. கேட்பதுவே..!**
  - மௌனன் யாத்ரிகா -பக். 52
- **மயில் நிலையம், சிறந்த நூல் நிலையம்**
  - கவிஞர் ஆதிரை -பக். 57
- **மனநிலைக் குறிப்புகள் - 12**
  - ஆதிரன் -பக். 59

சிறுகதைகள்

- எங்கூரு செவத்தய்யனார்..
  – மீரா –பக். 26
- இளங்கொடி
  – சன்மது –பக். 44

கவிதைகள்

- சந்துரு –பக். 15
- ப.தனஞ்ஜெயன் –பக். 29
- ப்ரியா பாஸ்கரன் –பக். 29
- தீபிகா சுரேஷ் –பக். 29
- சௌவி –பக். 30
- கவி. விஜய் –பக். 30
- சம்பத் கிருஷ்ணகுமார் –பக். 30
- பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 12
  – ஜின்னா அஸ்மி –பக். 37
- ஊர்மிளை
  – கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன் –பக். 46

தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' நாற்பதாம் மின்னிதழ் உங்கள் கண்முன் பரந்துவிரிந்திருக்கிறது.

ஆளும் வர்க்கத்தினருக்கும் படைப்பாளர்களுக்கும் இடையே ஒரு மெல்லிய இணைப்பு இருந்துகொண்டுதான் இருக்கும். சமூகத்துக்கும் இலக்கியத்துக்குமான பெருந்தொடர்பின் ஓரங்கம் அது. இந்தப் பிணைப்பு அதிகார மையத்தை நோக்கிக் குடிமகனை ஈர்த்து நிறுத்துவதாகவும் இருந்திருக்கிறது.. அதிகார மையத்தின் எல்லைகளை வரையறுத்து உணர்த்துவதாகவும் இருந்திருக்கிறது. தமிழின் இலக்கியப் பின்புலம் இதனைத் தெளிவாக உணர்த்திவிடுகிறது. 'நீயோர் ஆகலின் நின்னொன்று மொழிவல்' என்று ஆள்பவனிடம் இணக்கம் காண்பித்து 'காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி' என்று ஆட்சிபுரிய வேண்டிய முறையை அறிவுறுத்தும் நரிவெரூஉத் தலையாரின் பாணியெல்லாம் அழகு. ஆள்வோனிடம் நெருக்கமான நிலையில் எழுந்த படைப்புகளாகக் காணப்படும் ஆதித் தரவுகளிலும்கூட ஆள்வோனின் தவறுகள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டு இருக்கின்றன.

நீதி தவறிய அரசனைத் தானே இறக்க வைத்தது, அரசனின் மகனே ஆனாலும் காதலை மறுத்துச் சூழ்நிலையைக் காரணம் காட்டி அவனைக் கொன்றது எனத் தமிழ்க் காப்பியங்கள் கூறும் செய்திகளை எண்ணிப் பார்த்தால் ஆளும் வர்க்கத்தினரை உச்சாணிக் கொம்பில் ஒன்றும் அனைத்துப் படைப்பாளர்களும் ஏற்றிவைத்து விடவில்லை.

எனில் எளிய குடிமக்களின் பிரச்சனைகள் அனைத்தும் படைப்புகளில் பேசப்பட்டுவிட்டனவா என்றால் நிச்சயமாக இல்லை. பசி, வறுமை என்பன பேசப்பட்டாலும் அவை தனிமனிதத் துன்பங்களாகச் சித்தரிக்கப்பட்டுவிடுகின்றனவே அன்றிச் சுட்டுவிரல் அரசனை நோக்கி நீளவில்லை. அக்காலகட்ட மனிதத் துயரங்களை ஆள்வோனின் தவறினால் விளைந்ததாக முற்றுமுழுதுமாக முன்னைய இலக்கியங்கள் பதிவு செய்துவிடவில்லை.

இந்த இதழில் அரசவைக் கவிஞராக இருந்த நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை, அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டியபடியே இருக்கும் ஆதவன் தீட்சண்யா என இருவரைப் பற்றிய கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இவற்றை இரு முரண்பட்ட ஆளுமைகளைப் பற்றிய கட்டுரைகள் என்று மட்டும் சொல்லிவிட முடியாது. இவ்விருவேறுபட்ட படைப்பு நிலைகளும் ஒரு சமூகத்தின் இயங்குநிலைக்குக் காரணமாகின்றன. எப்படி உறுதுணையாயிருக்கும் குரல்கள் ஆள்வோரால் ஆதரிக்கப்படுகின்றனவோ அவ்விதமே பிழையுணர்த்தும் குரல்களும் உற்றுநோக்கப்பட வேண்டும் என்பதில்தான் சமூகத்தின் சமநிலை பிழைக்கிறது. நேர்காணல் காணப்பட்டிருக்கும் எழுத்தாளர் அ.கரீமின் குரலையும் படைப்பாளர் ஆதவன் தீட்சண்யாவின் நீட்சிக் குரலாகத்தான் காண வேண்டியிருக்கிறது. இது என் சமூகம் என்ற எண்ணம் படைப்பாளனுக்கு வலுப்பட வலுப்பட குற்றங் களைந்தே ஆக வேண்டும் என்ற எண்ணமும் வலுப்பெற்றே தீரும். சமூகத்திற்கான பலதரப்பட்ட எழுத்தாளர்களையும் நாம் மகிழ்வுடன் சுமந்தபடி இருப்போம்.

கட்டுரைகள், தொடர்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்..

நன்றி.

– ஆசிரியர். ■

● வீரசோழன் க.சோ.திருமாவளவன்

“புனைவு என்ற பெயரில் மக்களுக்குச் சம்பந்தமே இல்லாததை எழுதி இலக்கியம் என்று சொல்வது நியாயமற்றது..”

– எழுத்தாளர் அ.கரீம் அவர்களுடனான நேர்காணல்

எழுத்தாளர் அ.கரீம் கோவையில் வழக்கறிஞராகப் பணிபுரிந்துகொண்டு, ஆணாதிக்கச் சமூகத்திற்கு எதிராகவும் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் தனது கதைமாந்தர்களின் வழியே குரல் எழுப்புபவர். தனது எழுத்துவழி நாதியற்றோருக்கான பக்கபலமாக விளங்குபவர். முற்போக்குச் சிந்தனையும், அழகியலும் மிளிரும் படைப்புகளுக்குச் சொந்தக்காரரான எழுத்தாளர் அ.கரீமுடனான ஒரு நேர்காணல்..

ஒரு படைப்பாளனாக எழுத்தில் உங்கள் முன்னோடியாகச் சொல்ல வேண்டுமென்றால் யாரைச் சொல்வீர்கள்?

முன்னோடிகள் என்பதை எதைக்கொண்டு அளவிடுவது என்று தெரியவில்லை. மனிதர்களின் மீது நடத்தப்படும் எல்லாவிதமான ஒடுக்குமுறைகளையும் படைப்பாகப் பதிவு செய்தவர்களையா? இல்லை பொழுதுபோக்கிற்காக எழுதிப்போன படைப்பாளர்களையா? என் பார்வையில் முன்னோடிகள் என்றால் மனிதர்களின் வாதைகளைப் பதிவு செய்தவர்கள்தான். புதுமைப்பித்தனிலிருந்து துவங்கிப் பிரபஞ்சன், ச.தமிழ்ச்செல்வன், சி.ஞானபாரதி, ஆதவன் தீட்சண்யா என்று பலரும் இருக்கிறார்கள். அசோகமித்திரன் கதைகளை வாசிக்கும்போது எப்படி ஒரு கதையைக் கையாளலாம் என்று ஒரு வழிகாட்டுதல் கிடைக்கும். குறிப்பாக மேஜிக்கல் ரியலிசம் கதைக்கு "நாடகத்தின் முடிவு" என்ற அவரின் கதை கிளாசிக்காக இருக்கும். இப்படி பலரையும் குறிப்பிட முடியும்.

உங்களை மிகவும் பாதித்த எழுத்தாளர்கள்...

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் என்னை எனது சிறுவயதில் பாதித்த எழுத்தாளர் ராஜேஷ்குமார்தான். என் அப்பா ராஜேஷ்குமார் நாவல்களைத் தொடர்ந்து விடாமல் வாசிப்பார். அதனை நானும் எடுத்து வாசிக்கத் துவங்கினேன். அந்த நாவல்கள் சுவாரசியமாக நம்மை இழுத்துச் செல்லும். அவரின் க்ரைம் கதை சொல்லும்முறை வாசகனை நாவலை விட்டு விலகாமல் படிக்க வைக்கும், நாவலின் சுவாரசியத்திற்காக அவர் புதிய புதிய தகவல்களை அதன் போக்கில் தந்துகொண்டே இருப்பார். எல்லாவிதமான படைப்புக்கும் உழைப்பு என்பது அவசியம் என்பதை அவரது கதைகளை வாசிக்கும்போது உணர முடியும்.

அந்தத் துவக்க காலம் முடிந்தவுடன் கவிதைகள் வாசித்தேன். பின்னால் கிடைத்த எல்லாமும் வாசித்தேன். திருப்பூர் ராஜாமணி எழுதிய சங்கமம், நிரஞ்சனா எழுதிய நினைவுகள் அழிவதில்லை, அலெக்ஸ் ஹோளியின் ஏழு தலைமுறைகள், ஸ்பெட்டகஸ் போன்றவையே பின்னாளில் என்னைப் புரட்டிப்போட்ட புத்தகங்கள். கீரனூர் ஜாகிர் ராஜா, அர்ஷியா கதைகள் என்னை இன்னும் செறிவூட்டின. அவர்களிடமிருந்து நான் எழுதும் முறையை இன்னும் சரிப்படுத்திக்கொண்டேன்.

உங்களுடைய எழுத்துக்கள் இனி பயணப்படவேண்டிய களம் அல்லது இது பற்றிப் பேசியே ஆக வேண்டும் என எதன் மீதாவது கவனம் இருக்கிறதா?

ஒரு எழுத்தாளன் என்ன எழுத வேண்டும் என்பதைச் சமூகமே தீர்மானிக்கும் அல்லது அவனின் சூழலே முடிவு செய்யும். ஆதவன் தீட்சண்யா கவிதை வரிகளில் சொன்னால் சுகமாக வாழ்ந்துகொண்டு இருப்பவனுக்கு மழை கொண்டாட்டம், ஒழுகும் குடிசையில் வாழ்ந்துகொண்டு இருப்பவனுக்கு அன்றைய இரவு ரணமானது. இதைத்தான் எழுத வேண்டுமென்று நான் எப்போதும் திட்டமிட்டு எழுதுவதில்லை. அதனால்தான் என்னால் வருடத்துக்கு இரண்டு மூன்று கதைகளுக்கு மேல் எழுத முடிவதில்லை. சில காட்சியும் சொல்லும் சம்பவங்களும் நம்மைத் தூங்கவிடாமல் செய்யும் அல்லது நம்மைத் தொந்தரவு செய்துகொண்டே இருக்கும். எதற்குத் தூக்கிச் சுமந்துகொண்டே இருக்க வேண்டும், இறக்கி வைப்போம் என்று ஒரு கணம் மனம் நினைக்கும். அந்தத் துளிர்க்கும் காலமே கதைகள் பிறக்கும் தருணம். அப்படித்தான் எனது எல்லாக் கதைகளும் உள்ளன.

தற்போது "அகல்யாவுக்கும் ரொட்டி" சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. சமகாலத்தில் எதிர்கொண்டுள்ள கொரானா நோய்த் தொற்றால் சமூகத்தில் நிகழ்ந்த பல்வேறு கோர முகங்களைத் தொகுப்பில் உள்ள பல கதைகள் பதிவு செய்கின்றன. பேசியே ஆகவேண்டிய பலது இன்னும் இருக்கிறது. அந்தக் கருக்கள் சிறுகதைக்கான வடிவமாகத் தன்னை உருவாக்கிக்கொள்ளும் காலம் வரை காத்திருக்கிறேன்.

ஒரு எழுத்தாளனாக, படைப்பாளனாக சமூக அக்கறையோடு கோபம் இருக்கும். ஒரு எழுத்தாளனாக, படைப்பாளனாக உங்களின் கோபம் எதன் மீது இருக்கிறது?

பல்வேறு அதிகாரங்களினால் சமகாலத்தில் எளிய மனிதர்கள் சந்திக்கும் துயரங்கள் எழுதி முடிக்க முடியாதளவு குவிந்து கிடக்கின்றன. கொரானா காலத்தில் இந்தியாவில் கண்ட காட்சிகள் மனசாட்சியுள்ள ஒவ்வொரு மனிதனையும் உறங்க விடாமல் சிதைத்திருக்கின்றன. அவற்றை ஒரு எழுத்தாளன் பதிவு செய்யாமல் சென்றால் எப்போதாவது எழுத்து குறித்துச் சுயபரிசீலனை செய்யும்போது "அந்தக் காலத்தில அப்படி என்னதான் எழுதிக் கிழிச்சே" என்ற கேள்வி எழும்போது மண்டையைச் சொரிந்துகொண்டு நிற்க முடியாது. ஒரு படைப்பாளன் அப்படி நிற்கக்கூடாது என்று நினைக்கிறேன்.

எழுதாமல் விட்டது எவ்வளவோ இருக்கலாம்.. ஆனால் எழுதியதும் கொஞ்சமாவது இருக்க வேண்டும். இலக்கியம் என்பது மக்களுக்காகவே. மக்களிடம் பெற்று மக்களிடமே திருப்பித் தருவதே. அப்படி தரும்போது அதில் அவர்களின் வாழ்வியல் கொஞ்சமாவது இருக்க வேண்டும். புனைவு என்ற பெயரில் மக்களுக்குச் சம்பந்தமே இல்லாததை எழுதி இலக்கியம் என்று சொல்வது நியாயமற்றது.

மனிதர்களைச் சமமாக நடத்தாத சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் ஒடுக்குமுறை செய்துகொண்டு இருக்கும் நம் சமூக அமைப்பை எவ்வளவு நாட்கள் காப்பாற்றி வைக்கப்போகிறோம். காப்பாற்ற காப்பாற்ற அது தன் தன்மையை மாற்றிக்கொள்ளாது.. மேலும் மேலும் தன்னைக் கெட்டிப்படுத்திக்கொள்ளும்.

அந்த இயங்குதலே படைப்பாளியாகும் தருணம். தற்போது முகநூல் வந்ததினால் பலரும் அவர்களுக்குத் தெரிந்ததை எழுதிப் பார்க்கிறார்கள். தப்போ சரியோ முதலில் அவனை எழுத அனுமதிக்க வேண்டும். பின்பு அதனை மேம்படுத்த உதவி செய்ய வேண்டும்.

பள்ளிப்பருவத்தில் சரியாகப் படிப்பு வராத மாணவராக இருந்த கரீம் தமிழ் இலக்கிய உலகில் தனது படைப்புகள் மூலம் உச்சம் தொட்டிருக்கிறார். இதை எப்படி பார்க்கிறீர்கள்?

உச்சம் தொட்டிருக்கிறேன் என்பது உச்ச மிகை. நானே அதனை ஏற்க மாட்டேன். அப்படி தமிழ் இலக்கியத்தில் உச்சம் தொட முடியாது. கவனம் பெறலாம் அவ்வளவுதான். ஒருவேளை நான் கவனம் பெற்றதுக்குக் காரணம் என்று யோசித்தால் இதுவரை யாரும் எழுதாத சிலவற்றை (தாழிடப்பட்ட கதவுகள்) எழுதியதனால் இருக்கலாம். ஆனால் ஒன்றை மட்டுமே வைத்துக்கொண்டு நீண்ட காலத்துக்குப் படகை இயக்க முடியாது.

தாழிடப்பட்ட கதவுகள் எதிர்பார்த்த அளவைத் தாண்டி தமிழ் இலக்கியத்தில் தனக்கான ஒரு இடத்தைத் தனித்து உருவாக்கிக் கொண்டதினால் எனக்குத் தெரிந்த அல்லது பார்த்த, பார்த்துக்கொண்டு இருக்கும் சமகாலத்தை எழுதுகிறேன். சமகாலத்தை எழுதுவது கடினம் என்றும் அதில் படைப்பு உருவாக்கம் இருக்காது என்றும் கூறப்படும் பழைய சொற்களைக் கொஞ்சம் கலைத்துப் போடுகிறேன். மற்றபடி தமிழ் இலக்கியத்தில் பல மாஸ்டர்கள் செய்ததை எல்லாம் ஒப்பிடும்போது பெரியதாக ஒன்றுமில்லை என்றே நினைக்கிறேன்.

மற்றபடி தனிப்பட்ட முறையில் யாரின் மீதும் கோபம் கொள்ள வேண்டியது இல்லை. அன்பைத் தாண்டி வேறு பெரியது என்னவாக இருக்க முடியும்.

உங்களுக்குச் சிறுகதை எழுத வேண்டும் என்ற ஆவல் எதனால் ஏற்பட்டது?

எந்த எழுத்தாளனும் அடுத்த வாரம் புதன்கிழமையிலிருந்து எழுத்தாளராகப்போகிறேன் என்று அறிவித்துவிட்டு எழுத வருவதில்லை. அது படைப்புமனம் சார்ந்த சூழ்நிலை. அவனுக்குள் இருக்கும் படைப்புமனம் எதாவது ஒன்றின் மீது பெரும் தொந்தரவு செய்துகொண்டே இருக்கும். அதனை ஏன் நாமும் சிறுகதை வடிவமாக அல்லது கவிதையாக எழுதிப் பார்க்கக்கூடாது என்ற எண்ணம் வரும்போது அந்தக் கரு தன்னை எழுதச் சொல்லி அவனை இயக்கும்.

நாம் எல்லோரும் எதிர்கொண்டுள்ள எதார்த்தங்களைச் சொல்லும் சிறுகதைகளாக "இருண்டகாலக் கதைகள்" எனும் உங்கள் தொகுப்பு இருக்கிறது. இப்படியான தொகுப்பு கொண்டுவர உங்களுக்கு எங்கிருந்து உத்வேகம் கிடைத்தது?

சமகாலத்தை எழுதுவது என்பது ஏழு கடல் ஏழு மலை தாண்டி கிளியின் வயிற்றுக்குள் இருந்து கண்டெடுக்கும் ரகசியச் சாவி அல்ல. சமகாலத்தை எழுத வேண்டும் என்ற பிரக்ஞை

படைப்பாளனுக்கு இருக்க வேண்டும். அதனை எழுதாமல் போவது தாண்டித் தப்பித்துப் போவதாகும். அதனை எழுதாததின் மூலம் யாருக்கும் சங்கடம் வராமல் நடுநிலையாளர் என்ற பெயரைப் பெற விரும்புகின்றனர். அடுத்துச் சமகாலத்தை எழுதினால் அதில் படைப்பு அழகியல் இருக்காது என்ற சொத்தை வாதமும் இருக்கிறது. இவற்றை முறியடிக்க வேண்டும் என்ற விருப்பத்தின் பெயரிலும், வாழும்போதே எழுதப்படும் சமகாலம் எல்லோராலும் கவனிக்கப்படும் கொண்டாடப்படும் என்பதைப் பதிவு செய்வதற்காகவும் தமிழகத்தின் முக்கியமான பதினேழு எழுத்தாளர்களின் பங்களிப்போடு "இருண்ட காலக் கதைகள்" தொகுப்பைக் கொண்டு வந்தேன். நினைத்தபடியே கவனிக்கப்பட்ட தொகுப்பானது மகிழ்ச்சி.

மக்கள் சமகாலத்தில் சந்தித்துவரும் எல்லாத் துயரங்களும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை எல்லா நிலப்பரப்புகளும் அந்தத் தொகுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதுதான் தொகுப்பின் சிறப்பு என்று நினைக்கிறேன். அநேகமாக இந்தப் பொதுத் தன்மையில் வந்த ஒரே தொகுப்பு இந்திய அளவில் இதுவாகத்தான் இருக்கும். இருக்க வேண்டுமென்ற உள்கிடக்கையும் எனக்கு இருந்ததாலும் கொண்டு வந்தேன்.

உங்களின் தாழிடப்பட்ட கதவுகள் மிகுந்த கவனம் பெற்ற, விவாதிக்கப்பட்ட சிறுகதைத் தொகுப்பு. வலி நிறைந்த ஆவணமாக இன்றும் பேசப்படும் இதற்கான ஆரம்ப விதை எங்கிருந்து உருவானது?

கோவையில் இஸ்லாமியர்கள் மீது நடத்தப்பட்ட கலவரமும் கொலைகளும் அதனைத் தொடர்ந்து நடந்த குண்டு வெடிப்புகளும் என்று இரண்டு நிகழ்வுகளிலும் எந்தத் தொடர்பும் இல்லாத எளிய மக்களே பாதிக்கப்பட்டார்கள். அதில் நேரடி சாட்சியாக எங்கள் குடும்பமே இருந்தது. பல பெரும் ஜாம்பவான்கள் இருந்தும் அதனைப் பிர்தோஷ் ராஜ்குமார் என்ற இஸ்லாமிய எழுத்தாளரைத் தவிர வேறு யாரும் பதிவு செய்யவில்லை. எனக்குத் தெரிந்த ஏராளமான சம்பவங்களில் சிலதை மட்டுமே கதைகளாக்கி உள்ளேன்.

கலவரத்தின்போது எங்கள் வீட்டில் மட்டும் அப்போது பதினெட்டு பேர் இருந்தார்கள். பெரும்பாலும் உறவினர்கள். அவர்கள் குடியிருந்த வீட்டிலிருந்து விரட்டப்பட்டவர்களாக இருந்தார்கள். அரை லிட்டர் பாலில் இருபது பேர் டீ குடித்த காலமது. இந்த வடுக்களைத்தான் பின்னாளில் நான் கதைகளாக எழுதினேன். குறிப்பாக பிர்தோஷ் ராஜ்குமார் புத்தகத்திற்கு ஆதவன் தீட்சண்யா எழுதிய முன்னுரை என்னை எனக்குத் தெரிந்த செய்திகளைக் கதைகளாக்கத் தூண்டியது.

இஸ்லாமியக் குடும்பங்களில் பயன்படுத்தப்படும் மொழியைக் கொண்டு சிறுபான்மைச் சமூகத்தின் வலிநிறைந்த ரணத்தைப் படைப்புகளாக உணர்வுகளோடு பதிவு செய்ய எது காரணமாக இருந்தது?

எனக்கு முன்பே தோப்பில் முகம்மது மீரான், களந்தை பீர் முகம்மது, கீரனூர் ஜாகிர் ராஜா, சல்மா, அர்ஷியா, மீரான் முகம்மது போன்ற பலரும் இஸ்லாமியப் பின்புல வாழ்நிலைகளைக் கதைகளாக்கி உள்ளனர். அந்த மக்களின் வாழ்வை அவர்களது பண்பாட்டு மொழியிலிருந்து எழுதினால்தான் அது படைப்புக்கு நெருக்கமாக இருக்கும். அதனால்தான் அவர்களின் சொல்லாடல்களைக் கதைக்குள் பதிவு செய்கிறேன். ஒரு கதையை எப்படிச் சொன்னால் சரியாக இருக்குமென்று எனக்குள்ளேயே எழுதிப் பார்க்கிறேன். பிறகுதான் கதையாக எழுதுகிறேன். அதனால் அது உணர்வோடு இருக்கலாம்.

சிதார் மரத்தில் இலைகள் பூப்பதில்லை எனும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள "வெக்கை" எனும் சிறுகதையில் பணியில் இருக்கும் பெண் போலீசார் படும் அவதிகளையும் வலிகளையும் பதிவு செய்து இருப்பீர்கள். தமிழக அரசு பெண் போலீசார் பாதுகாப்பிற்காகச் சாலையின் இருபுறங்களிலும் இனி நிறுத்தப்பட மாட்டார்கள் எனும் அறிவிப்பை வெளியிட்டு தற்போது அவர்கள் நிறுத்தப்படுவதில்லை. இது பற்றித் தமிழக அரசின் அறிவிப்பு வந்தபோது உங்கள் மனநிலை எவ்வாறு இருந்தது?

அன்றைய தினம் பலரும் என் கதை குறித்து

முகநூலில் தொடர்ச்சியாக எழுதினார்கள். பலரும் அழைத்துப் பேசினார்கள். உண்மையாகவே அது மகிழ்ச்சியாக இருந்தது. காலசித்தனும் இதைப்போலவே ஒரு கதையை எழுதியுள்ளார். இயக்குநர் புஷ்பராஜன் குறும்படம் என்று பலரின் பங்களிப்பும் இதற்குள் இருக்கிறது. அரசின் முடிவுக்குப் பல காரணங்களில் படைப்பும் ஒரு காரணம், அவ்வளவே.

உங்கள் படைப்புகள் அனைத்தும் புனைவுகளாக இல்லாமல், சமகாலத்தை அதன் நிஜத்தைத் தோலுரிப்பதாக உள்ளன. சமகாலத்தைப் பற்றிக் கதையாக மாற்றுவதில் சவால்கள் இருக்கின்றனவா? எப்படி எதிர்கொள்கிறீர்கள்?

சமகாலத்தை இருபது வருடங்கள் ஊறப் போட்டு எழுத வேண்டியது இல்லை. மூன்று மாத மெனக்கெடுதல் மூலம் அதுகுறித்தே அசை போட்டுக்கொண்டு இருந்தால் அது கதையாக மாறும். நிச்சயம் அதற்கு உழைப்பைச் செலுத்த வேண்டும். ஒரு கருவின் பல்வேறு கூறுகளை மிகச் சரியாக உள்வாங்கினால் படைப்பு நம்மைக் கைவிடாது.

எல்லோராலும் கைவிடப்பட்ட மனிதர்களாக எளிய மனிதர்களே எப்போதும் இருக்கிறார்கள். இலக்கியத்திலும் கைவிட்டால் அவர்களை எங்குதான் பதிவு செய்வோம். ஆனாலும் நல்ல செய்தியாகத் தமிழ்ச் சிறுகதையில் பெரும்பாலான எழுத்தாளர்கள் எளிய மனிதர்களை எழுதியிருக்கிறார்கள் / எழுதுகிறார்கள். புதுமைப்பித்தன், அழகிரிசாமி, கிரா, தமிழ்ச்செல்வன், கந்தர்வன் என அவர்களின் நீண்ட தொடர்ச்சியில்தான் நானும்.

"அகல்யாவுக்கும் ஒரு ரொட்டி" எனும் சிறுகதைத் தொகுப்பில் "கானல்நீர் உருவங்கள்" கதை முக்கியமானது. அதில் வளர்ப்பு விலங்குகள் கைவிடப்பட்ட நிலையை நுண்ணியமாகப் பதிவு செய்து, விளிம்பு நிலை மக்களின் பசி நிவாரணியாக ரொட்டியும் பன்னும் மாறியிருக்கும் நிஜத்தைக் காட்சிப்படுத்தியிருப்பீர்கள். இஸ்லாமியப் பெண் நிலை குறித்தும் பேசியிருக்கிறீர்கள். இப்படி எளிய மனிதர்களின் வாழ்வியலை உங்கள் கதைகள் தொடர்ந்து பேசுகின்றனவே..

ஒரு படைப்பாளன் எல்லாமுமாக இருக்க வேண்டும். பெண்ணாக, குழந்தையாக, யானையாக, பறவையாக, மரமாக, செடியாக எல்லாமுமாக இருந்தால் மட்டுமே அதனதன் வலியைப் புரிந்துகொள்ள முடியும்.

எல்லா மதங்களிலும் இருக்கும் அதே வழக்கம் இஸ்லாம் சமூகத்திலும் இருக்கிறது. பெண்களை இரண்டாம் தரப்பாகப் பார்க்கும் பார்வை. அதனால்தான் ஜமாத்தில் அவர்கள் அனுமதிக்கப்படுவது இல்லை. கடவுள் ஆண் பெண் இருவரையும் சமமாகப் படைத்தான் என்றால் இருவரையும் சமமாக நடத்துவதே அழகு. கோவில் கமிட்டிகளில் பெண்கள் பிரதிநிதித்துவம் இல்லை. அதே போலத் தேவாலயத்திலும். இவை எல்லாவற்றையும் கேள்விகள் கேட்பதன் மூலம் அவர்களுக்கும் சில திறப்புகள் வரலாம்.

‘தாழிடப்பட்ட கதவுகள்’ தொகுப்பு வந்தபோது அதில் உள்ள பல கதைகளை இஸ்லாமியத் தலைவர்கள் நண்பர்கள் பேசினார்கள். ஆனால் அந்த “முதல் கேள்வி” என்ற கதையை மட்டும் தாண்டிப் போனார்கள். அது இயல்பாக நடந்ததாகச் சொல்ல முடியாது. அதைக் குறித்துப் பேசிச் சர்ச்சை ஏற்படுத்த வேண்டாம் என்ற கவனத் தவிர்ப்பே. “தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள்

கொடுக்கப்படும்." நான் முதல் கல்லை எறிந்துள்ளேன். தொடர்ந்து பல கற்கள் வரலாம், வந்தால் மகிழ்ச்சி.

ஒரு வழக்கறிஞர், சமூக செயற்பாட்டாளர், தமுஎச வின் மாநிலக்குழு உறுப்பினர் என இப்படி இயங்கிக்கொண்டு திடகாத்திரமான படைப்புகளையும் உங்களால் நேர்த்தியாகத் தர முடிகிறது. அதற்கான உத்வேகத்தை எங்கிருந்து பெறுகிறீர்கள்?

வாழும் காலத்திற்குள் நம்மால் முடிந்ததைச் செய்துவிட வேண்டும் என்ற பிரக்ஞை, நண்பர்கள், குடும்பத்தினர் கைகொடுப்பு, வாசிப்பு, அமைப்புத் தோழர்களின் தொடர் விசாரிப்பு. முக்கியமாகக் கண்முன்னால் நடந்துவரும் பல்வேறு கொடுஞ்செயல்கள் எனக்குள் இருக்கும் ரௌத்திரத்தைக் கிளப்பிவிடுகின்றன. எழுதும் மனநிலை இல்லை என்று சொல்வதைக்கூட ஏற்கலாம்.. நேரமே இல்லை என்று சொன்னால் எழுத நேரம் ஒதுக்கவில்லை என்றே பொருள். கடுமையான நேர நெருக்கடியில் அதனையும் செய்கிறேன்.

தமிழில் உங்களால் மறக்க முடியாத சிறுகதைகள் அல்லது உங்களைப் பாதித்த சிறுகதைகள் பற்றிக் கூறுங்கள்?

மறக்கமுடியாத சிறுகதைகள் என்றால் நான் முன்பே குறிப்பிட்ட பலரது சிறுகதைகளும் பாதித்ததுதான். அந்த நீண்ட பட்டியலில் அ.முத்துலிங்கம் அவர்களின் கதைத் தலைப்பு நினைவில் இல்லை. உப்பைக் கடன் வாங்கப் போகும் தகப்பன் இல்லாத ஒரு சிறுவன் கதை, உதயசங்கரின் துண்டிக்கப்பட்ட தலையில் சூடிய ரோஜா மலர். ஆபிதீனின் "உயிர்த்தலம்" முக்கியமான தொகுப்பு. அவருக்கான நிறைவான அங்கீகாரத்தை இன்னும் தமிழ் இலக்கியம் கொடுக்கவில்லை என்றே நினைக்கிறேன். அழவைத்த பாரதி கிருஷ்ணகுமாரின் அப்பத்தா, சல்மாவின் குழப்பத்தின் சுற்றுப்பாதை, வெண்ணிலாவின் பிருந்தாவும் இளம்பருவத்து ஆண்களும் தொகுப்பு, கவின்மலரின் இரவில் கரையும் நிழல்கள், ஜி.காரல் மார்க்ஸ்ஸின் ஆட்டம், நரனின் கதைகள், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய லண்டன் 1995 தொகுப்பில் வந்த பரசுராம், எஸ்.சங்கரநாராயணன் எழுதிய வம்சம், சா.பாலமுருகனின் அமைதியாகத் தூங்கும் சட்லஜ் நதி... இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

ஒரு எழுத்தாளராக உங்கள் பார்வையில் ஒரு சிறுகதை என்ன செய்யும்?

ஒரு சிறுகதைக்கு ஒரு மனிதனைப் புரட்டிப்போடும் வல்லமை உண்டு. அழ வைக்கும், சிரிக்க வைக்கும், கோபப்பட வைக்கும், மனிதனாக்கும். நான் சிறுகதை எழுத வேண்டுமென்ற ஆவலை எனக்குள் கிளப்பியது திருவேங்கடம் என்ற கோவையைச் சேர்ந்த விவசாய சங்கத்

தோழரின் பேச்சே. சி.ஞானபாரதி அவர்களின் ஒரு சொட்டுக் கண்ணீர்க் கதையை என்னிடம் சொல்லும்போது அந்த வயதான மனிதர் தேம்பித் தேம்பி அழுதார். கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அவர்போக்கில் கதையைச் சொல்லிக்கொண்டே இருந்தார். சிறுகதையின் பலத்தை அப்போதுதான் என் கண்ணால் பார்த்தேன். அப்போதுதான் நானும் சிறுகதை எழுத வேண்டுமென்ற ஆசை துளிர்த்தது. தமிழ் இலக்கியத்தில் சிறுகதை உலக தரத்தில் உள்ளது. பல மாஸ்டர்களும் உண்டு.

தற்போது என்ன எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்?

தற்போது நாவல் எழுதி முடித்துள்ளேன். "மூன்றாவதடைப்பு முகாம்" அதுதான் நாவலின் தலைப்பு. தற்போது இருக்கும் ஒன்றிய அரசின் இதே போக்கு எங்கு போய் நிற்கும் என்பது குறித்து இந்த ஏழு ஆண்டுகளில் எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்திருப்பார்கள். அதைத்தான் நாவல் பதிவு செய்கிறது. நாவல் 1800 துவங்கி சமகாலம் வந்து எதிர்காலம் நோக்கிப் போகும். சமூக அரசியலைப் பேசும் நாவல். இந்திய விடுதலைப் போராட்டத்தில் இன்னுயிர் நீத்த தியாகிகளின் வரலாற்றைப் பேசுகிறது, கருத்துரிமை நசுக்கப்படும் சமகாலத்தைப் பேசி எதிர்காலம் நோக்கி நகர்கிறது. நாவல் வெளியானதற்குப் பின்பு என்னாகுமென்று தெரியாது. ஆனால் சொல்லப்படவேண்டியதை வரலாற்றின் ஆதாரங்களோடு சொல்லி உள்ளேன். எதிர்காலத்தில் குடியுரிமை பறிக்கப்படும் எளிய மனிதர்களின் துயரங்களைப் பேசுகிறது.

இன்று சிறுகதை எழுதும் வளரும் படைப்பாளிகளுக்கு அல்லது எழுத்தாளர்கள் மற்றும் இலக்கியவாதிகளுக்கு என்ன வேண்டுகோள் வைப்பீர்கள்?

சொல்லுமளவுக்கு நான் ஒன்றும் எல்லாம் கரைத்துக் குடித்த ஆள் அல்ல. நானே ஒரு தத்தி நடக்கும் பிள்ளைதான். புதியதாக எழுதுபவர்கள் சமூகத்தை உற்று நோக்குங்கள், மனிதர்களை நேசியுங்கள், சாதி மதம் மொழி உயிரினம் தாண்டி எல்லோரையும் நேசியுங்கள். அவர்களை / அவைகளை உற்று நோக்குங்கள், நுட்பங்களை உள்வாங்குங்கள், அவைகளைக் கதையாக்குங்கள். எழுத எழுத எழுத்துக்கள் இன்னும் வடிவமாகும். இலக்கிய அமைப்புகள் நபர்கள் தாண்டி படைப்பை மட்டும் முன்னிறுத்தி மையப்படுத்தி உரையாடுங்கள். ■

கவிச்சித்திரம்

கவி : சந்துரு
சித்திரம் : அன்பழகன்

கடைசி நேர இசைக்குறிப்பு

வேட்டை நாயின்
உயர்த்திய காதுகளுடன்
உன்னிப்பாய்ப் பிரச்சினைகளை
கவனித்தே கடக்கிறார்கள் மனிதர்கள்
எனினும்
முன் அனுமதிக்குக் காத்திராமல்
முயலின் காதுகளைப்போல்
அவர்களை லாவகமாய்ப் பிடித்து
தூக்கிச்செல்கிறது காலம்.
.
சர்ப்பத்தின் மூச்சுடன்
பூனையின் வாலென ஆட்டி
எச்சரிக்கை செய்தும்
பாழும் கிணற்றில் தவறிவிழுந்த ஆசைகளை
பாதாள கொலுசுகள் போட்டு
மீட்டெடுக்கத்தான் எல்லோரும்
அதிகமாய்ப் போராடுகிறார்கள்....
.
தழும்பேறிக் கிடக்கும்
சிலரது கன்னங்களை
அருவருப்பாய்ப் பார்க்க வேண்டாம்
ஒருவேளை அவை
யூதாஸின் அழுந்தக்கொடுத்த
முத்தங்களால் விளைந்திருக்கலாம்
.
எச்சில் கால்களுடன்
ஜன்னலில் அமரும் காகங்களைப்பற்றி
கவலை கொள்ளாதவர்கள்தான்
எச்சமிட்டுச்சென்ற பறவைகளையே
நினைத்துப் புழுங்குகிறார்கள்...
.
பணத்துக்கான ஒபாரிப் பாடலில்
அடையாளமற்று அடித்துச்செல்லப்படுவது
உண்மையின் அழுகுரல் மட்டுமே
.
எந்த இசைக்கலைஞனாலும்
வாசிக்க முடியாத
மரணத்தின் கடைசி நேர
இசைக்குறிப்பைப் போல்
எல்லோரும் பாதுகாப்பாய்
ஒளித்து வைத்திருக்கும்
ஒரு சில ரகசியங்கள் போல்
அவ்வளவு எளிதாய் இருப்பதில்லை
வாழ்வின் சில பிரச்சினைகளை
எதிர்கொள்வதென்பது...

தொடர் - 6

● மு.முருகேஷ்

கவிதைக்குள் கலந்திருக்கும் கதை



அப்போது நான் இரண்டாம் வகுப்போ, மூன்றாம் வகுப்போதான் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் பள்ளியில் நடைபெறவிருந்த சுதந்திர தின விழாவில் பள்ளிக்குழந்தைகள் பங்கேற்கும் பாடலுக்கான பயிற்சியை அளித்துக்கொண்டிருந்தார் மேரி டீச்சர். எதைச் சொன்னாலும் வெறும் வாய் வார்த்தையோடு இல்லாமல், தன் உடல் மொழியாலும் சொல்பவர் மேரி டீச்சர். அவர் பாடல் பயிற்சியளிப்பதை நான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கையில், எங்கள் வகுப்பாசிரியர் கமலா டீச்சர் என்னை அழைத்தார்.

“சுதந்திர தின விழாவிலே சுதந்திரப் போராட்ட வீரர் யாராவது ஒருத்தரைப் பத்தி நீயும் ரெண்டு நிமிசம் பேசணும்...” என்றார். அவர் சொல்லி முடித்தபோது, என் கால்கள் தரையில் இல்லை. ‘நானா பேசப் போகிறேன்..?’, ‘கமலா டீச்சர் சொன்னது என்னிடம்தானா..?’ நம்ப முடியவில்லை.

வீட்டிற்கு வந்ததும் அப்பாவிடம் இதைச் சொன்னேன். ‘சரி...’ என்று சொன்னவர், அடுத்த நாளே நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பற்றி, கோடு போட்ட தாளொன்றில், சேர்த்தெழுத்தில் இரண்டு பக்கங்களில் எழுதித் தந்தார். அப்பாவின் கையெழுத்தே எனக்குப் பிடித்த முதல் ஓவியம்.

‘கத்தி யின்றி ரத்த மின்றி

யுத்த மொன்று வருகுது

சத்தி யத்தின் நித்தி யத்தை

நம்பும் யாரும் சேருவீர்'

எனும் நாமக்கல் கவிஞரின் பாடல் வரிகளோடு அந்த உரையை எழுதியிருந்தார். அப்பாவும் சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்று, சிறைக்குச் சென்ற காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்தவர் என்பதால், மிகவும் சுருக்கமாகவும் உணர்வுப்பூர்வமாகவும் அந்த உரையை எழுதியிருந்தார்.

சுதந்திர தின விழாவில், 'கத்தி யின்றி ரத்த மின்றி' எனும் பாடல் வரிகளை இருமுறை உரத்த குரலில் சொன்னதுமே, பலமான கரவொலி எழுந்தது. இரண்டு நிமிடங்களில் பேசி முடித்தேன். இல்லையில்லை... அடைமழை போல் கொட்டித் தீர்த்தேன். அந்த உரைக்கு 'தமிழ் வளர்த்த நல்லறிஞர்கள்' எனும் நூலை ஆசிரியர் எனக்குப் பரிசாகத் தந்தார். முதல் கவிதை, முதல் காதல், முதல் முத்தம் போலவே முதல் பரிசுப் புத்தகமும் என்னால் மறக்கவே முடியாததே!

புத்தகம் வாசிக்கத் தொடங்கிய பிறகு, என் வாசிப்பு பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை... எனத் தொடர்ந்தது. நாமக்கல் கவிஞரின் பாடல்கள் சிலவற்றைப் பாடப் புத்தகத்தில் படித்ததோடு சரி. இதற்கிடையில், இலக்கியக் கூட்டங்களில் பேசும்போது பலரும் சொல்லும் புகழ்பெற்ற இந்தப் பாடல் வரிகளுக்குச் சொந்தக்காரர் நாமக்கல் கவிஞர் என்பதைப் பின்புதான் அறிந்துகொண்டேன்.

'தமிழன் என்று சொல்லடா;

தலை நிமிர்ந்து நில்லடா...'

'தமிழன் என்றோர் இனமுண்டு;

தனியே அவருக்கோர் குணமுண்டு.

அமிழ்தம் அவரது மொழியாம்;

அன்பே அவரது வழியாம்...'

இருபதாண்டுகளுக்கு முன்னால் காந்தியைப் பற்றிப் பேசுவதற்கான குறிப்புகளைத் தயார் செய்துகொண்டிருந்தேன். 'வாழ்க நீ எம்மான்!' என்று காந்தி பற்றி பாரதி எழுதியிருந்த பாடல், எனக்கு மிகவும் பிடித்த பாடல். அப்போது எழுத்தாளர் கல்கி சொன்ன வரியொன்று என்னை ஈர்த்தது.

"திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது. காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது."

பாரதியைப் போலக் காந்தியைப் புகழ்ந்தோதிய தமிழ்க் கவிஞர்கள் யாருமில்லையென்றே அதுவரை நான் எண்ணியிருந்தேன். கல்கி சொன்ன கருத்து என்னை யோசிக்க வைத்தது.

காந்தியைக் கடவுளாக எண்ணி வழிபட்டதோடு, காந்தியின் கொள்கைகளான சத்தியம், அகிம்சை ஆகியவைகளினால்தான் நம் நாட்டிற்கு விடுதலை வாங்கித்தர முடியுமென்றும் உறுதியாக நம்பியவர் நாமக்கல் கவிஞர். இந்தியக் கவிகளிலேயே காந்தியைப் பற்றி அதிகமாக எழுதிய - நேசித்த கவிஞராக நாமக்கல் கவிஞர் விளங்கினார் என்பது எனக்குப் புதிய செய்தியாக இருந்தது. பிறகுதான், நாமக்கல் கவிஞரின் பக்கமாக என் பார்வை திரும்பியது.

ஈரோட்டிற்கும் கரூருக்கும் இடையேயுள்ள ஊர் மோகனூர். அவ்வூரில் தலைமைக் காவலராக இருந்த வெங்கட்டராமன் - அம்மணி அம்மாள் தம்பதிகளுக்கு ஏழு பெண் குழந்தைகள். இராமேஸ்வரம் சென்று ஆண் குழந்தை வேண்டுமென வேண்டி வர, 1888ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் தேதி அன்று எட்டாவதாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு இராமலிங்கம் எனப் பெயரிட்டனர்.

தனது மகன் இராமலிங்கத்திற்கு இதிகாச புராணக் கதைகளைச் சொல்லி வளர்த்தார் அம்மணி அம்மாள். ‘ஒருபோதும் பொய் பேசக் கூடாது’ ‘பிறர் நம்மைப் பார்த்து இவன் பொல்லாதவன் என்று சொல்லக் கூடாது’ என்பதையே சொல்லிச்சொல்லி வளர்த்தார்.

நாமக்கல்லில் ஆரம்பக் கல்வி பயின்ற இராமலிங்கத்தின் தந்தைக்குப் பணி மாறுதல் கோவைக்குக் கிடைக்க, அங்கு சென்று உயர்நிலைக் கல்வியைத் தொடர்ந்தார். கணக்குப் பாடமென்றாலே கசந்த இராமலிங்கத்திற்கு, ஓவியம் வரைவதில் மிகுந்த நாட்டம் உண்டானது. பாடமெழுதும் சிலேட்டை ஓவியங்களால் நிறைத்தார்.



திருச்சியில் கல்லூரியொன்றில் படிக்கிறபொழுது, கல்லூரித் தலைவரான இ.ஹெச்.எல்லியட் என்பவரை ஓவியமாக வரைந்தளித்தார் இராமலிங்கம். ஓவியத்தைக் கண்டு மகிழ்ந்த எல்லியட், தன்னிடமிருந்த தங்கக் குழாயும் மூடியும் உள்ள பென்சிலொன்றைப் பரிசளித்தார். ஆங்கிலேயரான எல்லியட்டின் முயற்சியில் இராமலிங்கத்தின் ஓவியங்கள் நல்ல விலைக்கு விற்றன.

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் 1908ஆம் ஆண்டில் படித்துக்கொண்டிருந்தபோது, காது வலி உண்டாகி, சிகிச்சையளித்தும் பலனின்றி, தனது கேட்கும் திறனை இழந்தார் இராமலிங்கம். அடுத்த ஆண்டே, அத்தை மகள் முத்தம்மாளை இவருக்கு மணம் முடித்து வைத்தனர். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே இராமலிங்கத்திற்கு நாட்டில் நடைபெற்று வரும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு உண்டானது.

தன்னைப் போலவே மகனையும் காவல்துறைப் பணியில் சேர்க்க விரும்பிய தந்தையின் எண்ணம் ஈடேறாமல் போகவே, நாமக்கல் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் சேர்த்துவிட, அங்கு பணி செய்ய விரும்பாமல் வெளியேறினார் இராமலிங்கம். பிறகு, நாமக்கல் தொடக்கப் பள்ளியொன்றில் ஆசிரியரானார். ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வந்த பாலகங்காதர திலகரை ஆதரித்தும், தேச விடுதலை பற்றியும் மாணவர்களிடம் பேசவே, தலைமையாசிரியரோடு கருத்து வேறுபாடு உண்டாகி, அந்தப் பணியை விட்டும் வெளியேறினார்.

கரூரிலுள்ள தனது சகோதரி ஒருவரின் வீட்டில் இருந்த காலத்தில், காங்கிரஸ் இயக்கத்தோடு தொடர்பு உண்டானது. திருச்சி மாவட்டக் காங்கிரசின் செயலாளராக 1914இல் பொறுப்பேற்றார். கரூர் வட்டக் காங்கிரஸ் தலைவராகவும், பின்னர், நாமக்கல் காங்கிரசின் தலைவராகவும் (1921-1930) இருந்தார். கரூர் அமராவதி நதிக்கரையில் அரசியல் கூட்டங்களை ஏற்பாடு செய்து நடத்தினார்.

தமிழறிஞர் பா.வே.மாணிக்கத்தின் அழைப்பின் பேரில் 1912இல் டில்லி சென்றார். அங்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் ஓவியத்தை வரைந்து பரிசளிக்க, மன்னர் குடும்பத்தினர் மகிழ்ந்து, தங்கப் பதக்கமொன்றை இராமலிங்கத்திற்கு அணிவித்தனர். ஓவியத்தொழிலில் நல்ல வருவாய் வந்தபோதும், இந்திய விடுதலைக்கான அரசியல் பணியிலும், கவி பாடும் ஆற்றலிலுமே இவரது மனம் ஈடுபட்டது.

சிறுவனாக இருந்தபோது, தெருக்கூத்துப் பாடல்களைக் கேட்டே கவிதை பாடும் ஆற்றலை வளர்த்துக்கொண்டார் இராமலிங்கம். பாரதியாரின் பாடல்கள் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர், ஆரம்ப காலங்களில் எஸ். ஜி.கிட்டப்பா, அவ்வை சண்முகம் ஆகியோரின் நாடகக் குழுக்களுக்குப் பாடல்களை எழுதித் தந்தார். பாரதியாரின் நண்பரான வேங்கட கிருஷ்ண ஐயர் மூலமாகக் கானாடுகாத்தானில் 1920இல் பாரதியாரைச் சந்தித்தார்.

'தம்மரசைப் பிறர் ஆளவிட்டுவிட்டுத் / தாம்வணங்கிக் கைகட்டி நின்ற பேரும்' என்ற பாடலை இராமலிங்கம் பாட, மனம் மகிழ்ந்த பாரதியோ, "பலே, பாண்டியா! பிள்ளை நீர் ஒரு புலவன்; ஐயமில்லை" என்று பாராட்டினார்.

1930ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று வேதாரண்யத்தில் கடலில் உப்பை அள்ளும் உப்பு சத்தியாகிரகப் போராட்டம் இராஜாஜியின் தலைமையில் நடைபெற்றது. அப்போதுதான், 'கத்தியின்றி ரத்தமின்றி...' எனும் புகழ்பெற்ற பாடலை நாமக்கல் கவிஞர் எழுதினார். இந்தப் போராட்டத்தில் கைதாகி, ஓராண்டுக் காலம் சிறையிலிருந்தார். சிறைக் கைதிகளுக்குத் திருக்குறள் பாடம் நடத்தினார். திருக்குறளுக்கு அற்புதமானதொரு உரையையும் எழுதினார். தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, கதர் அபிவிருத்தி, கைத்தொழில் வளர்ச்சி, தாய்மொழி கற்றல் ஆகிய காந்தியக் கொள்கைகளை வலியுறுத்தி எழுதிய நாமக்கல்லாரின் பாடல்கள் காங்கிரஸ் மேடைகளிலெல்லாம் ஒலித்தன.

நாமக்கல் கவிஞர் 1954ஆம் ஆண்டு எழுதிய 'மலைக்கள்ளன்' புதினம், திரைப்படமானது. எம்.ஜி.ஆர், பானுமதி நடித்த இப்படம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. 'தமிழன் என்றொரு இனமுண்டு' என்ற பாடல் இப்படத்தில் இடம்பெற்று, தமிழர் உதடுகள்தோறும் உச்சரிக்கப்பட்டது.

இசைப் பாடல்கள், நாவல்கள், கட்டுரைகள், நாடகங்கள், வரலாறு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு, தன் வரலாறு என 50க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். மூன்று பாகங்களாக எழுதப்பட்ட 'என் கதை' எனும் சுயசரிதை நூலும், 'காந்தி அஞ்சலி' எனும் கவிதை நூலும் இன்றளவும் வாசகர்களால் பெரிதும் வாசிக்கப்படும் நூல்களாக உள்ளன.

1949இல் ஆகஸ்ட் 15 சுதந்திரத் திருநாளன்று சென்னை மாகாண முதல் அரசவைக் கவிஞராகப் பதவியேற்றார். 1954இல் சாகித்ய அகாதமி குழு உறுப்பினராகவும், 1956லும், 1962லும் தமிழக சட்ட மேலவை உறுப்பினராகவும் இருந்தார். 'பத்மபூஷன்' விருதினை 1971இல் ஒன்றிய அரசு இவருக்கு வழங்கியது.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்

எத்தொழில் எதுவும் தெரியாமல்

இருந்திடல் உனக்கே சரியாமோ?'

என்றெழுதிய நாமக்கல் கவிஞர், காந்தியைப் பற்றி நிறைய பாடல்களை எழுதியுள்ளார். அவற்றைத் தொகுத்துப் படித்தாலே நமக்குக் காந்தியின் வரலாறு தெரிந்துவிடும். கண் கண்ட தெய்வம், கடவுளைக் காட்டும் காந்தி, இணையிலர் காந்தி, அன்பின் உருவம், எவர் சாதித்தார்?, உத்தமன் காந்தி, வையகம் வாழ்த்தும் காந்தி, சத்தியமூர்த்தி நம் காந்தி, காந்தியாரே தொழுகின்றோம், காந்தி வழி... என எண்ணற்ற கவிதைகளை எழுதியுள்ள நாமக்கல் கவிஞர், மகாகவி பாரதியார், திலகர், தாதாபாய் நௌரோஜி, கோகலே, வ.உ.சி, தாகூர், வல்லபாய் பட்டேல், நேரு, காமராசர், ராஜாஜி உள்ளிட்ட பலரைப் பற்றியும் தனது பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

அதேபோல், நாட்டில் நடக்கும் நிகழ்வுகளைப் பற்றியும் அவ்வப்போது சில பாடல்களாக எழுதியுள்ளார். எ.கா: வடநாட்டில் கொடுமை, பூனா வெடிகுண்டு.

'இந்தியத் தாய் புலம்பல்' எனும் 7 பக்கங்களிலான கவிதை ஒன்றினை எழுதியுள்ளார் நாமக்கல் கவிஞர். இதனைக் கவிதை என்பதைவிடவும் நம் இந்தியத் தாயின் கதை என்றே சொல்லலாம். வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்கள் நம் நாட்டை எப்படி மெல்ல மெல்லக் கைப்பற்றி ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தார்கள் என்கிற அவலத்தை ஒரு உருக்கமான கதையாகவே இதில் வடித்திருக்கிறார் கவிஞர். கவிதையைப் படித்து முடித்த பின்னும், நம் அடிமனதில் நம் இந்தியத்தாய் பட்ட துயரத்தின் சுவடுகள் வலிக்க வைக்கின்றன.

'காலக் கதியடியோ
கைவிரித்து நான்புலம்ப
ஆலம் விதையெனவே
அளவிறந்த மக்கள்பெற்றும்
ஞாலத்தில் என்னைப்போல்
நலிந்தா ளொருத்தியுண்டோ?
நீலக் கடலுலகில்
நீடித்தும் பிள்ளைகளால்
கோல மிழந்துநிலை
குலைந்துருகி வாடுகின்றேன்'

என்று தன் நிலையை வருந்திச் சொல்லும் இந்தியத் தாய், அதற்கு என்ன காரணம் எனத் தொடர்கிறாள்.

'மெத்தப் பகட்டுடையாள்
மேற்கத்திப் பெண்ணொருத்தி
'அத்தை' யெனக் கூவியென்றன்
ஆசார வாசலிலே
தத்தித் தடுமாறித்
தலைவணங்கி நின்றிருந்தாள்'.

- வாசலிலே நின்றவளை இந்தியத் தாய் அன்போடு அழைத்து,

‘நெஞ்சம் கலங்காதே
நீயெதற்கும் அஞ்சாதே
தஞ்ச முனக்கிருப்பேன்
தையலே மெய்யிதுகாண்!’

என்று உபசரிக்கிறாள். நாளாக நாளாக அந்த மேற்கத்திப் பெண், தன் உறவுகளுக்கு மடலெழுதி அழைக்கிறாள். அவர்களும் வருகிறார்கள்.

‘அன்னவர்கள் கொண்டுவந்த
அழகாம் பலபொருள்கள்
மின்னுகின்ற கண்ணாடி
மினுக்குகின்ற பொம்மைகளும்...’

போன்றவை நம்மவரை மயக்க,

‘தோல்நிற்க உள்ளிருந்த
சுளைமறைத்த கொள்கையெனக்
கோல்செய்த என் வாழ்வைக்
குலைத்துவிட்டாள் மெல்லமெல்ல’

என்கிறாள் இந்தியத் தாய். மேற்கத்திக்காரியின் வருகைக்குப் பின், இந்தியத் தாயை அவளது மைந்தர்கள் ஏறெடுத்தும் பார்க்காத இழிநிலையைச் சொல்லி, நிறைவாக இப்படி முடித்திருப்பார் நாமக்கல் கவிஞர்.

‘பெண்டொருத்தி தன்மயக்கில்
பெற்றஎன்னை யும் இகழ்ந்து
சண்டையிட்டுத் திரிவார்நான்
தவங்கிடந்த மக்களெல்லாம்’.

இந்தியத் தாயைப் பூட்டிய விலங்கொடிக்க தேச மைந்தர்கள் வீறுகொண்டெழ எத்தனையெத்தனையோ காரணிகளில் இந்தத் தாயின் கதைக் கவிதையும் ஒரு காரணமன்றோ!

சிறந்த தமிழறிஞராய், தேசப் பக்தராய், காந்தியத்தை நெஞ்சிலேந்திய கவிஞராய்த் தமிழ் மண்ணில் வலம்வந்த நாமக்கல் கவிஞர், 1972ஆம் ஆண்டு ஆகஸ்ட் 24 அன்று இம்மண்ணுலக வாழ்விலிருந்து விடைபெற்றார். ஆனாலும், கவிஞரது கவிதைகளும் தேச நலனுக்கான சிந்தனைகளும் காலமெல்லாம் நிலைத்திருக்கும்.

- இன்னும் சொல்வேன்

● கார்த்திக் திலகன்

மனதை ஊடுருவும் கவிதை வேர்கள்



இன்சொல் பதிப்பக வெளியீடாக வெளிவந்திருக்கும் உயர்திணைப் பறவை என்ற கவிதைத் தொகுப்பு கதிர்பாரதிக்கு இலக்கிய உலகில் பெரும் அந்தஸ்தை ஈட்டித் தந்திருக்கிறது. பலமுறை வாசித்தாலும் கூர் மழுங்காத வார்த்தைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கும் படைப்பு இது. பெரும்பாலான கவிதைத் திரட்டுகளுக்கு 10இல் தொடங்கி 1 வரை எண்கள் சூட்டி இருக்கிறார் கவிஞர். நானும் பின்னட்டையில் இருந்தே எனது வாசிப்பைத் தொடங்கினேன். கருவிலேயே திருவானவர்கள் என்று சொல்வதைப் போலே உதிக்கும்போதே தெறிப்புகளாக உதித்துவிட்ட கவிதைகள் என்று இந்தக் கவிதைகளைச் சொல்லலாம். இவர் ஒரு கவிதையிலே

“பனித்துளி பார்க்கும்போது

....

அதன் குளிர்ச்சியை உன் முலைகளுக்குச் சூட்டுவேன்

....

.... அவை உன் புகழ் பாடும்”

என்று எழுதுகிறார்.

ஆண்டாள் கண்ணனுக்காக எழுதிய திருப்பாவையைப் போலக் கண்ணன் ஆண்டாளுக்கு எழுதிய திருக்கோவை இது. பனித்துளிகளைத் தாலாட்டும் உன் குளிர்முலைகளை எனக்குப் படையலிட மாட்டாயா என்று ஏங்கும் கண்ணனை எந்த ஆண்டாளுக்குத்தான் பிடிக்காது. எழுதுகோலைப் புல்லாங்குழலாக வைத்துக்கொண்டு உயிரிசையை வாசிக்கிற கண்ணன் இந்தக் கதிர்பாரதி. அவர் பேசாத பொருளில்லை. அவர் பார்த்த கேட்ட உணர்ந்த எல்லாவற்றையும் கவிதையாக மாற்றும் பேராற்றல் அவருக்கிருக்கிறது.

பொறுப்புணர்ச்சி மிக்க கவிஞன்தான் சமூக உணர்ச்சி அடைகிறான். சமூகத்தை உலுக்கிய சிந்தனைகளை தலைவர்களை அவன் கொண்டாடுகிறான். இலக்கியத்தின் பேராற்றலைக் கொண்டு அவர்களை எளிய மக்களிடம் கொண்டு சேர்க்கிறான். தொகுப்பில் வருகிற ஒரு கவிதை இப்படிச் செல்கிறது..

"அண்ணல் அம்பேத்கார்

.... வரைந்த...

புத்தர் ஓவியத்தில்

கண்கள் இரண்டும்

திறந்திருக்கும்"

அண்ணல் அம்பேத்கார் வரைந்த புத்தனுக்குக் கண்திறந்திருப்பது ஒருபுறம் இருந்தாலும் அண்ணலே ஒரு புத்தர்தான். கண்திறந்து பார்த்து மக்களின் காயங்களுக்குப் பார்வையாலேயே மருந்து பூசிய புத்தர் என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடிகிறது. கண் திறந்து பார்க்கிற புத்தனாக அம்பேத்காரை நினைவு கொள்ளத் தூண்டிய கதிர்பாரதியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். மக்களின் இதயத்தின் மேல் கவிதைகளை எழுதிப் பார்த்த மகத்தான தலைவர்களுக்குச் செய்யப்படுகிற கவிதாஞ்சலிகளின் வரிசையிலே வைத்துப் போற்றத்தக்க கவிதை இந்தக் கவிதை என்று நான் சொல்வேன்.

உயிரற்ற பொருட்கள் கூட கவியுலகத்தில் நுழைந்துவிட்டால் உயிர் பெற்றுவிடுகின்றன. உயிர்ப் பொருளைப் போலவே நடந்துகொள்கின்றன. கவிஞனின் உலகத்தில்தான் ஆச்சரியங்களுக்கு அளவீடே இல்லை.

"கைவிடப்பட்ட வீடு

கரம் உயர்த்தி உயர்த்தி நெற்றியில்

ஆசிர்வதிக்கிறது, அரவணைக்கிறது

பொக்லைன்"

என்ற கவிதையைப் படித்தவனுக்குப் பொக்லைன் இயந்திரங்களைக் கண்டால் அதனிடம் போய் ஆசிர்வாதம் வாங்க வேண்டுமென்று தோன்றலாம்தானே.

ஒரு தாய்க்கும் மகனுக்கும் இடையே உள்ள உறவைவிட ஒரு தாய்க்கும் மகளுக்கும் இடையேயான உறவு சற்று வலிமையானது. ஒரு மகளுக்கு எல்லாமுமாகத் தாய் இருக்கிறாள். அவளது சந்தோஷத்தின் வினையூக்கியாக துயரத்தின் வடிகாலாக மகளது ஒவ்வொரு பருவத்தின் நிழலாகவும் தாய் இருக்கிறாள்.

"மகளின் முதற்கர்ப்பம்

செய்தி கேட்டு

தன் வயிறு நீவும்

அம்மாவுக்கு,

சிறுகணம்

பொய்க் கர்ப்பம் பூத்து

கலைகிறது"

என்கிற கதிர்பாரதியின் கவிதை தாய்மையை அதன் உச்சத்தில் நம்மைத் தரிசிக்க வைக்கிறது.

மரண ஊர்வலத்தில் பூக்களின் மீது கூட குரோதம் கொண்டு அதைப் பிய்த்து வீதி எங்கும் வீசிக்கொண்டே செல்கிறார்கள். கவிஞருக்கோ நாய் வால் கூட பூவாகத் தெரிகிறது.

"நாய் வால்?

பூதான்...... பூவேதான்"

என்று ஒரு கவிதை முடிகிறபோது அன்பின் வண்ணம் கொண்டு அசைகிற ஒரு பூ புதிதாக நமக்கு அறிமுகமாகிறது.

மிகையுணர்வு என்பது எல்லாக் கவிஞனுக்குள்ளும் அடைந்து கிடக்கிற அடிப்படைப் பண்புதான். மிகுபுனைவின் வழியே அவனது மனம் உன்னதங்களைத் தொட நினைக்கிறது. காட்டாக, கவிஞரின் கடல் பற்றிய கவிதையைச் சொல்லலாம்.

"கடல்

யாரின் சுக்கிலத் துளி?"

என்று ஒரு வரி தொகுப்பில் வருகிறது. இந்த ஒரு வரியே நெடுங்கவிதை தருகிற அர்த்த அடுக்குகளைத் தந்துவிடுகிறது.

பெருங்கடலைத் துளியாகப் பார்க்கிற கவிநுட்பம். துளிக்குள் அணுவாக அணுவுக்குள் உயிராக எஞ்சி நிற்கிற பிரபஞ்ச ரகசியத்தை விரித்துக் கவி படைக்கிற திறன் ஆகியவற்றைக் கொண்ட கவிஞன் காலத்தைப் போல நிலைத்திருக்கிறான். கதிர்பாரதியும் அதற்கு விதிவிலக்கல்ல.

காமத்தில் முற்றிய மொழியைக் கவிதையாக்குவது பெருங்கலை. சற்று சுவை கூடினாலும் முகம் சுளிக்க வைத்துவிடும். சற்று சுவை குறைந்தாலும் அலுப்புத் தட்டிவிடும்.

உணர்வைச் செதுக்கிச் சிற்பமாக்குகிற வித்தை தெரிந்த கவிஞனுக்கே அது சாத்தியமாகிறது. கதிர்பாரதி அத்தகைய கலைஞன் என்பதற்கு அற்புதமான ஒரு சான்று இந்தக் கவிதை.

“மனசின் மேல்

குறுக்கு வாட்டமாகக் கிடக்கும்

உன் செழுந்தொடையை

அகற்று பெண்ணே”

குறுந்தொகைப் பாடல்களிலும் கிடைக்காத இன்பத்தின் திரட்சியை இந்த வரிகள் அனுபவமாக்குகின்றன அல்லவா.

மனிதர்களை நகரும் மரங்கள் என்றும் மரங்களை நகராத மனிதர்கள் என்றும் சொல்வதுண்டு. மரங்கள் கிளைகளால் காற்றில் நடனமிடுகின்றன. இலைகளால் பேசுகின்றன. பூக்களால் சிரிக்கின்றன. மனிதனுக்குப் பல்வேறு வாழ்வியல் தத்துவங்களைப் போதிப்பதால் எல்லா மரங்களுமே போதி மரங்கள்தான்.

“வானம் நோக்கி கைகள் தூக்கி

சரண் அடைந்துவிட்டது

ஞானம் அடைந்த மரம்”

என்கிற கவிதை மரத்தை ஒரு ஞானாசிரியனாக நம் முன் நிறுத்துகிறது. இது வெறும் கற்பனை வளம் என்று ஒதுக்க முடியாத அளவுக்கு இந்தக் கவிதையின் வேர்கள் நம் மனதில் ஊடுருவுகின்றன.

“மேல் நோக்கி விரிகிற இலையில்

இருந்து

அபயம் என விரியும் பழக்கம் வந்திருக்குமோ

கைகளுக்கு”

என்று இன்னுமொரு காட்சியைக் கவிஞர் விவரிக்கிறார். ஒட்டுமொத்த உலகத்தின் துயரத்திற்கான பிரார்த்தனையாக இந்தக் கவிதை விரிந்து செல்லும் அழகை நம்மால் ரசிக்க முடிகிறது.

அடுத்து ஒரு கவிதை பழுத்த இலை பற்றியது. பழுத்த இலை என்பது எத்தனையோ கவிஞர்களுக்குள் தத்துவக் கிளர்ச்சியை உண்டாக்கி இருக்கிறது. கவிஞர்களுக்குப் பழுத்த இலை என்பது பழுத்த இலை மட்டுமே அல்ல. அழகின் முதிர்ச்சியைக் கவிஞன் அதில் காணுகிறான். பேரியற்கையின் ரகசியங்களை அவைகள் தங்கள் வண்ணங்களில் மறைத்து வைத்திருக்கின்றன.

“உன்னைப் பார்த்துவிட்டேன்

பழுப்பு இலையே

நீ

என் சுடராக அசைந்தாய்”

என்று கவிஞர் எழுதுகிறபோது இந்தச் சுடரின் வெளிச்சம் நீரைப்போல நம் மனதை நனைத்துவிடுகிறது.

அடைக்கலாங்குருவியின் சிறகுகளை மனைவிக்குச் சூட்டி அழகு பார்க்கிற கவியூறிய பார்வை அவருக்கு வாய்த்திருக்கிறது. மகனுக்கு வாய்ப்பேச்சு வர அம்மாவின் நாவில் குத்திய அலகிலிருந்து பெருகிய ரத்தம்தான் தனது சொற்கள் என்று சொல்கிற பால் வாசமடிக்கும் வரிகள் அவரிடமிருந்து இயற்கையாகப் பொங்கி வருகின்றன. இவைகள்தான்

கதிர்பாரதியைத் தனித்துவமிக்க கவிஞனாக அடையாளப்படுத்துகின்றன. 227 பக்கங்களில் 144 கவிதைகளைக் கொண்ட தொகுப்பாக இந்தத் தொகுப்பு அமைந்திருக்கிறது. முதல் கவிதைக்குள் நுழைந்துவிட்டால் கடைசி கவிதையில்தான் நம் கால் தரையில் பாவும் என்ற அளவுக்கு சறுக்கு மர சாய்தளத்தைக் கொண்டு அமைந்திருக்கிறது தொகுப்பு.

ஒரு நெடிய ரயில் பயணத்தில் ஜன்னல் வழியே அத்துமீறும் காற்றுச் சுருணைகளை நாசிகளால் தொட்டு விளையாடிக்கொண்டே நகர்ந்து போவதைப் போன்றதொரு அனுபவத்தைத் தருவதாக இந்தத் தொகுப்பு அமைந்திருக்கிறது.

"யதார்த்தத்தை விட

சற்று நீட்டமாக வளர்ந்துவிட்ட

நெருஞ்சி மலர் நம்புகிறது

பூமியைத் தூக்கிக்கொண்டு

தான் பறப்பதாக

....

சும்மா இருந்த பூமி மீது

ஒரு விதை விழ

சற்று நீட்டமாக

ஒரு அனுபவம் வளர்கிறது

அவ்வளவுதான்"

என்று ஒரு கவிதை வருகிறது. இத்தொகுப்பின் ஆகச்சிறந்த கவிதைகளில் இதுவும் ஒன்று. உயிரின் வளர்ச்சியை அனுபவமாகப் பார்க்கிற கவிஞரின் பார்வை புதியது. பூமியைத் தூக்கிக்கொண்டு பறக்கிற நெருஞ்சி மலர்களைப் போல் நம் இதயத்தைத் தூக்கிக்கொண்டு பறக்கிற வண்ணத்துப் பூச்சிகளாக நிறைய கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பிடித்திருக்கின்றன.

வாசிக்காதவர்கள் இந்தத் தொகுப்பை வாசித்துவிடுங்கள். இல்லையேல் ஒரு பேரனுபவத்தைத் தவறவிட்டவர்களாவீர்கள். ■

● மீரா
● ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

எங்கூரு செவத்தய்யனார்...

களக்காடு மொத்தமும் எங்கன துஷ்டி விழுந்தாலும் சுத்துப்பட்டு ஏகத்துக்கும் துஷ்டிச் சேதி சொல்லிவிட செவத்தய்யன்தான் ஆளு. இன்னிக்கு அவனே செத்துக் கெடக்கான்.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் இருந்து பன்னிரண்டு கிமீ தொலைப்பாடு உள்ள களக்காடு கிராமம்தான் செவத்தைய்யனோட கோட்டை. மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் களக்காடு கிராமத்துக்கும் ஆறு கிமீ தூரம்தான். சின்ன வயசுல காடுகரை மேடெல்லாம் களாக்கா பறிக்கச் சுத்தித் திரிஞ்சதாலயும் ஆடு, மாடுகளை மேச்சலுக்குப் பழக்கியதாலயும் சுத்துப்பட்டு ஐம்பது கிமீ வழித்தடமும் செவத்தய்யனுக்குக் கைவந்த கலை.

மேற்குத் தொடர்ச்சி மலை இண்டு இடுக்கு சந்து பொந்து எல்லாமே செவத்தய்யனுக்கு அத்துப்படி. ஒத்தையாளா காட்டுக்குள்ள எறங்கிக் குறுக்குத் தடத்துல நடந்தான்னாக்கா இப்ப அவன் இருக்குற கிராமத்துல இருந்து பத்து கிமீ தொலைவுல இருக்குற கிராமத்துக்குப் பத்து நிமிசத்துல அசால்ட்டாப் போய்ச் சேந்துடுவான். அவன் மட்டும் சரியான நேரத்துக்குத் துஷ்டிச் சேதி சொல்லாட்டி துஷ்டி விழுந்த வீடே வெறிச்சோடிக் கெடக்கும்.

இருபது வயசுலயே கண்ணாலம் முடிச்சு இருபத்திரண்டு வயசுல இரண்டு புள்ளைகளுக்குத் தகப்பனாகி இருபத்திமூணாவது வயசுல இவனுக்கு நிரந்தர வருமானம் இல்லாத காரணத்தால் ரெண்டு

புள்ளைங்களையும் தூக்கிட்டுச் செவத்தய்யன் பொண்டாட்டி அவுங்க அம்மா வூட்டுக்குப் போயிட்டா. இந்த நாற்பது வருசமா ஒரு எட்டு கூட எட்டிப் பாக்காதவ. மவராசி இருக்காளா? இல்லியானுகூட யாருக்குமே தெரியாது. செவத்தய்யனும் தனக்குப் பொண்டாட்டி புள்ளைங்க வேணும்னு ஒருக்கா ஒரு வார்த்தை சொல்லி ஒருத்தரும் கேட்டதே இல்லை. களக்காட்டுக்கு நேந்துவிட்டவனைப் போலக் கிராமமே கதினு கெடந்தவன் செத்துக் கெடக்கான். துஷ்டி சேதி சொல்லி விடக்கூட நாதி இல்லை.

ஊருல உள்ள அஞ்சாறு பெரிய தலைக மட்டும் செவத்தய்யன் குடிசைக்கு வெளியே பேசியபடி இருக்கிறார்கள்.

கூல்மாயத்தேவன் கரகரத்த குரலில், "சொன்னமாட்டுக்கு ஓட்டமா ஓடி ஊரு துஷ்டிக்கெல்லாம் சேதி சொன்னான்லே. நாமதான் அவன் காரியத்தை இழுத்துப்போட்டுச் செய்யணும்லே. என்ன சொல்லுதிய.." என்று சொல்லவும்,

"நீ சொல்றதும் நாயந்தாம்லே" என்று தன் பங்கிற்கு ஆமோதித்தான் சீனிச்சாமி.

ஊடால தலையை மட்டும் ஆட்டிய மத்த பெருசுகளும் ஒன்று திரண்டு ஊர் மக்களுக்கு எல்லாம் செவத்தய்யன் செத்த சேதியைச் சொல்லிவிட்டதோடு மட்டுமில்லாமல் ஊரில் உள்ள பொண்டு பொடுசுக உட்பட அத்தனை பேரும் செவத்தய்யன் இறுதிக் காரியத்தில் கலந்துக்கிடணும்னு கட்டளையும் போட்டுப் புடுறாக.

ஒரு வீட்டுக்கு ஒரு வரி கணக்காத் திரட்டி செவத்தய்யனின் இறுதிச் சடங்குக்கான மொத்த வேலைகளும் மும்முரமாக நடக்கத் தொடங்குது. திரட்டிய மொத்தப் பணமும் சிங்கராசுகிட்ட ஒப்படைக்கப்படுது. ஒரு மஞ்சப்பை முழுக்கப் பணமும் கக்கத்தில் செலவுக் கணக்கு எழுதறதுக்கு நோட்டும் வச்சிக்கிட்டுத் தொணைக்கு மாசணியைக் கூட்டு சேத்துக்குறான் சிங்கராசு.

ஏத்தமும் எறக்கமுமா இருக்குற ஒடஞ்ச நாற்காலிக்குச் செங்கல்லை முட்டுக் குடுத்து அதுல செவத்தய்யனை ஒக்காத்தி வெச்சிருக்காக. சுத்திலும் உள்ள இடத்தை ஆக்கிரமிச்சிருந்த பொம்பளைக வராத அழுகைய வம்படிக்கு வரவெச்சு ஒப்பாரி பாட்டுப் படிக்க ஆரம்பிச்சாக.

கூட்டத்துல கும்மியடிச்சா தெரியவா போகுதுன்னு நெனச்சுக்கிட்டு மிட்டாய்க் கெழவி ஒப்பாரில வர்ற கடைசி வார்த்தை ராசாவை மட்டும் புடிச்சு வெச்சுக்கிட்டு கோரஸ் போட்டபடி மூக்கைச் சிந்தி முட்டுக்கு வெச்சிருந்த கல்லுல தேய்ச்சிப்புடுறா.

துஷ்டி வீடே கதியாக் கெடந்த செவத்தய்யனுக்கு இவுக இப்புடித்தான் செய்வாகனு தெரியாம இருந்துருக்காது. எல்லாம் தெரிஞ்சிருந்தும் எந்திரிச்சு வந்து ஏன்னு கேக்கவா முடியும்.. செத்து செவுத்துல சாச்சி வெச்சிருக்கப்ப. செவத்தய்யன் செவனேன்னு இருந்தது இவுகளுக்குச் சவுரியமாப் போச்சு.

நிறை செம்புத் தண்ணி ரெட்டை வாழைப்பழம் ஒடைச்ச தேங்கா ஊதுவத்தி சகிதமா சாங்கியமெல்லாம் எந்தக் கொறையும் இல்லாமச் செஞ்சு ஒடம்புக்குள்ள இருந்து வெளியேறிய உசுருக்கு வழிவிட்டுக் கொட்டடிச்சுக் கொண்டாட ஆரம்பிச்சது ஊரு. கூல்மாயத்தேவன் கூடி இருந்த பெரிய தலைக்கட்டுகளைக் கூப்பிட்டு ஆலோசனை பண்ணுதான்.

"இங்காருங்கலே செவத்தய்யன் சனத்துல சவத்தை எரிப்பாவலா பொதப்பாவலா வே.." என்று கேட்டதும் டக்குனு, "அதெல்லாம் யாரு கண்டா தேவரே. இவனுக்கு இங்கன சாதியா சனமா? நமக்கெது சவுரியமோ அதைச் செஞ்சிப்புட வேண்டியதுதானே," என்று சொல்லிக்கொண்டிருந்த சீனிச்சாமியைப் பெருமாள் அமட்டிவிட்டு, "எலாய்.. செத்த சும்மாருக்கியா? எடுத்தோம் கவுத்தோம்னுட்டு எதனையாச்சும் செஞ்சு வெக்க இதென்ன சின்ன புள்ளைவ ஆக்குற கூட்டாஞ்சோறாலே. கண்டது கடையதைப் பண்ணி சாந்திப்படுத்த வேண்டிய ஆத்மாவை ஆக்ரோசமாக்கி விட்ராதீகலே," என்று பயத்துடன் சொன்னார்.

அவர் சொல்வதிலும் ஒரு காரணம் இருக்கு. அஞ்சு வருசத்துக்கு முன்னாடி காதலிச்சு பெத்தவங்களுக்குத் தெரியாம ஓடி வந்த காதல் சோடி ஒன்னு களக்காட்டுலதான் தஞ்சம் அடைஞ்சுது. ஆரம்பத்துல இந்த விசயம் ஊரு சனத்துக்குத் தெரியாது.

நல்லா வாழ்ந்துக்கிட்டு இருந்த அந்தக் காதல் சோடி என்ன காரணம்னு தெரியல ஒத்தக் கயித்துலயே ரெண்டு உசுரையும் மாச்சுக்கிடுச்சுக. ஊருக்குள்ள போலீஸ் வந்தா ஒட்டுமொத்த சனத்துக்கும் பிரச்சினை வரும்னுட்டு காதும் காதும் வெச்சாப்ல பொதச்சுட்டாக. பிற்பாடு ஊருதெரு போய் வாரப்பெல்லாம் அந்தச் சோடி ஆவியா வந்து மெரட்டுறதா அரசல்புரசலா பேசுனது கூல்மாயத்தேவன் காதுக்கும் எட்டுச்சு.

ஆரம்பத்துல கட்டுக்கதையா இருக்கும்னுதான் நெனச்சுட்டு இருந்தாரு தேவரு. ஒருக்கு பெருமாளோட சேந்து வயக்காட்டுக்குப் போறப்ப அந்தக் காதல் சோடி வழிமறிச்சதும் விழுந்தடிச்சு ஓட்டமா ஓடியாந்த கதை தனி. அதுக்கப்பறம்தான் கோடாங்கி மூலமாக் கேட்டு எரிக்க வேண்டிய ரெண்டு பிரேதத்தைப் பொதச்சதுதான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம்னு தெரிஞ்சுக்கிட்டாக.

ஒருவழியா பொதச்சதை மறுபடியும் தோண்டி எடுத்து இருந்த மிச்சமீதி சடலத்தை எரிச்சதுக்கு அப்பறமாதான் எல்லாமே முடிவுக்கு வந்துச்சு. இந்த அனுபவம்தான் மறுபடியும் இன்னொரு தப்பு நடந்துறக் கூடாதுன்னு பெருமாளைப் பதட்டமடைய வெச்சிருக்கு.

“பெருமாள் சொல்றதும் வாஸ்தவம்தாம்ல. தப்பு நடந்துறக் கூடாதுன்னு பதட்டப்படுறதுல

ஒன்னும் தப்பு இல்லவே,” என்று பெருமாளுக்கு ஆதரவாகக் கூல்மாயத்தேவனும் குரல் கொடுத்தான்.

“சரி சாதி சனமே இல்லாதவன் இந்த செவத்தய்யன். பொறவு எப்படிவே அவனோட சடங்கு சம்பிரதாயத்தை நாம தெரிஞ்சுக்கிடுறது,” எனச் சீனிச்சாமி சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்தது.

எல்லாரும் மண்டையப் போட்டுக் குழப்பிட்டு இருந்தாக. மண்டையப் போட்ட செவத்தய்யனை எரிப்பதா? புதைப்பதா? என. சாலமன் பாப்பையாவும் அவரது குழுவினரும் மட்டும்தான் அங்கு இல்லையே தவிர மற்றபடி அவரை நினைவுபடுத்தும்படியான ஒரு மிகப்பெரிய பட்டிமன்றமே அங்கு நடந்துகொண்டிருந்தது. ஒருவழியாக அங்காயி கோயிலில் சீட்டு குலுக்கிப் போட்டுப் பொதைக்கலாம் என அங்காயி உத்தரவு தந்துவிடுகிறாள்.

ஊர்ச்சனமே திரண்டு ஊர்வலமாகச் செவத்தய்யன் சடலத்தைச் சுமந்து சென்று மயானத்தில் புதைக்கிறார்கள். பொண்டாட்டி புள்ளைங்களோட வாழ்ந்திருந்தாக்கூட இவன் துஷ்டிக்கு இத்தனை சனம் கூடியிருக்குமா என்பது சந்தேகம்தான். தன்னலம் மறந்து பொதுநலத்தோடு வாழ்ந்து மறைந்த தலைவர்களின் இறுதி ஊர்வலங்கள் எல்லாம் சரித்திரத்தில் இடம் பெற்றவை. அந்த வகையில் செவத்தய்யன் களக்காடு வாழும் மக்களின் துஷ்டிச் சேதி சொல்லும் பொதுநல நோக்கோடு பிறப்பெடுத்து வாழ்ந்து மறைந்த தன்னலமில்லாத் தலைவன் ஆகிப் போனான்.

இன்று களக்காட்டில் செவத்தய்யன் இல்லை. இருந்த போதிலும் அங்கு யார் வீட்டில் துஷ்டி நிகழ்ந்தாலும் சேதி சொல்லிவிடும் முன்பாகவே சில அறிகுறிகள் மூலம் உணர்ந்து துஷ்டி வீட்டிற்கு உறவுகளும் சொந்தங்களும் வந்துவிடுகிறார்கள். இப்போதெல்லாம் எந்தக் காரியத்திற்காகவும் சீட்டு குலுக்கிப் போட்டு உத்தரவு வாங்க அங்காயி கோயிலுக்கு யாரும் செல்வதில்லை. மாறாக செவத்தய்யனார் கோயிலுக்கே போகிறது களக்காடு ஊர் மொத்தமும். ■

சேரன் தெரு
சோழன் தெரு
பாண்டியன் தெரு
எனப் பெயரிட்ட தெருக்களில்
பிச்சை கேட்ட
பிச்சைக்காரன் ஒருவனுக்கு
சல்லிக்காசுகூடத் தேறவில்லை
பொறுத்துக்கொண்டே
நான்காவது தெருவினுள்
நுழைந்தவனுக்கு
கொஞ்சம் கூட
சாப்பிட உணவும் கிடைக்கவில்லை
அந்த நான்காவது தெருவின் பெயர்
வள்ளலார் தெரு
சிரித்துக்கொண்டே
பெயரற்ற தெருக்களில் நடந்தான் அவன்.

- ப.தனஞ்ஜெயன்

சாம்பல் பூத்த கவிதைக்குள் நான்

சூரியன் உமிழ்ந்த எச்சத்தில்
ஒளிர்கிறது நிலவு
கவிதைத் தீயின்
கதகதப்பில் உயிர்த்திருக்கிறேன்
சுடர்களின் நடனத்தில்
போதை ஏறுகிறது
தீக்குழியில் இறங்கும் பக்தனாய்
தீயின் கங்குடன் ஐக்கியமாகிறேன்
எங்கிருந்தோ வந்த
தூக்க விலங்கொன்று
என்னைக் கௌவிக்கொண்டு போய்
சப்பித் தின்று விழுங்குகிறது
பாலில் நெய் மறைந்திருப்பதாய்
உறைந்திருக்கிறது கவிதை
என்னுள்
சாம்பல் பூத்து.

- ப்ரியா பாஸ்கரன்

பெருமழை சுமந்த
இரவொன்றினை
கடந்துவந்த விடியலில்
பூமி துளைத்த காளான்களாய்
என் தவங்களைத் தாண்டி
துளிர்க்கிறாய்
கனவிலும் கூட.

- தீபிகா சுரேஷ்

கடைசிப் பேருந்தும்
வந்து போய்விட்டது
இனி அந்தப் பேருந்து நிறுத்தத்தில்
அடுத்த நாள் காலை வரை
யாரும் வந்து
காத்திருக்கப்போவதில்லை
ஆட்கள் பேருந்துக்கு
அமர்ந்து காத்திருக்கும்
சிமெண்ட் பெஞ்சில்
ஒரு போர்வையை விரித்து
மற்றொரு போர்வையை
தன்மீது போர்த்திக்கொண்டு
உறங்கத் தொடங்குகிறான் அவன்
வழக்கம்போல
இனி யாரும் வரப்போவதில்லையென
இலேசாகப் பெய்துகொண்டிருந்த மழை
வலுத்துப் பெய்யத் தொடங்குகிறது
பேருந்து நிறுத்தம்
மெல்ல மெல்லப் பெயர் மாறி
உறங்குபவனின் வீடாகிறது
இந்த
அவனுடைய வீடு
நாளை காலையில் மறுபடியும்
பேருந்து நிறுத்தமாகிவிடும்
அதுவரை அது
அவனுடைய வீடென்றே இருக்கட்டும்.

– சௌவி

பாஞ்சாலியின் புடவையை
மடித்து வைக்கிறான் துச்சாதனன்
வேடம் கலைந்ததும்..

– கவி. விஜய்

90களின்காலம்

அப்போதெல்லாம்
சேமியா ஐஸ்காரர்தான்
எங்களின்
மதிய வெய்யிலை
ஊருக்குள் கூட்டி வருவார்.

– சம்பத் கிருஷ்ணகுமார்

தமிழிசைக் கருவிகள்

தொடர் - 3

● கோ.லீலா

இசைக்கு நடை கற்பிக்கும் தாளக்கருவி - பறை

பறை மிகத் தொன்மையான தமிழிசைக் கருவி.

உயிரை இசைத்து
உடலை அசைத்து
அதிரும் பறை
தமிழரின் மறை.

Rhythm of life என்பது பறையிசையே. உடலும் உள்ளமும் ஒன்றிணையும் பெரும் தியானநிலை வழங்கும் இசை தமிழர்தம் ஞானத்திற்குச் சான்று.

பறை வரலாறு

காட்டில் வாழ்ந்த மனிதன், விலங்குகளை வேட்டையாடி, அதன் இறைச்சியை உணவாக உண்டான். அவ்விலங்குத் தோலின் ஈரத்தன்மையைப் போக்கச் சூரிய வெப்பத்தில் காய வைத்து, அதை இடுப்பில் கட்டிக்கொண்டான்.

வெய்யிலில் காயவைத்த தோலில் வேகமாக வீசிய காற்றுக்கு மரக்கிளை உராய்ந்துசெல்ல எழும்பிய ஒலியைக் கவனித்தனர் நம் முன்னோர். இதன் மூலம் குச்சியினால் தோலின் மீது உராய்ந்தால் ஒலி எழும்பும் என்பதை உணர்ந்தனர்.

பானையின் வாயில் தோலைக் கட்டி ஒரு குச்சியினால் தட்டி ஒலி எழுப்பிப் பார்த்ததே "பறை"யின் முதல் தோற்றமாகும்.

இரு குச்சிகளைக் கொண்டு ஒலி எழுப்பியது இரண்டாவது தோற்றமெனக் கொள்ளலாம். இதைத் தொடர்ந்து உடைந்த பானை மற்றும் உடையாத பானையின் வாயில் கட்டியபோது எழும்பிய ஒலியின் வேறுபாடுகள் எனத் தோற்றமுன்னேற்றம் கண்டது தமிழர்தம் கூர் அவதானிப்புக்கும், அறிவுக்கும் சான்று.

அடித்து ஓய்ந்த பின்னும் நீண்ட நேரத்திற்கு அதிர்வுகள் நீடித்ததைக் கொண்டு உருளைகளில் இணைத்துப் பேரதிர்வுகளை எழுப்பினர். பறை எனும் இசைக்கருவியின் தோற்றத்தைத் தமிழிசைக் கலைக் களஞ்சியம் (தொ.3. ப.312) இவ்வாறு குறிப்பிடுகிறது.

செய்தியூடகத்தின் தாய் "பறை"

தந்தி, தொலைபேசி, அலைபேசி, தொலைக்காட்சி எனச் செய்தி அனுப்பும் ஊடகங்கள் வருவதற்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்பே ஒலியின் மூலம் செய்தியை அனுப்பும் நுண்ணறிவு படைத்தவர்களாகத் தமிழர்கள் இருந்திருக்கின்றனர்.

ஒலியின் வேகம், ஒலியை கடத்தும் ஊடகம், ஒலியுணர்வு, ஈர்ப்பு, ஒலியின் அதிர்வு கடக்கும் தூரம் போன்றவற்றைத் துல்லியமாக அறிந்து, ஒலி குதிரையைவிட, புறாவைவிட, மனிதனைவிட வேகமாகப் பயணிக்கும் என்பதையும் உணர்ந்து, "பறை" மூலம் செய்தி அனுப்பும் முறையைக் கையாண்டுள்ளனர். செய்தி அறிவித்தலுக்கு அமைதியான அதிகாலைப் பொழுது அல்லது அந்திப் பொழுது உகந்த வேளையாக இருந்தது.



ஒவ்வொரு அடிக்கும் ஒரு குறியீடு வைத்திருந்தனர். அதன் மூலம் செய்தியை அனுப்பினர். வருகுறியீட்டிற்குப் பதிலாக செல்குறியீடு அடி செய்து செய்திகளைப் பல காத தூரங்களுக்குக் கடத்தினர்.

இன்றைய கம்யூனிகேஷன் டெக்னாலஜியின் தாய் "பறை" என்றால் அது மிகையில்லை.

பறையின் வடிவம்

பறையிசைக் கருவி மரக்கட்டையால் செய்யப்பட்ட வட்டவடிவமான சட்டத்தில் புளியங்கொட்டையில் இருந்து தயாரிக்கப்பட்ட பசையினைக் கொண்டு பதப்படுத்தப்பட்ட மாட்டுத்தோலை இழுத்து ஒட்டி ஆக்கப்பட்டது.

பறையில் மூன்று அடிப்படை பாகங்கள் உள்ளன. வட்டச் சட்டம், மாட்டுத் தோல், சட்டத்தின் உட்புறத்தில் பொருத்தப்படும் உலோகத் தட்டு ஆகியவையாகும். 35 செ.மீ. விட்டம் கொண்ட வட்டச்சட்டத்தில் தோல் இழுத்துக் கட்டப்பட்டு ஒட்டப்பட்டிருக்கும். சட்டம் பொதுவாக வேப்பமரத்தில் செய்யப்பட்டிருக்கும்.

இசைக்கும் முறை

இசையை எழுப்ப இருவிதமான குச்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. வலது கையில் வைத்திருக்கும் குச்சிக்கு அடிக்குச்சி அல்லது உருட்டுக்குச்சி என்று பெயர். பூவரசங் கம்பினால் செய்யப்பட்டிருக்கும்.

அரை அடி நீளமும், 3 செ.மீ அளவு சுற்றளவும் கொண்டது. அடிக்குச்சி குட்டையாகவும் பருமனாகவும் இருக்கும். கட்டைவிரல், மற்ற விரல்களுக்கு இடையில் குட்டைக்குச்சியை பிடித்துக்கொண்டு கீழ்ப்புறத்தில் இருந்து அடித்து ஓசையெழுப்புவர்.

இடது கையில் வைத்திருக்கும் குச்சி சிம்புக்குச்சி அல்லது சுண்டுக்குச்சி எனப்படும். இது மூங்கிலால் செய்யப்பட்டிருக்கும். இக்குச்சியானது ஒன்றேகால் அடி நீளமும் ஒரு செ.மீ. அகலமும் கொண்டது. சிம்புக்குச்சி நீண்டு தட்டையானதாகவும் இருக்கும். இடதுகையின் கட்டைவிரல், ஆட்காட்டி விரல்களில் நீண்ட குச்சியைப் பிடித்துக்கொண்டு மேல் பகுதியில் இருந்து அடிப்பர். அடிக்குச்சியால் பறையின் நடுவில் அடிப்பது ஒரு வகை அடி. பறையினைப் பிடித்துள்ள இடதுகையில் வைத்துள்ள சிம்புக்குச்சியால் அடிப்பது இரண்டாவது வகை அடி. இரண்டு குச்சிகளாலும் அடுத்தடுத்து அடிப்பது மூன்றாவது வகை அடி. இவைதான் அடிப்படை அடிகள். இவற்றை மாற்றி மாற்றி அடித்துப் புதிய மெட்டுகள், சொற்கட்டுகள் உருவாக்கப்படுகின்றன.

பறையின் வகையும் இலக்கியக் குறிப்பும்.

அவற்றில் முக்கியமானவை வருமாறு-

அரிப்பறை - அரித்தெழும் ஓசையையுடைய பறை.

அரிப்பறை மேகலை யாகி யார்த்தவே (சீவக சிந்தாமணி 2688).

ஆறெறிப் பறை - வழிப்பறி செய்வோர் கொட்டும் பறை.

ஆறெறிபறையுஞ் சூறைச் சின்னமும் (சிலப்பதிகாரம் 12, 40).

உவகைப்பறை – மகிழ்ச்சியைக் குறிக்கும் பறை (திவாகர நிகண்டு).

சாப்பறை - சாவில் அடிக்கப்படும் பறை (திவாகர நிகண்டு).

சாக்காட்டுப் பறை - இறுதிச் சடங்கின்போது இசைக்கும் பறை.

வெட்டியான் பறை - சில விசேடகாலங்களிற் கொட்டும் பறை.

நெய்தற்பறை - நெய்தல் நிலத்துக்குரிய பறை (திருக்குறள் 1115).

பம்பை - நெய்தனிலங்கட்குரிய பறை (திவாகர நிகண்டு).

தழங்குரற் பம்பையிற் சாற்றி (சீவக சிந்தாமணி 40).

மீன்கோட்பறை - நெய்தனிலப் பறை (இறை. 1, பக். 17.).

மருதநிலப்பறை - மருதநிலத்திற்குரிய பறை.

கல்லவடம் - ஒரு வகைப்பறை.

நிலவெண் சங்கும் பறையும் ஆர்ப்ப
நிற்கில்லாப்
பலரு மிட்ட கல்ல வடங்கள் பரந்தெங்குங்
கலவ மஞ்ஞை காரென் றெண்ணிக்
களித்துவந் தலம ராரூர் ஆதிரை நாளால்
அதுவண்ணம்

கல்லவடமிட்டுத் திசைதொழு தாடியும் (தேவாரம். 576, 6).

குரவைப்பறை – குறிஞ்சி நிலத்துக்குரியது.

குறிஞ்சிப்பறை - குறிஞ்சிநிலத்துக்குரிய தொண்டகப் பறை.

தடறு - தொண்டகப் பறை (அக. நி.).

குறும்பறை - குறும்பறை யசைஇ (புறநானூறு. 67, 9).

கொடுகொட்டி - ஒரு வகைப்பறை.

கொடுகொட்டி யாடலும் (சிலப்பதிகாரம். 6, 43), குடமுழவங் கொடு கொட்டி குழலு மோங்க (தேவாரம். 225, 2).

கோட்பறை - செய்திகளை நகரத்தார்க்குத் தெரிவிக்கும் பறை.

தமுக்கு - செய்தி தெரிவிக்க முழக்கும் ஒருகட் பறை.

நிசாளம் - ஒருகட் பறை.

நிசாளந் துடுமை (சிலப். 3, 27, உரை).

சூசிகம் - ஒருவகைப் பறை. தகுதியெனக் கூறும் நெறி.

தக்கை - அகப்புறமுழவு மூன்றனுள் ஒன்றாகிய ஒருவகைப் பறை (பிங்கல நிகண்டு); (சிலப்பதிகாரம். 3, 26, உரை).

தடாரி - பம்பையென்னும் பறை (பிங்கல நிகண்டு).

பறைத்தப்பட்டை, தண்ணம், தம்பட்டம், திடும், திண்டிமம், நாவாய்ப்பறை, திமிலை (சிலப்பதிகாரம். 3, 27, உரை).

தலைப்பறை - யானை முதலியவற்றின் முன்னே கொட்டும் பறை.

படலை - வாயகன்ற பறை (சூடாமணி நிகண்டு).

பண்டாரமேளம் - அரச விளம்பரங் குறிக்கும் பறை.

பன்றிப்பறை - காட்டுப்பன்றிகளை வெருட்டக் கொட்டும் பறை (பிங்கல நிகண்டு).

முரசம், வெருப்பறை - போர்ப் பறைகள்.

முரச மிடைப்புலத் திரங்க வாரமர் மயங்கிய ஞாட்பில் (புறநானூறு 288).

பூசற்றண்ணுமை - பகைவருடன் போர்புரிதற்காக, வீரரை அழைத்தற்குக் கொட்டும் பறை (நன்னூல்).

முருகியம் - குறிஞ்சிநிலத்தில் முருகனுக்குரிய வெறியாட்டுப் பறை (தொல்காப்பியம். பொ. 18, உரை.)

வெறியாட்டுப்பறை - குறிஞ்சிநிலப் பறை.

வீராணம் - ஒருவகைப் பெரிய பறை.

வீராணம் வெற்றிமுரசு (திருப்புகழ். 264).

பஞ்சமாசத்தம் - சேகண்டி கைத்தாளம் காளம் என்றும் தத்தளி மத்தளி கரடிகை தாளம் காகளம் என்றும் இருவிதமாகச் சொல்லும் ஐவகைப் பறை.

ஆவஞ்சி பறை - பெண் விலங்கின் அடிவயிற்றுத் தோல் நீண்டு கொடுப்பது (நெகிழ்வு தருவது). ஆவின் வஞ்சித் தோலால் போர்த்தப்பட்ட பறை ஆவஞ்சியாகும் என்றார் அடியார்க்கு நல்லார். ஆவஞ்சி எனினும், குடுக்கை எனினும், இடக்கை எனினும் ஒக்கும். ஆவினுடைய வஞ்சித்தோலைப் போர்த்தலால் ஆவஞ்சி என்று பெயராயிற்று.

பறை என்பது சாவுக்கு மட்டும் அடிக்கப்படும் மேளம் என்பதாகப் புரிந்துவைத்திருக்கும் அறியாமையைப் போக்கிக்கொள்ளவும். தமிழ் முன்னோர்கள் தத்தம் உணர்வுகளை வெளிக்காட்ட, ஒரே கருவியில் பல்வேறு வகைகளை வகைப்படுத்தி இருப்பது அவர்தம் அறிவு, ரசனை, செய்தி கடத்தும் முறை, இசைஞானம் போன்றவற்றுக்கு முன்னுதாரணம்.

இன்னும் பறை பற்றிய செய்திகளைத் தொடர்ந்து பார்ப்போம். ■

● கவிஜி

புத்தனைத் தேடி...



திரைப்படம் : XUAN ZANG

யாத்திரையின் முழுமை யாத்திரையில்தான் கிடைக்கும். பயணங்களே அற்புதங்களை நிகழ்த்தி இருக்கின்றன. தூர தேசத்தின் வழியேதான் உலகம் வரைபடமாகி இருக்கிறது.

"யுவான் சுவாங்" பற்றி நாம் சிறுவயதில் படித்திருப்போம். அதன் நீட்சியாகத்தான் இந்த சினிமா காட்சிகளின் ஞானமாய் நம்முள் விரிகிறது. யுவான் சுவாங் 13 வயதில் புத்த துறவி ஆனவர். அறம் தேடி அதன் இதயம் தேடி வரும் கதையே இந்தப் பயணம்.

ஏழாம் நூற்றாண்டில் கதை நடக்கிறது.

இயல்பிலேயே இருந்த படிப்பின் வேட்கை அவரை இந்தியாவை நோக்கித் திருப்புகிறது. உலகத்துக்கே இந்திய மண்ணில் முளைத்தெழுந்த வெளிச்சம் ஒன்று அவரை வழி நடத்துகிறது. புத்தன் என்னும் முதுமனிதனின் மூச்சு அவரைச் சூழ்ந்திருக்கிறது. ஒளியின் தீட்சதையில் கலங்கரை விளக்கமாகப் புத்தர் இருந்தார் என்பதுதான் இங்கே வட்டமிட்டுக் காட்ட வேண்டிய காலப் பதிவு. சீனாவில் அப்போது பரவியிருந்த புத்தரைப் பற்றிய முரண்களைக் களைந்து தெளிவடைய புத்தன் பூமிக்கே வந்து புத்தனைக் கற்கலாம் என்ற விதையை அவருள் அறிவின் தேடல் விதைக்கிறது. அப்படி புத்தனைத் தேடி இந்தியா வந்த ஒற்றை மனிதனின் யாத்திரைதான் இந்த சினிமா.

தனித்திருப்பதன் அவசியம் முக்திக்கு அருகாமை. முகமற்ற சிந்தனைக்கு மூச்சு விடுதல் பற்றிய அக்கறை இருக்காது. அது முக்திக்கான துவாரங்களைத் துளைத்துக்கொண்டே நகரும். நகருதலின் நிமித்தம்தான்... இந்தப் படத்தின் ஆரம்பம். யுவானின் இந்த இந்தியப் பயணத்தைப் பெரும்பாலும் அங்கே யாரும் விரும்புவதில்லை. காரணம்... அத்தனை கடினமானது. ஆபத்து நிறைந்த பயணம் அது. முறையான அனுமதியும் இல்லை. மலையும் குன்றுகளும் பாலைவனமும் காடுகளும் வெள்ளமும் சூழ்ந்த கடுமையான பயணத்தில் அவர் இறகைப் போல நகர்ந்துகொண்டே இருக்கிறார். நகர்த்திக்கொண்டே இருப்பது புத்தனின் போதி மர நிழல் என்று சொல்லலாம். காலத்தில் தங்கிவிட்ட புத்தன் என்று நம்பலாம். நம்புவதில்தானே ஞானத்தின் முதல் கண்

திறக்கிறது. எங்கெல்லாம் மனிதர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவருக்கு உதவி கிடைக்கிறது. ஒரு கட்டத்தில் தொடர்ந்து நடக்க முடியாத சூழலில் மயங்கிக் கிடக்கும் அவரைக் குதிரைகூட கீழ் அமர்ந்து அவரை முதுகில் ஏற்றிச் செல்கிறது. உண்மையும் அறமும் உள்ள இதயத்துக்கு ஒருபோதும் மரணமில்லை.

இந்தியாவின் முதல் பல்கலைக்கழகம் "நாளந்தா" பல்கலைக்கழகம். அங்குதான் புத்தரைப் படிக்க வருகிறார். ஆறாத வேட்கையும் தீராத தாகமும் அவரை இடைவிடாமல் முன்னேறச் செய்கின்றன. வரும் வழியெல்லாம் இயற்கையின் இன்முகத்தைக் காண்கிறோம். இணுங்கிக்கொள்ளும் காற்றின் கைகளில் மலைக்குன்றுகளின் செந்நிறம்... வரிவரியாய் வானம் வரைந்த ஓவியமாய். கேமராவின் மொத்தக் கண்களும் புத்தக் கண்கள்தான் போல.

நீரின் வன்கொடுமையை 'கோபி' பாலைவனத்தைக் கடக்கையில் யுவானோடு சேர்ந்து நாமும் உணர்கிறோம். நா நீளும் தவத்தின் தாக ரட்சிப்பு மணல் அள்ளி முகத்தில் அப்பிக்கொண்டு அழ வைக்கும். நீரின்றி அமையாது உலகு மட்டும் அல்ல.. உண்மையும் கூட.

கானல் நீர் பேயுருவம் கொண்டு யுவானை அலைக்கழிக்கும்போதும் விடாமல் பற்றிக்கொண்டிருக்கும் ஒரு நினைப்பு புத்தன். பாலைவனத்தில் நடந்துவருகையில் கழுகுப் பார்வை பார்க்கும் சூரிய தூர ஷாட்டில் பாலைவனமே நடக்கிறது. பாலைவனத்தில் புதைந்தெழும் பாதங்களின் வெளிப்படுதல் ரகசியம் தூர்ப்பவை. புதையல் தோண்டுபவை. ஒவ்வொரு சுவடுக்கும் ஒவ்வொரு ஆயுள்.

பாலைவனம் கடந்து நீர்நிலை கொண்ட இடத்துக்கு வந்து சேர்ந்ததும் யுவானின் கண்களில் புத்துயிர் சிமிட்டும். நீரை அள்ளி உள்ளங்கையில் வைத்துப் பார்க்கும் நொடி நேரம்... நீர் பற்றிய ஞானம் நம்முள் ஒழுக ஆரம்பிக்கும். முகத்தில் தேய்த்துக் கொள்ளும்போது மனதுக்குள் இருந்த பேரழுகை கருணையாகும். வானம் பார்த்துக் கைகளில் சிலுவை பூக்க நீரில் இலையாகச் சரிகையில் பேரமைதி திரையில். புது வரிகள் மொழியில்.

சீனப்பட்டு பற்றிக் கூட ஓரிடத்தில் காட்சியும் உரையாடலும் வருகிறது. ஓயாமல் நகரும் ஒப்பனைக்குப் பாலைவனம் எனப் பெயரிடலாம். பசுமை வனம் எனக் குறிப்பிடலாம். மலை குன்றெனக் கோடிடலாம். அற்புதங்களின் அற்புதங்கள் நடை பயிலும் காற்றின் கால்களில் காணலாம். லாங் ஷாட்தான் சினிமாவின் மொழி என்று கூட ஒரு சிந்தனை வந்து போகிறது. இந்தப் பூமியின் மறுபக்கம் பாதங்களற்ற இதயங்களால் ஆனது. ஏற்கனவே ஃபிரேம் போட்டு மாட்டப்பட்ட காட்சிகளைப் பயணம் கோர்த்துக்கொண்டே சினிமாவாக்குகிறது. ஒரு பயணத்தின் வாயிலாக யுவானுக்கு எதுவெல்லாம் நிகழுமோ அதுவெல்லாம் நமக்குள்ளும் நிகழ்கிறது.

ஓரிடத்தில் யுவானிடம் உதவிக்கு வரும் ஒரு இளைஞன் கேட்பான்.

"இந்தியா எங்கே இருக்கிறது...?"

அதற்கு யுவான் பதில் சொல்வார். "இந்தியா இதயத்தில் இருக்கிறது."

உலகத்தின் இதயத்தைப் புத்தன் மூலமாக இந்தியா துடிக்கிறது.

படம் தொடங்கியதில் இருந்தே காற்றில் துளையிட்ட வெளியின் சப்தம் புல்லாங்குழல் செய்வதை அனிச்சையாக ரசிக்கிறோம்.

வாட்ச் டவரில் காவல் காக்கும் ஒரு பகுதியின் தளபதி... தான் தங்கி காவல் பணி புரியும் இடத்தை "இது சிறை" என்று சொல்வார்.

"உங்களுக்குத்தான் இது சிறை.. என்னைப் போலப் பயணம் செய்து வருவோர்க்கு இது சொர்க்கம்" என்பார் யுவான்.

பாலைவனத்தில் யுவானுக்கு மட்டும் மழை வரும் நிஜத்தை உலகம் கற்பனை என்று சொல்லும். இங்கே கற்பனைகளின் முடிச்சில் இருந்துதான் நிஜங்கள் தம்மை விடுவித்துக்கொண்டன என்பதுதான் அறிதல்.

நான்கு வருடப் பயணத்துக்குப் பின் கைபர் கணவாய் வழியாகச் சிந்துவை அடைந்துவிடுகிறார். சிந்து என்பது இந்தியாதான். நாளந்தாவில் நுழைந்துவிடுகிறார். அவருக்காகத்தான் தான் காத்திருப்பதாக மூத்த குரு சொல்கிறார். கனவின் வழியே எண்ணங்களின் வழியே செய்தி பரிமாற்றம் அடைந்தது என்பதன் பின்னால் அறிவியல் இருப்பதை நாம் மறுக்க இயலாது.

புத்த மதம் ஒரு கட்டத்தில் இந்தியாவில் இருந்து விரட்டப்பட்டது. விரட்டுவதற்காகவே உருவாக்கப்பட்ட மதம் எது என்றும் நமக்குத் தெரியும். ஆனாலும் நாம் தெரியாத மாதிரிதான் இருப்போம். மதத்தின் மேல் நின்று மத்தியஸ்தம் பேசுவதுதானே.. மகத்தான அரசியல் நமக்கு.

"புத்தன் பிறந்த நாட்டில் புத்த மதம் இப்போது நாளந்தாவில் மட்டும்தான் மிச்சம் இருக்கிறது.." என்று யுவான் வினவுகையில் "இது புத்தர் நாடுதான்.. ஆனால் எல்லாரும் இங்கு புத்தர் இல்லையே..." என்று குரு சொல்வதில் மானுட மறுபரிசீலனை தேவை குறித்த நமக்கான விவாதம் நம்மிடம் இருந்தே துவங்குகிறது.

கிடைக்கப் பெறுவதற்கானது அல்ல அன்பு. அது செலுத்தப்படுவதற்கானது. புத்தனை நெருங்க நெருங்க நம்மில் இருந்து நாம் விலகுகிறோம்.

புத்த மதப் பிரிவுகளான மஹாயானம் ஹீனயானத்தின் வித்தியாசம் என்ன என்ற கேள்வி வருகிறது.

ஹீனயானம்.... புத்தரின் கொள்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. உருவ வழிபாடு இல்லை.

மஹாயானம் புத்தரையே கடவுளாகக் கொள்கிறது. உருவ வழிபாடு கொண்டவை.

ஒரு நல்ல விதை உருவாகும் இடத்தில்தான் அதன் நகலும் உருவாகும். நம் வாய் முணுமுணுக்கிறது. யுவான் தான் சொல்லும் பதில் மூலமாக நிஜத்தைத் தேடுகிறார்.

இன்னமும் ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்பதைத் தட்டையாகத்தான் நாம் புரிந்துகொண்டிருக்கிறோம். புத்தன் சொன்ன ஆசையே வேறு. அதைப் புரிந்துகொள்ள விழிப்புணர்வு தேவை. மனதின் ஓட்டத்தைச் சாட்சியாக நின்று கவனிக்கும் அவதானிப்பு தேவை. அதன் மூலமாகத்தான் அவரவர்களின் போதி அவரவர்களின் இலையை விடுவித்துக்கொள்ளும்.

யுவான்.. மேலும் இந்தியாவைச் சுற்றிப் பார்க்கிறார். இந்திய நடனங்கள், இந்திய பழக்க வழக்கங்கள் கண்டுணர்கிறார். கசடறக் கற்பதில்தான் மூச்சின் மொழி, பேச்சின் மௌனம் புரியும். எல்லோரா குகைகள் பார்க்கிறார். போதி கயாவில் போதி மரத்தடியில் நிற்கிறார். வானம் உயர்ந்து நிற்கும் மரத்தின் காட்சி நம்மைப் புத்தன் மடியில் கிடத்துகின்றது. இந்தியாவில் நிலவும் சாதிய முறைமைகளை அறிவுப்பூர்வமாக அணுகுகிறார். வினா எழுப்புகிறார். விடை தேடுகிறார். சாதியின் பெயரால் சபிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவனுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி விடுதலை அளிக்கிறார்.

மனதின் சுமை காலில் இறங்க கால்களின் சுமை காலத்தில் இறங்க.. அந்த யாத்திரீகன் புத்தன் பூமியில்.. அழுதுகொண்டே நாடு திரும்புகிறார். மனம் உருகிக் கொட்டும் பேரழுகையில்.... களங்கமற்ற துளிகளின் கூட்டு அறிவுச்சுடரை எரிய விடுகிறது. மிச்சமிருந்த புத்தனையும் பத்திரமாய் மீட்டுக்கொண்டு அந்த ஒற்றை மனிதன் கூடடைகிறான்.

சிறகுள்ள பறவைக்குத்தான் புத்தக் கூடுகள் சாத்தியம்.

இயக்குநர் : Huo Jianqi

மொழி : சீனம்

ஆண்டு : 2016

■

ஆழ்மனத் தேடல் – 12

பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி

என்னையே எனக்குப் பிடிக்காத நேரங்கள்
எப்படி இருக்குமென்று
ஒரு கல்லில் அமர்ந்து யோசித்துக்கொண்டிருந்தேன்
வெளியே வந்தான்

என் மீது வீசப்பட்ட கற்களை
ஒவ்வொன்றாக எடுத்து
பத்திரப்படுத்துகிறேன்...

கற்களைச் சேகரித்து
என்ன செய்யப் போகின்றாய் என்றான்

இந்தக் கற்கள்
யார் யாரிடமிருந்து வந்திருக்குமென
யூகிக்க முடியாதபடி
அளவுகள் மாறுபட்டிருப்பதைக் கண்டு
வியப்படைகிறேன் என்றேன்

அவனோ
உன்மேல் உள்ள கோபத்தின் அளவுக்கேற்ப
இந்தக் கற்களின் அளவுகளும் இருக்கலாமென
சமாதானம் கொள் என்றான்

உண்மைதான்
இருப்பினும்
நான் சமாதானம் அடைவதை
ஏற்றுக்கொள்ள முடியாத
நேரங்களில் மீண்டும்
கற்கள் வீசுவதைத் தாங்கிக்கொள்ள
இயலவில்லை என்கிறேன்

அவன் சொன்னான்
உன் பசியைப் போக்கும்
அரிசியில் மட்டுமல்ல
உன்னைக் காயப்படுத்தும் கற்களிலும்
கடவுள் உன் பெயரை எழுதியிருக்கக் கூடும்
என்று நினைத்துக்கொள் என்றான்
ஆம்
அவன் வார்த்தைகளில் நான்
நம்பிக்கை வைக்கிறேன்...

– அவன் இன்னும் சொல்வான்...

● கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

கேள்விக்கணைகளாகும் கவிதைகள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான கவிஞராக ஆதவன் தீட்சண்யாவை நான் பார்க்கிறேன். கவிஞர் என்ற சொல்லுக்குள் மட்டுமே நின்றுவிடுவதில்லை அவருடைய பங்களிப்பு.

இலக்கியத்தின் பாடுபொருள் மனிதர்களுடையது. ஆதலினால் இதன் பயனும் அவர்களுக்கானதே என்பதில் உறுதிகொண்டிருக்கும் எழுத்தாளனாக ஆதவன் தீட்சண்யா தெரிகிறார். சிறுகதைகளிலும் அவரது சீற்றங்களை நீங்கள் பார்க்கலாம். காலம்காலமாய் மக்களிடையே சினிமா மூலம் வளர்த்தெடுக்கப்பட்ட பொய்யான நம்பிக்கைகளைத் தோலுரிப்பதாய் இருக்கட்டும், கடைசி வரையிலும் எந்த மாடியிலிருந்தும் எந்தத் தெருவின் முடுக்கிலிருந்தும் எந்தத் தலைவனும் வரவில்லை, எவனும் கண்ணீரைத் துடைக்கவில்லை என்பதை மக்களுக்கு உணரவைப்பதாக இருக்கட்டும், அவருடைய எழுத்துக்களுக்கு மிகுந்த பங்குண்டு. மனிதனைச் சிந்திக்கவிடாமலே வைத்திருக்கும் அரசியலை அரித்தெடுக்கும் வேட்கை அவருடையது. ஆதவன் தீட்சண்யா படைப்புகள் ஒவ்வொன்றும் நிறக வைத்து இச்சமூகத்தைக் கேள்விக்கணைகளால் நிர்மூலமாக்குபவையாக இருக்கிறது.

முள் தைத்த இடத்தை விட்டுவிட்டு வேறெங்கோ தேடிக்கொண்டிருக்கும் கூட்டத்தை, முள் எங்கு தைத்ததோ அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று அதனுடைய சுவடுகளில் பொதிந்திருக்கும் அல்லது

துருவேறியிருக்கும் பொக்குகளை உதிர்த்தெறிந்துவிட்டு தைத்த இடத்தைச் சுட்டிக்காட்டி இங்கு தேடு, இங்கே இருக்கிறது, இதைப் புடுங்கியெறி என்று சரியான இடத்திற்குள் இட்டுச் சென்று கருவறுக்கவேண்டியதை அடையாளப்படுத்துபவர் அல்லது அம்பலப்படுத்துபவர்.

இந்தச் சமகாலத்தில் சுயவிமர்சனம் என்பதே ஏதோ சடங்கியல் தன்மையில் நிகழ்த்தப்படுகிற சூழலில் அதற்கு எவ்விதத் தயக்கமும் ஆர்ப்பாட்டமும் இல்லாமல், (காய்கறி வாங்கி அதை ஆக்கியவித்துத் தின்றுவிட்டு / கவலை கொண்டதான பாவனையோடு வந்திருக்கும் இந்த ஆதவனோ / சந்தடிச்சாக்கில் எம்மைக் கச்சாப் பொருளாக்கி / கவிதையாத்து விடும் எத்தனிப்பில் இருக்கிறான்... - கரை தட்டியவர்கள்) தன்னைத்தானே வெளிப்படையாகச் சுயவிமர்சனம் செய்துகொண்டும், சமூகத்தின் வெவ்வேறு கோரமான முகங்களைத் தொடர்ந்து எழுத்தால் படம்பிடித்துத் தொங்கவிட்டுக்கொண்டும் அந்தப் பணியையே தன் முதன்மை வேள்வியாக நடத்திக்கொண்டும் இருப்பவர்தான் தீட்சண்யா. அதோடு நின்று விடுவதில்லை அவருடைய வேலை, அதைத் தாண்டியும் நீள்கிறது.

வெவ்வேறு காலகட்டங்களில் பல எழுத்தாளர்கள் இந்தச் சமூகத்தினுடைய அவலங்களைப் பதிவு செய்து வந்திருக்கிறார்கள். ஆனால், தனிமனிதர்களையும் இனக் குழுக்களையும் விமர்சிக்கும் நம்மவர்கள் அரசியல் பின்னணியில் நிகழ்த்தப்பட்ட கொடூரங்கள் குறித்தோ, இப்படியான நிலைகளைக் கண்டுகொள்ளாத அரசின் செயல்பாடு குறித்தோ பெரிய அளவில் எந்தவிதமான விமர்சனங்களையும், பதிவுகளையும் முன்வைக்கவில்லை. கண்டனங்களையும் தெரிவித்ததாகத் தெரியவில்லை. சமரசத்தை வெறுத்தாற்போலும் இல்லை. முக்கியமாகப் படைப்புகளின்வழி அவற்றின் எதிர்வினையைக் குறைவாகவே நாம் காண்கிறோம்.

இவ்விடத்தில்தான் முக்கியத்துவப்படுகிறார் ஆதவன் தீட்சண்யா.

மக்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது. அதற்கேற்ப கணிசமாகக் குற்றங்களும் அதிகரிக்கத்தானே செய்யும் என்று அவரோடு பயணிக்கிற நண்பர்களே குறிப்பிட்டாலும் (நிழலுக்கும் திறை செலுத்தும் இவ்வாழ்வு பற்றிய புகார்கள் ஏதுமின்றி அன்றாடங்களைக் கழிக்கிற எனது நண்பர்களில் சிலர், நான் நினைத்துக்கொண்டிருப்பது போல இந்தச் சமூகம் அப்படியொன்றும் கொடுங்குற்றமானதல்ல என்று எனக்கு ஓயாமல் அறிவுறுத்திக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் வந்துகொண்டிருக்கிற செய்திகள் உங்கள் கூற்றைப் பொய்ப்பிக்கிறதே என்றால் எல்லாச் சமூகத்திலும் எல்லாக் காலத்திலும் நிகழ்வதே இங்கும் நிகழ்கிறது என்ற சமாதானமும், இவ்வளவு பெரிய சமூகத்தில் இந்தளவிற்குக்கூட குற்றங்கள் நிகழாதா என்று கூறுவதன் மூலமும் எண்ணிக்கை ரீதியிலான ஓர் அளவை நிர்ணயித்துக்கொள்ளலாம் என்கிற ஆசையை சூசகமாக வெளிப்படுத்துகிறார்கள் - தீட்சண்யா) அப்படியான கற்பிதங்கள் இப்படியான மதிப்பிடுதல்களுக்கு உடன்படாத மனிதனாய் எப்போதும் பயணிக்கிற தனித்துவம் பெற்றிருக்கிறார்.

எப்போதுமே தாக்கப்பட்டுக்கொண்டே இருக்கிற ஒரு கூட்டம், எப்போதுமே



வருத்தப்பட்டுக்கொண்டே இருக்கிற ஒரு கூட்டம், அவர்களை எப்போதும் விரட்டிக்கொண்டே இருக்கிற ஒரு கூட்டம் என யாவற்றையும் உள்வாங்கி, சமூகத்தில் அவற்றின் அசைவை மிகச் சரியாகக் கவனப்படுத்திய பெருமை ஆதவன் தீட்சண்யா எழுத்திற்கு உண்டு.

அவருடைய கவிதைகள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு காலகட்டத்தினுடைய அல்லது தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நடக்கக்கூடிய சமூக அவலங்களைக் கருத்துரிமை மிக்க குடிமகனாகவும், விமர்சனப் போக்கு மிகுந்த எழுத்தாளனாகவும் நின்று பதிவுசெய்து கொண்டே வருகிறார்.

அரசை விமர்சிக்கும் போக்கு தூக்கலாக இருக்கிறதே என நிறைய்ய பேர் என்னிடத்தில் தீட்சண்யாவைப் படித்துவிட்டுக் கேட்பார்கள். தூக்கல் இல்லை முழுவதுமே அதுதான். ஆனால், மற்றவர்களிடமிருந்து அவர்



வேறுபடுவதுதான் ஆதவன் தீட்சண்யா யார் என்பதை அறிவிக்கும்.

நாமெல்லாம் அல்லது மக்களெல்லாம் (அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், அறிவு ஜீவிகள், சாமானியர்கள் என யாவரும் உட்பட) ஆட்சி, அரசியலை எப்படி புரிந்து வைத்திருக்கிறோம். இவர்களின் போக்கு நமக்கு எதிர்மறை என்றால் அவர்களின் போக்கைச் சிந்திக்காமல் சாய்ந்துவிடுவோம். அல்லது அவர்களின் போக்கு சரியில்லை என்றால் இப்பக்கம் சரிந்து விடுவோம். இதனிரண்டில்தான் ஆட்சிமாற்ற வண்டிகள் ஓடுகின்றன.

சரி நமக்குச் சாதகமான செய்திகளைச் செய்துவிட்டால் புகழ்வோம், இல்லையென்றால் இகழ்வோம் விமர்சிப்போம், வெறுப்போம் இல்லையா. ஆனால் ஆதவன் அப்படியில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. ஆதவனுடைய எழுத்து அறிவிக்கிற செய்தியை உங்களுக்கு நான் தெரிவிக்கிறேன்.. நான் எனக்காக ஓர் அரசை நிர்மாணிக்கிறேன். அவ்வரசு எனக்கான பணியாள். என் தேவைகளை, என் பாதுகாப்பை உறுதி செய்கிற எனது பணியாள். இதுதான் மக்களாட்சி. எனது நலனுக்காக நீ ஆற்றுவது என்பது உன் கடமை, எனது நன்றிக்குரிய செயலல்ல. நீ ஆற்றுவதை வரவேற்பதில் ஆர்வமும் அக்கறையும் மகிழ்ச்சியும் காட்டும் நான், பாரபட்சமின்றி உன்னுடைய தவறுகளையும் கண்டிப்பேன். விமர்சிப்பேன். அம்பலப்படுத்துவேன். நீ செய்கிறாய் என்பதால் உன்னை ஆராதிக்கப் போவதில்லை. அல்லது ஆராதிப்பதால் உன்னை விமர்சிக்காமல் இருக்கப்போவதுமில்லை. இப்படியானவராக இருக்கிறார் தீட்சண்யா.

ஆட்சி அதிகாரம் நிகழ்த்தும் அரசியலை அம்பலப்படுத்தி மக்களின் ஏமாறும் தன்மையைப் புலப்படுத்துகிறார்.

ஆட்சியாளர்களை அடக்கிட வேண்டிய ஆயுதங்கள் அவர்களின் உள்ளங்கைக்குள் அடங்கிப்போவது முரண்தான். ஓரிடத்தில் ஐரோப்பியச் சித்திரத்தில் வரும் கதாபாத்திரம் அதனுடைய நண்பனுக்கு ஒரு விளையாட்டைக்

கற்பித்துக்கொண்டிருக்கும். அப்போது அது சொல்லும்.. எந்த விளையாட்டிலும் நீயே ஜெயிக்க வேண்டும் என்றால் விதிகளை உருவாக்குபவன் நீயாக இருக்கவேண்டும் என்று. அப்படித்தான் ஆட்சியாளர்கள் மக்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த விளையாட்டில் எப்போதும் அரசியல்வாதிகளே வெற்றி பெறுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

எங்கிருந்து தவறு தொடங்குகிறது? என்று ஒரு கேள்வியை எழுப்பி இறுதியில் எல்லாரும் அதைத்தானே செய்கிறார்கள், இதுதானே நடக்கும் நடக்கிறது என ஒப்புக்குப் பாடி ஒதுங்கிப் போகாமல் யாவற்றையும் ஒருங்கே இணைத்து விமர்சிப்பது என்பதில் எதிலும் சமரசம் இல்லை.

மோனாலிசா 2.0 என்ற கவிதையில், மோனாலிசா படத்திலிருந்து இறங்கி வீதிக்குச் செல்கிறாள். வீதிக்குச் சென்றவள் வீடு திரும்பவேயில்லை. டாவின்சி தேடிச் செல்வதாகவும் அவருடைய மனதில் அவளுக்கு என்னவாகியிருக்கும் என்பதாகவும் அந்தக் கவிதை அமைகிறது.

மாற்றி மாற்றிக் குற்றம் சொல்வது, அடுத்தவர் மேல் பழி போடுவது எனத் தொடங்கி நீதிமன்றங்களின் ஒத்திவைப்பு என்ற பெயரிலான தீர்ப்பு தள்ளிப் போவது வரைக்கும் ஒருங்கே விமர்சிக்கிறார்.

எங்கே அவள் என்பதற்கு,

ரோந்துப் பணியில் இருந்த

காவலர்கள் / இராணுவத்தினர் /
போக்கிலிகள்

தூக்கிச் சென்றிருக்கக்கூடும்

தரகர்கள் யாரேனும் கடத்திப் போய்

பாலியல் சந்தை / பழம் பொருள்
அங்காடிக்கு

பெருத்த விலைக்கு
கைமாற்றியிருக்கக்கூடும்.



எல்லோரும் அழுதுகொண்டிருக்க
வேண்டிய நாட்டில்

இவளுக்கு மட்டும் எதற்கு சிரித்தமுகமென
எரிச்சலடைந்தவர்கள்

ஆசிட் வீசி அவள் முகத்தை
சிதைத்திருக்கலாம்.....

வழக்கு விசாரணை 2016 மே மாதத்திற்கு
ஒத்திவைக்கப்படுகிறது

என ஆதி முதலே பெண்கள் மீது மாறாமல் நிகழ்த்தப்படுகிற வன்மங்களைப் பட்டியலிடுகிறார்.

ஏதேன் தோட்டத்தில் ஹைப்ரிட் ஆப்பிள்

கனிகளனைத்தையும் தின்று தீர்த்தும்

காதலும் துளிர்க்காமல்

காமமும் கிளர்த்தாமல் கற்களெனக் கிடந்த

ஏவாளுக்கும் ஆதாமுக்குமிடையே

தற்கொலை செய்துகிடந்தான் சாத்தான்.

சாத்தான் இல்லாத இவ்வுலகில்

தானிருந்து கிழிக்கப்போவது
ஒன்றுமில்லையென

அவனது கால்மாட்டில் செத்திருந்தார்
கடவுளும்.

இப்படி ஆதியந்தம் என்ற கவிதையில், அறிவியல் முன்னேற்றம் தேவைக்கு, முன்னேற்றத்திற்கு என்பதல்லாமல் இயற்கையைத் துடைத்தெறிவதற்கு, இயல்பை மாற்றிக் குழப்பிப் போடுவதற்கு என மாறிப்போயிருக்கிற சூழலை உணர்த்துகிறார்.

தீங்கனிகளை உண்டவர்கள் அன்று கல்லாகவில்லை. கடினப்பட்டார்கள் அவ்வளவே. சாத்தான் தொந்தரவு இருந்தாலும் காக்க கடவுளும் இருந்தார். ஆனால் ஹைபிரிட் புரட்சியில் பழத்தில் ஒரு பூச்சி கூட வாழவருவதில்லை. மரம் நஞ்சைக் கக்கியது போய் மணலே நஞ்சாகியிருப்பது எத்தகைய அபத்தம் என்பதை உணர்த்துகிறார்.

ஆதவன் தீட்சண்யாவின் எழுத்துக்களில் வெளிப்படும் விமர்சனங்களில், குற்றச்சாட்டுகளில் காத்திரம் மட்டுமல்ல.. நிறைய்ய வேளைகளில் கையிலிருக்கும் பழத்தில் வலிக்காமல் ஊசியேற்றும் பக்குவமும் இருக்கும்.

எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட நிலையில் தன்சார்ந்த நிலைகள், நட்புகள், அவர்களின் கருத்தாக்கங்கள், சிந்தனைகள் யாவற்றையும் அப்படி ஒதுக்கிவைத்துவிட்டு காலத்தின் விமர்சனமாக மாறி எழுத்தாளனுக்கேயுரிய கடமையை ஆற்றும் ஆதவன் தீட்சண்யா இலக்கிய உலகின் தவிர்க்கமுடியாத பக்கங்களில் ஒருவராக மாறி நிற்கிறார். ■

● விஜயராணி மீனாட்சி

சாளரம் திறக்கும் கவிதைகள்



நூல் : பூரண பொற்குடம் (கவிதைகள்)
ஆசிரியர் : பழநிபாரதி
வெளியீடு : கொன்றை
விலை: ரூ.140/-

அன்பிற்கினிய பழநிபாரதி அவர்களின் "பூரண பொற்குடம்" கவிதை நூலில் உள்ள எந்தக் கவிதையைச் சிலாகித்துச் சொல்வதென்று பார்த்தால் எல்லாக் கவிதைகளும் பூரணமாய் நம் மனதில் வந்தமர்ந்து நிரம்பிவிடுகின்றன.

எதைச் சொல்லி எதைவிட? இந்தப் பிரபஞ்ச அழகை ரசிக்க ரசிக்கப் போதாமை சொல்லும் கண்கள் போல, காதலியோடு / காதலனோடு எத்தனை பேசினாலும் இன்னும் இன்னும் பேசத் தூண்டுகிற.. பிரமித்துத் தீராத தாயன்பை.. எத்தனை சொல்கொண்டுதான் நிரப்பிவிட முடியும்? அதுபோல எனக்குக் கைகூடிய தரிசனத்தைச் சொல்லி உங்களுக்கும் சற்றே நகர்ந்து இடம்விடுகிறேன்.

"நூறு கிளைநீட்டி..." எனத் தொடங்கியதிலேயே இயற்கையும் காதலும் வேறுவேறல்ல என்று உணரத் தொடங்கிவிடுகிறோம். காதலே வாழ்வாய் வாழ்பவர்கள் தமது காதல் இணைக்குப் பெயர் சூட்டாமல் இருப்பதேயில்லை. ஏனோ அந்தப் பெயர் படுத்தும் பாடு, கிறங்கடிக்கும் எந்தச் சொல்லும் அந்தப் பெயருக்கு இணையானதில்லை.

மார்பில் உறங்கும் பறவைக்கு வாஞ்சையான இடம் கிடைத்த நிம்மதி. உயிர்களுக்குக் கணந்தோறும் காதலை நினைவூட்டிக்கொண்டே இருப்பவை பறவைகள். அதிலும் குறிப்பாகச் சிட்டுக்குருவிகள்தான் காதலைக் கணந்தோறும் கற்பிப்பவை.

காதலே பறத்தல்தானே.. இங்கே சிட்டுக்குருவி போல உழவாரக்குருவி, தினைக்குருவி, அடைக்கலகுருவி, கபிலக்குருவி, மஞ்சள் குருவி மட்டுமல்லாது தேன்சிட்டு, மாம்பழச்சிட்டு, மழைப்பறவை - சாதகப்பறவை, நீலகண்டப் பறவை, குருகு, புறா, மணிப்புறா, கிளி இவையெல்லாம் பறந்து திரிவதோடு ஆங்காங்கே தும்பியையும் அணிலையும் மீனையும் துணைக்கு அழைத்திருக்கிறார்.

அன்பினால் மனம் பிறழ்ந்த அல்லது மனம் கசிந்த யாருமே நிறுத்திய இடத்தில்தான் நின்றுகொண்டிருக்க நேர்கிறது.

வெக்கை தாங்காப் பறவைகள் நிழல் உலர மரமாய் நதியாய் வனமாய் அவள்....

"எந்தச் சொல்
உனக்கு வாசல் திறந்தது
அல்லது எந்த வரியினடியில்
நீ ஊடுருவினாய்?"

என இந்தக் கேள்விக்குக் காதலியிடமும் விடையிருக்காது. அதுபோல எங்களிடமும் விடையில்லை. ஏனெனில் எதையேனும் ஒரு சொல்லைச் சொன்னால் மற்ற சொற்களெல்லாம் வரிசைகட்டி வசைபாடாதா? (உங்கள் கவிதை போல மென்மையாகத்தான்...)

சொல்லெல்லாம் மழையாய், சுடராய், நிலவாய், விண்மீனாய், மலராய் ஒவ்வோரிடத்திலும் பரிமளிக்கிறது. அதிலும் மழைக்கவிதைகள் ஒவ்வொன்றும் குளிர்கனம். அணையின் கனம் குறைக்கும் மதகு திறத்தல் போல நமக்குள் பல சாளரங்கள் திறக்கின்றன.

சங்கம இரவின் கவிதைகளெல்லாம் அவளோடான உயிர்ப்பையும், அவளற்ற தனிமையின் தவிப்பையும் இரண்டு கோப்பைகளில் பகிரப்படும் தேநீர் சப்தத்தையும் நிசப்தத்தையும் காத்திருத்தலின் கனத்தை ஒருசேரக் கடத்துகின்றன.

நதிபோல நாங்களும் ஒவ்வொரு கவிதையின் ஒவ்வொரு சொல்லிலும் நின்றுதான் நகர்ந்தோம்.

"எது பிரித்ததோ
அதுவே இணைக்கும்"

என்ற நம்பிக்கைதானே காதலுக்கும் வாழ்க்கைக்கும்!!! ■

● சன்மது
● ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

இளங்கொடி

“டேய் தர்மா.. எங்கடா போய்த் தொலஞ்சே.. இந்தப் பாட்டியை வயசான காலத்துல கத்த வைக்கிறே..”

“என்ன பாட்டி சும்மா கத்திக்கிட்டு இருக்கே. நாளைக்குச் சுதந்திர தினம். நம்ம கந்தசாமி அண்ணா இல்ல.. அவரு கொடி கட்ட கூப்பிட்டாரு, அதுனால அங்கதான் இருந்தேன், பாதி வேலதான் முடிஞ்சுது.. இன்னும் கொஞ்சம் கொடி ஒட்டணும். நானும் ராமுந்தான் ஒட்டிட்டு இருந்தோம்..”

“அட போடா போக்கத்த பயலே, உங்க தாத்தா இப்படிதான் சுதந்திரம் சுதந்திரம்னு போய்ச் சேந்துட்டாரு. உங்க அப்பன், உங்கம்மா ஈமச்சடங்கு முடுச்ச கையோடு உன் சித்தியை இழுத்துட்டு ஓடிட்டான். என் ஆயுசு முடியறதுக்குள்ள உன்ன எப்படியாவது படிக்க வச்சு கரை சேர்த்தலானா, நீ தெருத் தெருவாச் சுத்திகிட்டு இருந்தா எப்படிடா... நீ கொடி கட்டலைனா விழா நடக்காதா..”

கத்திக்கொண்டே இருந்தாள் வள்ளியம்மாள். காதில் விழுந்தும் விழாதவனாக மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தான் பத்து வயது தர்மன்.

•

“அட... எவ்வளவு நேரம்டா ஒட்டுவீங்க... கொஞ்ச சீக்கிரம் ஒட்டுனாதான்டாசரத்துல கோர்த்துத் தெரு முழுக்கக் கட்டமுடியும். நாளைக்கு நம்ம ப்ரெசிடெண்ட் அய்யா வாராரு. அப்போதான நம்மளப் பத்தி நல்லதா நினைப்பாரு....”

கந்தசாமி கைநாட்டு ப்ரெசிடென்ட்டிடம் வேலைக்கென வாங்கும் பணத்தில் பாதி விழுங்கிவிடுவான். பணத்தைக் குறைவாகக் கொடுத்து அதிக வேலை வாங்குவான்.

சத்துணவு வேலையை முடித்துவிட்டு வந்த வள்ளியம்மாள் தர்மனைத் தேடினாள். அவனுக்காக வடித்த சாதம் அப்படியே

இருந்தது. வெகுண்ட வள்ளியம்மாள் தர்மனின் வருகைக்காகக் காத்திருந்தாள். மணி இரவு ஒன்பதைக் கடந்திருந்தது.

“பாட்டி பாட்டி.. எனக்குப் பசிக்குது பாட்டி” என்று நுழைந்தான் தர்மன்.

கையில் வைத்திருந்த தொடப்பத்தால் விளாசினாள். தர்மனும் அடி பொறுக்காமல் ஓடி ஒளிந்தான். அன்று இரவு இருவரும் உணவு உட்கொள்ளாமல் பசியோடு உறங்கினர்.

தூக்கம் வராமல் கல்லைக் கொண்டு வெட்டுப்பாக்கை நுணுக்கி வெற்றிலையில் மடித்துக்கொண்டிருந்தாள் வள்ளியம்மாள். எண்பதைக் கடந்த நிலையில் பற்கள் ஒத்துழைக்காததால் எப்போதும் இடித்துக்கொண்டிருப்பாள். அவளுக்குத் துணை அந்த வெற்றிலைப் பாக்கு மட்டுமே.

காலை எழுந்தவுடன் தர்மனைத் தேடினாள். அடி வாங்கிய பயத்தில் ஓடிவிட்டானோ என்று சந்தேகப்படும்படியாக இருந்தது அந்தச் சூழல்.

அன்று ஆகஸ்ட் 15 என்பதால் அவன் சென்ற தெரு சற்று ஆரவாரமாக இருந்தது. அதனால் அவளால் அவனைக் கண்டுகொள்ள முடியவில்லை. யாரிடம் கேட்பதென்று தெரியவில்லை. அந்தத் தெரு சற்று வசதியான தெரு. இவள் இருப்பதோ அந்த ஊருக்கு ஒதுக்குப்புறமாக இருக்கும் ரயில்வே பாலத்தின் அருகே உள்ள தரிசுநிலத்தில். சற்று தயங்கித்தான் அவர்களிடத்தில் பேச வேண்டி இருந்தது. எழுபத்தைந்து வருடங்கள் கடந்தும் இந்த ஏற்றத்தாழ்வுகளுடன் இன்றளவும் நடந்துகொண்டேதான் இருக்கிறது சுதந்திர தினம்.

தேடிப் பார்த்தவள் ஓய்ந்துகொண்டதில் வீடு திரும்பலானாள். வீட்டிலும் அவன் தென்பட்ட பாடு இல்லை.

“விமர்சியாக நடந்துகொண்டிருந்த விழாவில் இவன் எந்த மூலையில் நின்று கொண்டிருக்கானோ... அவர்கள் இவனை எடுபுடியாகத்தான் வைத்துக்கொள்வார்கள். எல்லாம் முடிந்த பின் மிட்டாய் ஒன்றைக் கொடுத்து விரட்டிவிடுவார்கள்... இந்தப்

பையன் ஏன் இப்படிச் சொல்லற பேச்ச கேட்காம அடம்பிடிக்கிறான். நம்ம சுதந்திரம் கொண்டாடுலேனு யாரு அழுதா....” என்று பொருமிக்கொண்டிருந்தாள் வள்ளியம்மாள்.

மாலையில் மிகுந்த அலுப்புடன் வந்தான் தர்மன். அவன் முகம் களைப்பில் வெளிறி இருந்தது.

“ஏன்டா எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டேனு இருந்தா எப்படிடா உருப்படப் போற..”

“இல்ல பாட்டி.. கா...”

“ஏன்டா எவ்வளவு சொன்னாலும்...” என்று அவன் சொல்வதைக் கேட்கத் தயாராக இல்லாத வள்ளியம்மாள் அவன் தலைமுடியைப் பிடித்து ஆட்டினாள்.

வலி தாங்காமல் கத்தியவன் கையிலிருந்த புதிதாய் வாங்கப்பட்ட வெற்றிலை பாக்கு இடிக்கும் உரல் கீழே விழுந்து உருண்ட ஒலி வள்ளியம்மாள் சத்தத்தை அடக்கியது.

இரண்டு நாள் அவன் செய்த வேலைக்குக் கிடைத்த கூலி இன்று ஒரு பாக்கு இடிக்கும் உரலாக மாறி இருந்தது. ■

கவியும் சித்திரமும் : அழ.ரஜினிகாந்தன்

ஊர்மிளை



அங்கே..
தமக்கையிடம்
தன்னிலை விளக்கம்
அளித்துக்கொண்டிருந்தாள்
தழுதழுத்த குரலில் –
தங்கை
தளும்பி வழிந்து
கன்னங்களின்வழியே
இறங்கியது
கண்ணீரென்னும் –
கங்கை....

பிரியமானவளே
உன்னைப்
பிரிய மனமின்றித்தான்
நானும் உன்னைப்
பின்தொடர்ந்து –
வந்தேன்
தமக்கையோடு
வந்து
தசரதன் மாளிகையில்
தங்கினால்
இவ்வுலகம்
தாழ்ச்சியுடன் பேசும்
என்பதால்தான்
இலக்குவனுக்கு
தாரமாக –
வந்தேன்

தன்னவன் ஏற்ற
கடமையை
முடிக்கும்வரை
தாரமானவள்
ஒருபோதும்
அவனுக்கு
பாரமாக
இருக்கக்கூடாது
என்பதால்தான்
அரண்மனையிலேயே
அடம்பிடித்து -
தங்கினேன்
அங்கமெலாம் நோக
ஆழ்துயரத்தில் -
முங்கினேன்
இலக்குவன் கூறிய
இழிசொற்களை
பொறுத்து
இயலாமையில் -
பொங்கினேன்
ஒளியிழந்த
சந்திரனாய்
உற்சாகமின்றி
ஒவ்வொரு நாளும் -
மங்கினேன்...

இந்த
உண்மையறியாமல்
உற்றவனும் என்னை
வெறுக்கிறான்
உற்றுநோக்குகையில்
எல்லாம் முகம் -
கறுக்கிறான்
உடைவாளின்றி
உறுத்தும் பார்வையால்
உள்ளத்தை ஊடுருவி
அறுக்கிறான்
மாபெரும் சபையில்
மனைவிக்கு
தரவேண்டிய
மரியாதையை -
மறுக்கிறான்...

கணவன் ஏற்ற
கடமையை
முடிக்க
காலமெல்லாம் நான்
தூங்கினேன்
அவனது
கடைக்கண்
பார்வைக்காகவும்
காதலுக்காகவும்
காலமெல்லாம் -
ஏங்கினேன்...

உண்மையறியாமல்
என்னை
உதாசீனப்படுத்தும்
அவனுக்கு
நீயாவது -
எடுத்துச்சொல்
அல்லது
உடன்பிறந்த நீயே
என்னை
உடைவாளெடுத்து -
கொல்....
என்று
கதறிய ஊர்மிளையை
கட்டியணைத்துக்
கண்ணீர் வடித்தாள் -
சீதை...

- ஊர்மிளை வருவாள்

● கரிகாலன்

தேநீர் சாலை

லாலி லாலி!

~

நாம் எவ்வளவு கரடுமுரடாக இருக்கிறோம். நமக்கு ஏன் இத்தனை கடின மனம் என்றெல்லாம் சில வேளை எண்ணுவதுண்டு. ஆனாலும், ஒரு பாடல் நம்மை அவிழ்த்துவிடுகிறது.

நமது பாரத்தைக் குறைத்துக் குழந்தையாக்குகிறது. தூளியில் போட்டுத் தாலாட்டுகிறது. இசையருவியில் அப்படியொரு பாடல்.

மாலை போடப்பட்ட ராதிகாவின் புகைப்படம் சுவரில் மாட்டப்பட்டிருக்கும். அவரது குழந்தைகள் வளர்ந்துவிட்டார்கள். இளம் விதவைத் தாயான ராதிகாவுக்கும், ஆட்டிஸம் பாதிக்கப்பட்டு மனம் வளராத கமலுக்கும் இதில் ஒரு அழகிய உறவு மெல்லப் பூத்து மணம் பரப்பும்.

இப்போது ராதிகா இல்லை. வளர்ந்த குழந்தைகளுக்கு அன்னையின் ஞாபகம் பாடல் மூலம் எழுகிறது.

தெலுங்குப் பண்பாட்டின் சாயல் அதிகம் கூடிய பாடல். குழந்தையை ராமனாக கண்ணனாக நினைத்துத் தாலாட்டும் தாயைக் காட்டும் பாடல்.

எந்த மொழியாக இருந்தால் என்ன? தாய்ப்பாசம் ஒன்றுதான். தாய்ப்பாலின் சுவை ஒன்றுதான்.

இந்தப் படம் வந்து 35 ஆண்டுகள் ஆகியிருக்கும். ஆனாலும் காலம் இந்தப் பாடலில் வெளிப்படும் பாசத்தின் மீது பாசி படர அனுமதிக்கவில்லை.

இசையால் இளையராஜாவும், குரலால் சுசிலாவும் தாலாட்டும் பாடல்.

எல்லா மதங்களும் நரகத்தைக் காட்டி 'தப்பு செய்யாதே' எனப் பயமுறுத்துகின்றன. அப்படி ஒரு நரகம் 'புத்'. குழந்தையில்லாத பெண்கள் அடையும் நரகம். இது ஆண்கள் கட்டிய நரகம். புத் நரகத்துக்குத் தாய் போகாமல் காத்த பிள்ளை என்பதால் புத்திரன்! நரகம் போகாது காத்த புத்திரனுக்கு காலமெல்லாம் தாய்கள் பாடிய பாடல்கள் கணக்கெடுக்க முடியாதவை!

பத்து மாதங்கள். எத்தனை இன்னல் அடைந்திருப்பாள். வாட்ச்சையும் செல்ஃபோனையும், என்னால் சேர்ந்தாற்போல் அரைமணி நேரம் சுமக்க முடியாது. என் தாய் என்னைப் பத்து மாதம் சுமந்தாள். வாந்தியும் வயிற்றுநோவும் தாங்கி சூல் காத்த பெருமாட்டி அவள்.

அவள் எங்கோ தனித்திருக்கிறாள். போய்ப் பார்க்க இயலாத நிலை. இந்தப் பாடலின் இரண்டாவது சரணத்திலேயே மளுக்கென்று கண்ணீர் முறிந்தது.

‘லாலி லாலி லாலி லாலி

லாலி லாலி லாலி லாலி

வரம் தந்த சாமிக்கு

பதமான லாலி

ராஜாதிராஜனுக்கு

இதமான லாலி’

கே.விஸ்வநாத் தெலுங்கில் காவியங்கள் படைத்தவர். மனதின் மெல்லிய தந்துகிகளில் கைவைக்கத் தெரிந்த கலைஞன். இளையராஜா, சொல்லவே வேண்டாம். புல்லாங்குழலால் இதய நோய் தீர்க்கும் கார்டியாலஜி மருத்துவர்.

இவரது இன்னொரு அம்மா பாடல். ‘அம்மா என்றழைக்காத உயிரில்லையே!’ அன்னையர் பெருமை சொல்லும் இசைக் காவியம்.

ஒரு பாடலைக் கோயில் சுவரில் எழுதிப் பார்த்திருக்கிறீர்களா? இந்தப் பாடல் வரிகள் முழுவதையும் திருச்சி அய்யப்பன் கோயிலில் எழுதிவைத்திருக்கிறார்கள்.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பது இரண்டாவது வரிதான். முதல் வரி, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதல்லவா.

சுசீலா எனும் இசைக்குயில் செவிகளில் கூடுகட்டிக் கூவும் பாடலிது. சாந்தம் தவழும் முகத்தோடு தூளியாட்டும் ராதிகா உலகத்தின் எல்லா அம்மாக்களுக்கும் உருவகமாகிறார் இப்பாடலில்.

இமைப்பொழுதும் ஈன்ற குழவியைப் பிரியாது, ஈ, எறும்பு தீண்டிடாது காப்பவள் தாய். தண்ணீர் எடுக்கும்போது, கோலம் போடும்போது, தையலைத் தைக்கும்போது, ராதிகா குழந்தையைச் சுமந்தபடியே பாடுகிறார் இப்பாடலை!

இதே பாடலைப் பிறகு தெலுங்கிலும் கேட்டேன்.

‘வடபத்ரசாயிக்கு

வரஹால லாலி

ராஜீவ நேத்ருனிக்கி

ரத்னால லாலி

முரிபால கிருஷ்ணுனிக்கி

முத்யால லாலி

ஜகமேல ஸ்வாமிக்கி

பகடால லாலி’

டாக்டர் சி.வி. நாராயண ரெட்டி என்பவர் எழுதியிருக்கிறார். தமிழில் வைரமுத்து.

‘கல்யாண ராமனுக்கு

கௌசல்யை நானே

யது வம்ச வீரனுக்கு

யசோதை நானே

கரு யானை முகனுக்கு மலையன்னை நானே

பார் போற்றும் முருகனுக்குப் பார்வதியும் நானே’

எந்த மொழியாய் இருந்தால் என்ன அம்மா ஒன்றுதான்.

‘என்னப் பெத்த சாமி!’ என்று தான் பெத்த பிள்ளையைக் கொஞ்சுபவள். இந்தப் பாடல் வரிகளில், பெத்த பிள்ளையைக் கடவுளாகக் கருதிக் கொஞ்சும் தாய்மை வெளிப்படுகிறது.

‘ஆனந்தக் கண்ணனுக்கு

ஆழ்வாரும் நானே

ஸ்ரீராமன் பாட வந்த

கம்ப நாடன் நானே

ராம ராஜனுக்கு

வால்மீகி நானே

ஆகாய வண்ணனுக்குத் தியாகைய்யர் நானே'

தாய்மை என்றால் முதன்மை என்று பொருள். உலகத்தின் முதல் உறவு. அம்மம் என்றால் முலை. முலையால் அமுதூட்டி நம்மை ஆளாக்கிய உறவு அம்மா!

கரிகாலனுக்கு ஒரு பழைய வீடு மருங்கூரில் இருக்கிறது. செங்கல்லாலும் நாட்டு ஓடுகளாலும் மட்டும் அல்ல. அன்பையும் பாசத்தையும் பிசைந்து எழுப்பிய வீடது. அதிலொரு சிறு அறை.

காலத்தால் பழுத்த உத்திரத்தில், பழம் புடவையொன்றால் கட்டிய தூளி அதில் தொங்குகிறது.

'லாலி லாலி லாலி லாலி

லாலி லாலி லாலி லாலி'

அவன் தாய் ராசலட்சுமி பாடுகிறாள். அவளுக்கு சுசிலா குரல் இல்லை. ராகம் தெரியாத கிராமத்துக் குயில் அவள். அன்பின் இசையில் எழுந்தது அவள் தாலாட்டு.

காலத்தின் எல்லாக் கதவுகளையும் திறக்கும் அப்பாடல் அவன் கண்ணீரின் தாழையும் திறக்கிறது.

அழ ஆசை கொள்கிற எல்லோரும் இத்தாலாட்டைக் கேளுங்கள்!

• •

பக்தி இலக்கிய வாசிப்பு!

~

எனது நாத்திக மனம் பக்தி இலக்கியங்களை வாசிப்பதில் எந்த இடையூறையும் ஏற்படுத்துவதில்லை. அதனால்தான் தினகரன் ஆன்மீகம் போன்றவற்றையும் நான் வாசிப்பதுண்டு.

'தாயின் காலடியில் சொர்க்கம் இருக்கிறது!' என்கிற நபிகளின் சிந்தனையை, சிராஜூல்ஹசன் என்பவர், இந்த வாரம் தினகரன் ஆன்மீக இணைப்பில், விளக்கி எழுதியிருந்தார்.

நபிகளின் தோழர் ஒருவரால் மரணப்படுக்கையில் கலிமா சொல்ல முடியவில்லை. அவரது தாயின் கோபமே இதற்குக் காரணம் என நபிகள் அறிகிறார். தாயிடம் சென்று மகனை மன்னிக்க வேண்டுகிறார்.

தாயோ, மகன் தனக்கு செய்த தீங்கை எண்ணித் தயங்குகிறார். நபிகள், அந்த மகனுக்குத் தீக்குண்டம் தயார் செய்யக் கோருகிறார். தன் மகன் நரகத்துக்குச் செல்வானே! என நடுங்கும் தாய், 'இறைதூதரே என் மகனை மன்னித்தேன்!' என்கிறார். மகனின் திருவாய் கலிமாவை மொழிகிறது. இறைவனைப் புகழ்ந்த மகன் உயிர் விடுதலை அடைகிறது. தாயின் மேன்மையைக் காட்டும் சிந்தனை.

குர்ரான், பைபிள் அனைத்தும் பக்தி இலக்கியங்களே. Northrop Frye என்பவர், 'The Bible as Literature' என்று நூலே எழுதியிருக்கிறார்.

பக்தியை, பக்தி இலக்கியத்தை, திராவிட இயக்கங்கள் அணுகும் முறை வேறு. பொதுவுடைமை இயக்கங்கள் அணுகும் விதம் வேறு!

இந்து மதத்தில் கடவுளின் பேரால் தீண்டாமையும், பெண்ணடிமையும் நிகழ்வதால் கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்! என்றார் பெரியார். அதேவேளை கடவுளை நம்புகிறவர்கள் எல்லோரும் காட்டுமிராண்டிகள்! எனக் கருத என் நெகிழ்ந்த மனநிலை இடம் தரவில்லை.

மதம் emotions and feelings தொடர்புடையது. இதில் மதிப்பச்சம், வியப்பு, பயபக்தி என நிறைய உணர்நிலைகள் அடங்கியிருக்கின்றன.

பொதுவுடைமை இயக்கமோ திராவிட இயக்கங்கள் அளவு மக்களின் பக்தி மனநிலையைக் காட்டமாக எதிர்க்கவில்லை. அண்ணா, திமுக ஆரம்பித்த பிறகு பக்தி இலக்கியத்திலிருந்து 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்!' என்ற வாசகத்தை எடுத்தாண்டு பெரியாரிலிருந்து நெகிழ்ந்தார்.

பொதுவுடைமைச் சமூகம் மலரும்போது பக்தி குறித்த முற்போக்கான மனநிலை மக்களிடம் ஏற்படும் என இடதுசாரிகள் கருதினர். பக்தி இலக்கியங்களை, இடது அமைப்புகள் முற்றாகப் புறந்தள்ளவில்லை. ‘மனித இனத்தினால் தோற்றுவிக்கப்பட்ட அனைத்து இலக்கியங்களின் மூலமும் அறிவை வளர்த்துக் கொள்பவனே கம்யூனிஸ்ட் ஆக முடியும்!’ என்றார் லெனின்.

‘பக்தி’ என்பது சமற்கிருதச் சொல். ‘பஜ்’ எனும் சொல்லிலிருந்து உருவானது. ‘பிரி, வழங்கு, பகிர்ந்துகொள், சேர்ந்து பெற்றுக்கொள், அனுபவி’ போன்ற அர்த்தங்களை உடையது.

தமிழ் இலக்கியத்தில் பக்தி இலக்கியத்தை கழித்தால் நீண்ட வெறுமையே மிஞ்சும். சமணம், பௌத்தம், ஆசீவகம், சைவம், வைணவம், கிறித்துவம் என எல்லா மதங்களும் மெய்மையைத் தேடும் மிகச் செழித்த ஊடகமாகத் தமிழ்மொழி திகழ்ந்தது, திகழ்கிறது.

சமண பௌத்த இலக்கியங்கள், வணிகச் சமூகத்தின் வளர்ச்சியில் தோன்றியவை. சைவமும் வைணவமும் நிலவுடைமைச் சமூகத்தில் தோன்றியவை. சமணம் பௌத்தம் விதி, துறவு பற்றிப் பேசுகின்றன. சைவம், வைணவம் போன்றவை இல்லறத்தோடு கலந்து பக்தியைப் பேசுகின்றன. ‘மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்!’ என்கிற தேவாரப் பாடலில் இருந்து இதை நாம் அறியலாம்.

சைவ, வைணவப் பக்தி இலக்கியங்கள் உச்சத்தில் இருந்த காலம், கிபி 500 - கி.பி 900. சங்க இலக்கிய அகமரபுகளைக் கொண்டே பக்தி இலக்கியங்கள் இங்கு வளர்ந்தன. ஆண்டாள், ஆழ்வார்கள் கடவுளிடம் காதலால் கசிந்துருகினார்கள். சங்க இலக்கியப் பரிபாடல் பெரும்பாலும், வழிபாட்டு முறைகளை உள்ளடக்கிய பாடல்களே!

நபிகள் நாயகத்தில் தொடங்கினேன். இசுலாமியப் பக்தி இலக்கியங்கள் நீண்ட காலப் பின்னணி உடையவை. இவை போர்ச்சுகீசியர்களால் அழிக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு என ஆய்வறிஞர்கள் கருதுகின்றனர்.

சாண்டில்யன் யவனராணி என்ற நாவல் எழுதியிருப்பார். யவனர்களும் இசுலாமியர்களே. மசலா, நாமா, கிஸ்ஸா, முனாஜாத்து, திருமண வாழ்த்து, நொண்டி நாடகம் போன்ற இலக்கிய வடிவங்கள், இசுலாம் இலக்கியம் தமிழுக்கு அளித்தவையாகும்.

மசலா என்பது புதிர் வினா / விடைத் தன்மை கொண்டது. சக்கரவர்த்தித் திருமகன் படத்தில் எம்ஜிஆரும் என்எஸ்கேயும் இத்தகைய ‘மசலா’ பாடல் ஒன்றைப் பாடுவார்கள். எம்ஜிஆர், ‘உலகத்திலே பயங்கரமான ஆயுதமெது?’ என்பார். என்எஸ்கே, ‘கத்தி, கோடறி, ஈட்டி’ என்பார். எம்ஜிஆர் ‘இல்லை, நிலைகெட்டுபோன நயவஞ்சகரின் நாக்குதான் அது!’ என்று பதிலுரைப்பார். பலர் கேட்டிருப்பீர்கள்.

16ஆம் நூற்றாண்டில், ஆலிம் புலவரால் எழுதப்பட்ட மெஹ்ராஜ் மாலையிலிருந்து அதிகாரபூர்வத் தமிழ் இஸ்லாம் பக்தி இலக்கியம் தொடங்குகிறது.

திருக்குறளுக்கு உரையெழுதிய போப், பரிமேலழகர் போன்றோரிடமிருந்து மாறுபட்டு எழுதுகிறார். கிறித்துவத்தில் ஊழ் இல்லை. இதுபோன்ற இடங்களில் கிறித்துவ நம்பிக்கையை ஒட்டிய வகையில் போப் உரை எழுதுகிறார். கலைஞர் எழுமை எனத் திருக்குறளில் வரும்போதெல்லாம் ஏழு பிறப்பு என்று கூறாமல், காலமெல்லாம், ஏழு தலைமுறை என்று விளக்கம் கூறுகிறார்.

ஆகவே, நவீனத் தமிழ் வாசிப்பு என்பது பக்தி இலக்கியங்களை ஊன்றிப் படிக்காமல் முழுமை அடையாது!



கற்பதுவே.. கேட்பதுவே..!

கடங்கநேரியான்

தமிழ்க் கவிஞர்களிடத்தில் 'லாபி' செய்யும் கெட்ட பழக்கம் அதிகம் இருப்பதாக உங்கள் நேர்காணல் ஒன்றின்வழி அறிய நேர்ந்தது. அதைக் குறித்துக் கொஞ்சம் வெளிப்படையாகப் பகிர்ந்துகொள்ள முடியுமா?

கிசுகிசு மற்றும் சர்ச்சைகளின் வழியாகவே இன்றைய நிலையை சேப்பியன்ஸ் இனம் அடைந்திருப்பதாக யுவால் நோவா ஹராரி சொல்கிறார். குழு வாதத்திற்கும் சண்டை சச்சரவுகளுக்கும் பேர் போனது தமிழ் இலக்கிய உலகம். ஒரு படைப்பு / படைப்பாளி பேசப்படுவதற்கு மத / சாதிய / இணங்கிப் போகும் தன்மை இங்கே பிரதானமாக இருக்கிறது. இது ஒரு படைப்பிற்கான விமர்சனக் கூட்டம் நடத்துவதிலிருந்து விருது வழங்குவது வரை வளர்ந்திருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் சொல்கிறேன். மனுஷி பாரதிக்கு யுவபுரஷ்கார் விருதினைப் பிரபஞ்சன் பரிந்துரை செய்யாதிருந்தால் அவருக்கு அந்த விருது கிடைத்திருக்காது என்பதனை இலக்கியம் வாசிக்கும் / படைக்கும் அனைவரும் அறிவர். (ஒருவேளை நீங்கள் முரண்பட்டால் அந்தப் படைப்பு எவ்விதத்தில் தகுதியானது எனச் சொன்னால் விவாதிக்க நானும் தயார்.)

கவிதைத் திருட்டு, கதைத் திருட்டு போன்ற செய்திகள் தமிழ் கலை இலக்கியத்தில் தொடர்ந்து பெரிய பஞ்சாயத்தாகிக் கொண்டிருக்கின்றன. ஏன் இதெல்லாம் நடக்கிறது? சிந்தனை வற்றிப்போனவர்களின் கூட்டம் அதிகமாகிவிட்டதா?

நீங்கள் சொல்வது போல அப்படியான பெரிய பஞ்சாயத்து எதுவும் நிகழவில்லை. மனுஷ்யபுத்திரன் தன்னுடைய கவிதையினைத் திருடிவிட்டதாக தமிழ் மணவாளன், பழனி பாரதி போன்றவர்கள் தனிப்பட்ட பேச்சில் சொல்லியிருக்கிறார்களே தவிர ஆவணப்படுத்தியது குறைவு.

என்னளவில் பிரபல தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கும் மனுஷ்யபுத்திரனுக்கும் எனக்குமான வெகுஜனத் தொடர்பு மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு. ஆகவே என்னுடைய கவிதையை மனுஷ்யபுத்திரன் திருடியதை எழுதித்தான் ஆக வேண்டும்.

எழுதுவதைக் குறைத்துக்கொண்டு கவிதை சார்ந்த விவாதத்திற்கான களத்தை அதிகரித்துக் கொண்டிருக்கிறீர்கள். இப்படி விவாதத்தைக் கிளப்பிவிடுவதை ஒரு படைப்பாளனின் அடுத்த கட்ட பரிணாமமாக எடுத்துக்கொள்ளலாமா?

எழுதுவதை நிறுத்தவில்லை. சூழ்நிலை சார்ந்து மௌனமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறேன். என்னதான் சமூகம் / இலக்கியம் சார்ந்து செயல்பட்டாலும் வீட்டிற்குள் நுழையும்போது அன்றைய நாளில் எவ்வளவு சம்பாதித்து வந்திருக்கிறேன் என்பதைத்தான் மனைவி பார்ப்பார். லட்சியவாதத்திற்கும் அதனையடையப் போராடும் கலைஞனின் இயல்பு வாழ்விற்கும் மிகப்பெரிய இடைவெளி இருக்கிறது.

நான் என்னுடைய வேர்களை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறேன். எழுதுவதைவிட செயல்பாடு மிக முக்கியம். நான் நேசித்த நிலத்தில் ஈனஸ்வரத்தில் அதனை ஒலிக்கச் செய்துகொண்டிருக்கிறேன். விவாதத்தைத் துவக்க மீச்சிறு தீப்பொறி போதும். அதற்கான தேவை இருக்கிறதுதான். அதே நேரம் எல்லோரையும் பகைத்துக்கொண்டு உருவாக்கிய விவாதங்களில் கிடைத்தது என்ன?

• •

தி.பரமேசுவரி

சங்கக் கவிதைகளைப் பயிற்றுவிக்கும்போது மனித வாழ்வை, அவர்தம் உணர்வுகளை, சமூகக் காட்சிகளை, பல்வேறு தளத்தில் இயங்கும் அதன் செவ்வியல் குணத்தைக் குறித்தெல்லாம் விரிந்துபட்ட நிலையில் மாணவர்களோடு உரையாட முடிகிறது. ஆனால், சமகாலக் கவிதைகளைப் பயிற்றுவிக்கும்போது சில நிமிடங்களிலேயே ஆழ்ந்த மௌனம்தான் வகுப்பில் நிலவுகிறது. இப்படி நிகழ்வது ஏன்? (கவிஞராக மட்டுமின்றி ஓர் ஆசிரியராக இருப்பதாலும் இந்தக் கேள்வி உங்களுக்கு வருகிறது.)

சங்கக் கவிதைகள் திணைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அதில் நிலமும் பொழுதும் பறவைகளும் பூக்களும் விலங்குகளுமான இயற்கையின் பங்கு இருக்கிறது. அதன் ஊடாக மனிதர்களின் நுண்ணுணர்வுகள் பேசப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு இழைகளில் ஊடாடி மனித வாழ்வைப் பேசுகின்றன. எனவே அவற்றை பேசப் புகும்போது அக்காலச் சூழல், அதன் பின்னணி, அதில் தொழிற்படும் வாழ்வு என இக்காலத்தில் நின்று அதன் செவ்வியல் தன்மையை விரிவாகப் பேச முடிகிறது.

சமகாலக் கவிதைகள் நிலங்களில் இருந்து வெளியேறி மனவெளியில் உலவுகின்றன. புறச் சூழலின் இறுக்கம் அகத்தை மேலும் இறுக்கமாக்குகிறது. ஒருவகையில் அப்போதை விடவும் பன்மைக்குரல்கள் எழுந்த காலம் என்று இக்காலத்தைச் சொல்ல முடியும். எழுத வந்திருப்பவர்களில் பல்வேறு தரப்பினர் இருக்கின்றனர். பெண்ணியம், தலித்தியல், சூழலியம் என ஒடுக்கப்பட்ட குரல்கள் மேலெழுந்திருக்கின்றன. சமகாலக் கவிதைகளைப் பயிற்றுவிப்பதற்கு அதற்குள் வாசிப்பு தேவை. இன்றைய கல்விச் சூழலில் அதற்கு இடமில்லை. இன்றைய சூழல் குறித்தும் கவிதையில் அதன் பங்கு பற்றியும் அதன் நோக்கம் குறித்தும் மாணவர்களுக்குக் கற்பிப்பதில் வேறு வேறு முறைகளை முயல வேண்டும். முக்கியமாக மாணவர்களுடன் தொடர்ந்து உரையாடுவதே அதைச் சாத்தியப்படுத்தும்.

கவிதை எழுதுவது ஓர் உள்ளக் கிடக்கை, ஓர் ஆறுதல், ஒரு வடிகால் என்றெல்லாம் கூறுவதை எப்படிப் பார்க்கிறீர்கள்? குறிப்பாக தமிழ்க் கவிதை மரபில் இந்த மாதிரியான போக்கு புதுக்கவிதைக் காலத்துக்குப் பின்புதான் தொடங்குகிறதென்று நினைக்கிறேன். அதுவும்

நிகழ்காலத்தில் அச்சிந்தனை கொடிகட்டிப் பறக்கிறது. உங்கள் கருத்து என்ன?

எனக்குக் கவிதை எழுதுவது ஓர் உள்ளக்கிடக்கை ஆகவும் ஆறுதலாகவும் வடிகாலாகவும் இருந்திருக்கிறது. வெளிப்படுத்த முடியாத ஒடுக்கப்பட்ட உணர்வுகளை, வெளிப்படுத்த முடியாத சூழலில், கட்டுப்படுத்த முடியாத உணர்வுச் சிதறல்களிலிருந்து பொங்கும் சொற்களை நான் காகிதத்தில் எழுதிப் பூட்டியிருந்தேன். அவற்றுள் சில கவிதைகள் ஆகி இருக்கலாம். ஆனால் இப்படியான மனக்குமுறல்கள் எல்லாமும் கவிதைகள் அல்ல என்று பிற்பாடு உணர்ந்தேன். அதுமட்டுமல்ல கவிதை எழுதுவது; என் வலி என்பது என்னுடையது மட்டும் அல்ல என்பதும் புரிந்தது. இன்னும் விரிவான பார்வையில் உலகில் உள்ள அத்தனையையும் கவிதைக்குள் கவனிக்க முடியும். நம்முடைய அகமும் புறமும் அகப்புறச் சூழலுடன் முரண்பட்டும் பிணைந்தும் எழும் தீவிரமே கவிதை என்பேன். கவிதை எனக்குத் தரும் அனுபவத்தை எழுத்தாக்க, தொடர்ந்து முயல்கிறேன்.

ஒரு கலைப்படைப்பு ரசிகரையோ, பார்வையாளரையோ, வாசகரையோ பொருட்படுத்தத் தேவையில்லை. அது தன்னளவில் ஒரு கலையாக நின்றால் போதும் என்கிற கருத்தை எவ்வாறு எடுத்துக் கொள்கிறீர்கள்?

கலைப்படைப்பு ரசிகரையோ பார்வையாளரையோ வாசகரையோ பொருட்படுத்தத் தேவையில்லை. அது தன்னளவில் ஒரு கலையாக நின்றால் போதும் என்பதைக் கலை கலைக்காக, கலை மக்களுக்காக என்னும் பழைய விவாதம் என்றே புரிந்துகொள்கிறேன். கலைப்படைப்பு என்பதை எழுத்தாக எடுத்துக்கொண்டு என்னளவில் விடை தேடுகிறேன்.

இந்தக் கேள்வி பாரதிக்கோ ஜெயகாந்தனுக்கோ புதுமைப்பித்தனுக்கோ இல்லை. அவர்களிடமிருந்து படைப்பு எப்படிப் போய்ச் சேர வேண்டுமோ அப்படிச் சென்று சேர்ந்தது. உடனடிப் பயன் மதிப்பீடுகளைக் கருதாது காலம் கடந்தும் நம்மை வழிநடத்தும், மேன்மை செய்யும் இலக்கியங்கள் நம்மை நாடி வரும்; நாம் அதை நாடிச் செல்வோம். இலக்கியத்தில் ஆர்வம் இருக்கக்கூடிய அரசியலாளர்களுக்கே இத்தகைய சந்தேகங்கள் எழுகின்றன. அது தன்னளவில் கலையாக நின்றாலே போதும் என்று சொன்னால் அவர்கள், பிறரை மதிக்க மாட்டார்கள் என்று பொருளில்லை.

• •

எஸ்.ஜெ.சிவசங்கர்



காலம் இதையெல்லாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளாது. காலத்தின் சேமிப்பில் ஒரு பைசா கூட தேறாது. காலம் கழிவாக மாற்றி எங்கேனும் எச்சமிட்டு விடும்... இந்தச் சொற்றொடருக்கெல்லாம் சொந்தமான கவிதைகள் என்பவை எவை?

சாஸ்வதமான கவிதைகள், காலம் தாண்டி நிற்கும் கவிதைகள் என்பதில் எல்லாம் எனக்கு நம்பிக்கைகள் இல்லை. வாய்மொழி மரபில் காலங்கள் தாண்டி கவிதைகள் கடத்தப்பட்டது உண்மைதான். இசை வடிவம், பா வடிவம் எல்லாம் அதற்காக உருவானதே. மனனம் செய்ய ஏதுவாய் இசை வடிவம் இருப்பதை இன்னும் இலத்தீன் அமெரிக்கக் கேரளக் கவிதைகளில் காணமுடியும். "நந்தவனத்தில் ஓர் ஆண்டி" இன்னும் காலத்தின் முன் புதிதாய் நிற்பது வாய்மொழி மரபின் வீரியமும் அந்த இசை வடிவமும் தந்த கொடை. எழுத்துமரபு

வந்தபிறகு சிறந்த கவிதை எது, காலத்தைத் தாண்டி நிற்க வேண்டியது எது என்பதைத் தீர்மானிப்பதில் அரசியல் சார்பு உள்ளிட்ட பல கூறுகள் உள்நுழைந்துவிட்டன. வெறும் பிரதியாய் இருப்பதை இலக்கியமாய் உயர்த்த உரை / மதிப்பீடு / விமர்சனம் எனப் பலதும் தேவைப்பட்டது. இவையெல்லாம் யார் யாருக்காக செய்தார்கள் என்பதே அரசியல்.

ஆற்றுப்படையில் வலம் வந்த அத்தனை பாணர்களின் கவிதைகள் என்ன ஆனது எங்கே போனது என்பது இன்னும் விளங்காத புதிர். பாட்டும் தொகையும் (சங்க இலக்கியம்) உண்மையில் திரட்டுதான், மொத்தத் தொகுப்பல்ல. அதில் மறைக்கப்பட்ட மறக்கப்பட்ட எத்தனை எத்தனை கவிஞர்கள். ஏன் பாரதியின் காலத்தில் வாழ்ந்த வேறு கவிஞர்களின் பெயர் நமக்குக் காலம் கடந்தும் கடத்தப்படவில்லை? யாருடைய கவிதைகள் காலத்தைத் தாண்டி நிற்க வேண்டும் என்பது எப்போதும் இப்போதும் அரசியல் சார்ந்ததுதான்.

உள்ளீடுகளை வைத்துச் சொல்வதென்றால் கவிதைகள் பயிலும் அரசியல் / நிலம் / அகம் எதுவாக இருந்தாலும் அதில் அடிப்படையான நேர்மை இருந்துவிட்டால் அது தன்னளவில் எல்லாக் காலத்துக்குமானது. “In eternity there is indeed something true and sublime” என ஹென்றி டேவிட் தோரா சொன்னதுதான் நினைவுக்கு வருகிறது. சுயமற்றவை (Fake) எப்போதும் காலத்தின் முன்னால் நிற்பதில்லை.

வடிவத்தில், உள்ளடக்கத்தில், புதிய சொற்கட்டுமானத்தில், நுட்பங்களை உய்த்துணர்தலில் ஒரு கவிதை தனித்துவமானதாகிவிடுமா?

முதலில் கவிதை என்றால் என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளே வகுத்துக்கொள்ள வேண்டும். மூத்த கவிஞர்கள் பலரும் இந்த வரையறையை எப்போதும் அரூபமாகவே விளக்கிச் சென்றிருக்கிறார்கள் அல்லது கவிதையை விளக்க முடியாது என்று தப்பித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் ரொம்பவும் எளிமையாகக் கவிதை குறித்து நான் புரிந்துகொண்டதைச் சொல்கிறேன். தனிநபர் அனுபவங்கள் தனித்துவமானது பொதுவில் வைக்க முடியாதது (ஆன்மீக அனுபவம்). விஞ்ஞான கண்டுபிடிப்புகள் தனி அனுபவத்தைப் பொதுவில் வைப்பது, எல்லோருக்குமானது (யார் ஸ்விட்சைப் போட்டாலும் விளக்கு எரியும்).

கவிதை அனுபவம் என்பது பொதுவில் இருக்கும் ஒன்றைச் சுயஅனுபவத்தோடு புதிய கோணத்தில் அணுகிப் பின் பொதுவில் வைப்பது. இப்போது பொது அனுபவத்தில் இந்தச் சுய அனுபவமும் சேர்ந்துவிடுகிறது. (எல்லோரும் பார்க்கும் நிலவைக் கவிஞன் வேறொன்றாய் முன்வைக்கிறான். அதைப் படித்தபின் நமக்கு நிலவுக்குப் பதில் ரொட்டி தெரிகிறது / முந்திரிப் பருப்பு தெரிகிறது / நறுக்கிப் போட்ட நகம் தெரிகிறது). இது அரசியல் கவிதைகளுக்கும் பொருந்தும். எல்லோருடைய பார்வையிலிருந்தும் விலகிப் புதிய பார்வையை / தலைகீழாக்கத்தை / கலைப்பதைச் செய்வதுதான் கவிதையின் முதல் வேலை (கவிதைகளுக்குக் கொஞ்சம் கூடுதல் வேலைகளும் இருப்பதை மறுப்பதற்கில்லை). ஒவ்வொருவருக்கும் வேறுபடும் இந்த வரையறையே அவரைத் தனித்துவமானவராக மாற்றுகிறது.

எல்லாத் தொழில்களையும் போலவே அதற்கான உழைப்பற்று வரும் கவிதைகள் என்ன தொழில்நுட்பங்களோடு வந்தாலும் பல்லிளித்துவிடுகின்றன. மேலும் “கவிதையே என்னை மன்னித்துவிடு.. நீ சொற்களால் மட்டும் ஆனதல்ல என்பதை உனக்கு நினைவூட்டுவதற்கு” என்று ரோக் டால்டனின் வரிகளையும் பொருத்திப் பார்க்கலாம்.

சற்று நிதானமாக யோசித்தால், கவிதைகள் நம் கைரேகைகளைப் போல. ஒவ்வொன்றும் தனித்துவமானவை. இதில் படிநிலை தேவையற்றது என்பது என் அபிப்ராயம்.

உலகளவில் பேசப்பட வேண்டிய தமிழ்க் கவிதைகள் சமகாலத்தில் எழுதப்படுகின்றன என்று நினைக்கிறேன். உங்கள் அவதானிப்பு என்னவாக இருக்கிறது?

நிச்சயமாக, பெரிதும் கொண்டாடப்பட்ட சில மேற்குலகக் கவிதைகளை ஒப்பிடும்போது

இது தெரிகிறது. இந்திய அளவில் கூட சமகாலத் தமிழ்க் கவிதைகளின் பரப்பு தனித்துவமானது. உள்ளடக்க ரீதியாகவும் வடிவ ரீதியாகவும் தமிழ்க் கவிதைகள் பிரதேச எல்லைகளைத் தாண்டிப் பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளன. பல்வேறு நிலப்பரப்பு / பல்வேறு இனக்குழுக்கள் / புது மொழி / வடிவம் / பன்மையான வட்டார வழக்குகள் / அரசியல் / மெய்யியல் / நாட்டார் வழக்காற்றியல் / விஞ்ஞானம் எனப் பல்துறை ஊடாட்டம்.. தமிழ்க் கவிதைகள் ஆங்கிலம் / பிரெஞ்சு / ஸ்பானிஷ் / அராபிக் மொழிகளில் பெயர்க்கப்பட்டால் அதன் காத்திரத்தை உலகு அறியும்.

• •

கணேசகுமாரன்

சொந்த அனுபவமாக இருந்தாலும் அதைக் கவிதையாக்கும்போது அதுவோர் உலகளாவிய அனுபவமாக மாறும் கணத்தை ஒரு கவிஞன் உருவாக்கிவிடுகிறான். எப்படி இது சாத்தியமாகிறது?

எல்லோருக்குமான அனுபவத்தையே கவிஞன் எழுதுகிறான். அதனாலேயே எல்லோரின் வாழ்க்கையையும் வாழ்பவனாகவே கவிஞன் கருதப்படுகிறான். தனது துயரை, மகிழ்வை, குற்ற உணர்வை இன்னொருவனின் எழுத்தில் காண நேரிடும்போது அதைத் தனக்கான எழுத்தாக மாற்றி உலகளாவிய அனுபவமாக மாறுகிறது கவிதை.

கவிதையில் அசல் நகல் என்ற பார்வைகள் வைக்கப்படுகின்றனவே, எதை வைத்து அந்தப் பார்வைகள் தீர்மானிக்கப்படுகின்றன?

அசல் கவிதைகள் என நாம் வகைப்படுத்துவது கவிஞனின் நிலம் சார்ந்து, வாழ்வு சார்ந்து முன்வைக்கப்படும் கவிதைகளெனக் கொள்ளலாம். என்னதான் வலி பொதுவானது என்று நாம் முன் வைக்கும் வாதங்கள் இருந்தாலும் அனுபவித்த துயரை உண்மைக்கு மிக அருகில் அணுக இயலாது என்பதே என் கருத்து. நகல் கவிதைகள் என்பதைக் காப்பியடிக்கப்பட்டவை எனக் கொண்டால் காப்பி காட்டிக்கொடுத்துவிடும். அதை விலக்குவதே நலம்.

போலியான, அழுக்கான, அச்சம் தரக்கூடிய, பாசாங்குடைய மனிதப் பண்புகளைக் கவிதையில் எழுதும்போது ஒரு கவிஞன் நேர்மையான ஒரு விசாரணையைத் தனக்குள் நடத்துகிறான். அப்போது அவன் கண்டறியும் அதிர்ச்சியான உண்மைகளை எப்படி எதிர்கொள்வது?

நேர்மையான விசாரணைக்குத் தன்னை ஒப்புக் கொள்பவன் வெளிப்படும் உண்மைகள் குறித்துக் கவலை கொள்ள மாட்டான். அதில் அதிர்ச்சிக்கு வேலையில்லை. கேள்வியை நான் சரியாக உள் வாங்கிக்கொள்ளவில்லையென்றால் போலி பாசாங்கினைக் கவிதையில் கையாளும் கவிஞன் அதில் ஓர் எள்ளலையோ கடும் குற்றச்சாட்டையோ முன்வைத்து நகர்வான். அத்துடன் அவனின் வேலை கவிதையின் வேலை முடிந்தது. எதிர்கொள்பவர்கள் பிறர் என்றால் கவிதை அந்தப் பணியைத்தானே செய்யும். உண்மை உணர்ந்து வாசகன் விலகலாம். இல்லை அந்த அதிர்ச்சிகரமான உண்மையுடன் வாழப் பழகிக் கொள்ளலாம். ■

● கவிஞர் ஆதிரை

மயில் நிலையம், சிறந்த நூல் நிலையம்

நூல் : மயில் நிலையம் (கவிதைத் தொகுப்பு)

ஆசிரியர் : கவிஞர் தேவரசிகன்

வெளியீடு : அன்னம், மனை எண் 1, நிர்மலா நகர், தஞ்சாவூர் - 613007,

annamakaram@gmail.com

தொலைபேசி : 94431 59371

விலை : ரூ.140/-

முகப்புப் படத்திற்கான கவிதைகளைத் தேடுவதாகவே அமைந்திருந்தது - கவிதைகளைப் படிக்க நூலைத் திறக்கும் தருணம்.

சில பக்கங்கள் ஏனோ நான் படிக்கத் தொடர்பு இல்லாததாக உள்ளம் உணர்த்திட, "என்னுரையில்" விழிகள் தானே நிலைகுத்தி நின்றன. ஆழமாய்ப் படிக்கத் தொடங்கியதும்தான் கவிஞர் தேவரசிகன் அவர்களின் மிக எளிமையான நடை, விழிக்குள் பதியத் தொடங்கிட, சில சொற்கள் எனக்கு மிகப் புதியதாய்ப் புலப்பட்டன. ஒருவேளை, அவைகள், திசைச்சொற்களாகவும், பிறமொழிச் சொற்களாகவும் அமைந்திருந்ததே காரணம் போலும்.

சரி! கவிதைகளுக்குள் பயணிக்கிறேன்.

ஒளி உமிழும் மின்மினியைப் பார்த்த கண்கள், மொழிநடையைக் கொஞ்சம் ரசிக்கத் தொடங்கிற்று. உடன், பட்டாம்பூச்சிகளைக் கையில் பிடிக்க, அதன் நிறங்களாய்க் கவிதைகளின் ஆழம் என்னுள் நிலைத்துப்போனது.

உலகமயமாதலைப் பறவைகளின் வலசை போதலுக்கு ஒப்பிட எத்தனை பெரிய உலகியல் பார்வை கவிஞருக்கு.

தொலைந்து போனவர்களின் விளம்பரங்களில் காக்கைகள் காணப்படுவதில்லை. காக்கைகளுடன் என்றும் பொருந்தி நிற்கும் "ஏமாற்றம்" என்னும் மீப்பேர் விடயத்தை, தெளிவுபடுத்த ஞானக்கூத்தனைத் துணைக்கழைக்கும்போது ஆசிரியரின் பொதுஞானம் புலப்படுகிறது என்றால் அது மிகையல்ல.

"பெண்களின் மூச்சுக்காற்றின் மேல்நோக்கிய அழுத்தத்தால், பெண்கள் சிந்தும் ரத்தவெள்ளம் மேலெழுந்து, என் சிறகுகளை ஒருநாள் நனைக்கும், அந்நாளில் நானும் தரையிறங்குவேன்" – மீவலி வரிகள்.

பெண் வன்கொடுமையைப் படிக்கும்போதே, என் பெண்ணுள்ளம் குருதி வடிப்பதனை எவ்வாறு எடுத்துரைப்பேன்.

ஆயினும் கடவுள் கீழிறங்கி வரமாட்டானா எனும் ஆதங்கம் மேலோங்குகிறது, என்பதில் ஐயமில்லை.

“சிவாஜிக்கு” – கவிதை, திரைப்படம் ஏற்படுத்தும் பரவச சலனங்களையும், அவை ஒரு உண்மை ரசிகனின் மனதில் ஏற்படுத்தும் நிஜமான அதிர்வுகளையும், அவற்றை உணராத நுனிப்புல் பார்வையாளர்களின் அரை வேக்காட்டு அணுகுமுறைகளையும், துல்லியமாக அவதானித்துத் தனது பார்வையைப் பதியவைக்கும்போது, கவிஞர் பல்துறை வித்தகரோ எனும் எண்ணம் எழுகின்றது.

ஒரு பேச்சாளனின் ஒட்டுமொத்த உணர்வுகளையும் எடுத்துரைக்கும் வரிகள்–

“என் மடியில் ரத்தினமும் மாண்டு போகவில்லை. நான் பேசி முடித்து இறங்கும்போது, மேடையிலிருந்த ஒருவரும், கீழேயிருந்த ஒருவரும் என்னிடம் ரத்தினம் இருப்பதைக் கண்டுகொண்டதாய் சொன்னபோது என் வெப்பம் கொஞ்சம் குறைந்திருந்தது.”

ஆம் பல ரத்தினங்களின் வெப்பங்களும், அவ்வாறுதான் இக்குமுகத்தில் குறைந்து கொண்டிருக்கிறது – ஆறுதலாய்.

நூலக நூல்களின் பயணம் மிக அருமையாய் விவரிக்கப்பட்டு, அதில் நான் வியந்து ரசித்த வரிகள்- ”அனைத்து நூல்களின் சொந்த ஊர்களும் பழங்குடிப் பூமிகளாய்ப் பதப்படுத்தப்பட்டிருந்தன”. இதில் உன்னிக்கத் தோன்றும் விடயமாய் நூல்கள் காலத்தால் அழியாதன என்பது உணர்த்தப்படுகிறது.

மிக நேர்த்தியாய் அடுத்த கவிதையில் “வாசித்தீர்களா” எனக் கேட்டு, ஒரு நூலினை, எவ்வாறெல்லாம் துச்சமாய்ப் பயன்படுத்துகின்றனர், எவ்வாறு எவ்வாறு என்று பலவாறு இடித்துரைக்கப்பட்டு, இறுதியில் அதிகபட்ச எதிர்வினை, குறைந்தபட்சம் நூலினை வாசித்தல் மட்டுமே என்கிற விடயம் அந்நூலாசிரியரின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பு என்பதைச் சற்றே சீற்றத்துடன் கூறியுள்ளார், கவிஞர்.

அதன்பின்னர் வரும் ஒரு கவிதையில் “அஃறிணைகளின் சப்தங்களுக்கு இடையே உயர்திணைகளின் மௌனங்கள் நசுக்கப்படுகின்றன,” எனும் வரிகளில், போரின் ஓசையையும், போருக்குப் பின்னான அமைதியையும், அவலத்தையும் கச்சிதமாய்ப் படம்பிடிக்கிறார்.

“அசோகர்கள் போர்களுக்குப்பின்

முடிதுறந்து என்ன பயன்.

வான்வேட்டை, நீர் வேட்டை,

நிலவேட்டை

இன்னமும் தொடர்கிறது”

என உலக அமைதியை நாடிச் செல்லுதலில் கவிஞரின் பகுத்தறிவு புலனாகிறது.

அதீதமாய் என்னைப் பாதித்த “ஆட்கள் தேவை”யில் “காலிப் பணியிடங்களுக்குக் கடவுளரிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன” எனத் தொடங்கும் ஒவ்வொரு வரிகளும், சமூக விரோதிகளுக்கான சவுக்கடி, வன்முறையாளர்களுக்கான வாய்க்கிழிப்பு.

படித்துப் பாருங்கள் அக்கவிதையின் வரிகளை. பாவம், கடவுளர்களும் வெட்கித் தலைக்குனிவர்.

“வெளிச்சம்” கவிதையில், வெவ்வேறு நிலைப்பாடுகளில் இருளும் வெளிச்சமும் வேறுபட்டு நின்றாலும் கவிஞரின் சிந்தனையில், “வெளிச்சம் என்பது காலத்தையும், வெளியையும் உடையாய் அணிந்து பெறும் கண் சாட்சிதானா? நள்ளிரவின் இக்கவிதை வெளிச்சமெனில் இதைத் தெரியவைத்த ஒளிப்பிழம்பின் இருள் எங்கே?” – எனும் கேள்விகள் தொக்கி நிற்கின்றன.

“மயில் நிலையம்” கவிதையில் கவிஞர் பிரகடனம் செய்கிறார்.

“சொற்களின் மூச்சொலி மெல்லப் பயணித்து, ராக சஞ்சாரமாய், மேலே பறந்து, தவிப்படங்கியபின், ரசிகனின் காதுமடல் விரிப்புகளில் மயிலின் ஒயிலில் தரையிறங்கும்.”

ஆம், “மயில் நிலையம்” நூல்களின் வாசிப்பிற்குக்கிடையேயான ஆகச் சிறந்த நூல் நிலையமே. அதை நம் கண் மடல்கள் விரிந்து, விழிகளின் வழியே புரட்டிப் பார்க்கட்டும். ■

● ஆதிரன்

மனநிலைக் குறிப்புகள்-12

தத்துவ மனநிலை

மொழி என்பது என்ன என்ற கேள்விக்குக் காலந்தோறும் பல்வேறு வகைகளில் பதில்களை மனிதர்கள் கண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஒற்றைக் கேள்விக்குப் பதிலைக் கற்பதென்பது கடலைப் புரிந்துகொள்வது போன்றது என்றால் மிகையில்லை. மொழி மற்றும் அதன் அடிப்படைகள் பற்றிய உலகின் ஆதி நூலை உருவாக்கியவர்களில் முதன்மையானவர்கள் தமிழர்கள். தொல்காப்பியம் ‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன’ என்கிறது. ஒரு குறிப்பிட்ட வகையிலான ஒலிக்கு அதன் லயத்திற்கு ஏற்ப அர்த்தத்தை உருவாக்கி அதைச் சொல்லாக உருவாக்குவதில் இருந்து மொழியின் அமைப்பு உருப்பெறுகிறது எனலாம். மொழியியலில் உருவவியல் அல்லது உள்ளமைப்பியல் என்ற முதன்மைப் பிரிவு மொழியின் சொற்கள் உருவாக்கத்தைப் பற்றி மிக விரிவாக விவாதிக்கிறது. இந்தப் பாடத்தின் பெரும் பிரிவாக அமைப்பியலும் பின்அமைப்பியலும் இருக்கின்றன. மொழியின் அடிப்படையிலான இரு பெரும் தத்துவங்களாக இவை உருவெடுத்தன. இவ்வகையில் சசூர் எனும் ஸ்விட்சர்லாந்து பேராசிரியர் – *1889*இல் சமஸ்கிருதத்தில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர் – மொழியியலின் அமைப்பியல் பற்றிய நூதனமான விளக்கங்களை அளித்ததன் மூலம் மொழியியலின் அமைப்பியலுக்கு ஒரு ஆரம்பத்தை உருவாக்கினார். மொழியியலில் அமைப்பியலைப் போலவே நாட்டார் வழக்காறுகளின் அமைப்பியல் வாதத்தில் மிகச்சிறந்த முன்னெடுப்பை நிகழ்த்தியவர் ரஷ்யாவின் புகழ்பெற்ற தத்துவ அறிஞரான விளாடிமிர் ப்ராப் ஆவார். பிராப் தம்முடைய நாட்டார் கதைகளின் உள்ளமைப்பு (*Morphologija Skazki*) என்ற நூலை *1928*இல் வெளியிட்டார். இந்நூல் *1958*இல் அமெரிக்காவில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. இந்நூல் ‘நாட்டுப்புற வழக்காற்றியல்’ துறையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. பிராப்பின் கருத்தின்படி, வழக்காற்றுக் கதைகளின் தோற்றம் பற்றி ஆய்வு செய்வதற்கு முன்னால் அக்கதைகள் பற்றி விளக்கம் செய்தல் வேண்டும். மேலும் அவர், எல்லா ஆய்வுகட்கும் அடிப்படை, வகைப்படுத்துதல்தான்.. ஆனால் அது சில முதல்நிலை ஆராய்ச்சிகளுக்குப் பின்னரே நடைபெற வேண்டும் என்கிறார். வகைப்படுத்துதல் புறப்பண்புகளைக் கொண்டு அமையாது. சான்று மூலங்களின் உட்பண்புகளைக் கொண்டே அமைய வேண்டும் என்கிறார். போலவே, சசூர் மொழி பற்றிய அமைப்பியத்தை இனங்கண்டு விரிவுபடுத்தி, தம் அமைப்பியத்தில் மொழிக்கும் பேச்சுக்கும் உள்ள வேறுபாட்டினை நுணுகி ஆராய்ந்தார். மொழியின் பன்முக வெளிப்பாடாகிய பேச்சானது மொழியின் உறுப்புக்களை

அமைப்பியல் சிதைவின்றிப் பல்வேறு வகைகளில் இணைத்து எண்ணற்ற வாக்கியங்களை அமைக்கின்றது. ஒரு மொழிக் குறியானது *(Linguistic Sign)* தான் நிகழும் இடத்தையும் தான் உணர்த்தும் பொருளையும் கொண்டு இரண்டு நிலைகளில் உறவாடுகிறது என்பதைச் சசூர் ஆராய்ந்தார். இம்மொழிக் குறிகள் தொடரனில் *(Syntax)* எழுவாயாகவும், பிற வேற்றுமை உறுப்புகளாகவும் *(case constituents)* இவற்றை இணைக்கும் வினையாகவும், அடுத்தடுத்து ஒரு கிடைவரிசையில் தொடரனியற் சங்கிலியாக *(syntagmatic chain)* அமைந்து பொருண்மையையும் கொடுக்கின்றன என்பதையும் ஆராய்ந்தார். பொதுவாகத் தத்துவத் தளத்தில் அமைப்பியல் மற்றும் பின் அமைப்பியல் என்பதைப் பற்றிச் சுருக்கமாகத் தோழர் வளர்மதியின் வரிகளில் பார்க்கலாம் : ஒரு பொருளில் பல உறுப்புகள் இருக்கின்றன. ஆனால் அவை பிரிக்க இயலாதவாறு இணைந்திருக்கின்றன. ஒன்று மற்றொன்றைப் பாதித்து மாற்றி வளர்ப்பதாக உள்ளது. இந்த உறுப்புகள் முழுமை ஒன்றில் உயிர்ப்புடன் ஒன்றிணைந்து இருக்கின்றன. இந்த அமைப்பு அப்பொருளின் கட்டுமானத்தைக் குறிக்கின்றது. இதுதான் அமைப்பு குறித்து அமைப்பியல் தரும் விளக்கம் ஆகும். அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதால் அந்த அமைப்பினைப் படைப்பு எனக் கொள்ளாமல் பனுவல் என அது கொள்கிறது. பனுவலுக்குள்ளேயே ஒரு கலை வடிவத்தின் அல்லது இலக்கியத்தின் அழகும் பொருளும் எல்லாமும் இருக்கின்றன; வெளியே அல்ல என்று அமைப்பியல் கூறுகின்றது. படைப்பாளி மற்றும் படைப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்காமல் வாசகனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது அமைப்பியல். இது அமைப்பியலின் ஒரு முக்கியக் கோட்பாடாகும். பனுவல் என்பது இயங்குதல் தன்மை கொண்ட பல பகுதிகள் கொண்டது. அந்தப் பகுதிகள் ஒரு முழுமையின் பகுதிகளேயன்றித் தனிமையானவை அல்ல என்றும் அத்தகைய பகுதிகளை வாசகன் எவ்வாறு புரிந்துகொள்கிறான்; வாசகனுடைய புரிதல் தன்மைகள் பனுவலின் விசேடத் தன்மைகளை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்றும் அமைப்பியல் விளக்குகின்றது. அதேபோல் ஒருமுறை வாசித்தவுடன் கிடைக்கிற பொருள் அதன் பொருள் அல்ல; மீண்டும் மீண்டும் வாசிக்கும்போது பொருள்களின் பல உண்மைகள் புலப்படுகின்றன என்றும் அந்தப் பனுவல் பல வாசிப்புத் தளங்களைக் கொண்டது என்றும் அந்த வாசிப்புத் தளங்கள் இன்னொரு இணைப் பனுவலைக் கட்டமைக்கின்றன என்றும் பனுவலின் உண்மை அது கட்டவிழ்க்கப்படுகிறபோது வெளிப்படுகின்றது என்றும் பின்-அமைப்பியல் கூறுகின்றது. அமைப்பியலின் வளர்ச்சியாகவும் அதன் பல்வேறு அம்சங்களை மறுப்பதாகவும் பின்-அமைப்பியல் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. இதற்கு வித்திட்டவர்கள் ரோலந் பார்த், டெர்ரிடா, மிக்கேல் பூக்கோ, லக்கான், ஜூலியஸ் கிறிஸ்தோவா மற்றும் பால் டிவேர் ஆகியோர் ஆவர். இலக்கியம் என்பது வரையறைகளுக்கு உட்பட்ட பொருள்களைக் கொண்டதாகும். அதாவது அது தன்னுள் முடிவு பெற்ற ஓர் அமைப்பு என்று கருதப்பட்டது. ஆனால் பன்முகமான தளங்களை நோக்கிப் பனுவலின் விளக்கம் பயணம் புரிகின்றது. அமைப்பியல் என்பது ஒரு கலை வடிவம் அல்லது சிந்தனை வடிவத்தின் கட்டமைப்பு பற்றிப் பேசுகின்றது. அமைப்பு என்பது தன்னளவில் முழுமையானது; அதன் அழகு, அதன் செய்தி எல்லாம் அமைப்புக்கு உள்ளேயே இருக்கின்றது; வெளியே அல்ல என்று சொல்கிறது. அமைப்பியல் படைப்பாளிக்கு முக்கியத்துவம் தருவதில்லை; வாசகனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. பின்-அமைப்பியல் பனுவல் என்ற கருத்து நிலையை முன்வைத்து அது எவ்வாறு தனக்குள் முடியாமல் அதனைச் சார்ந்து புறத்தே இருக்கின்றவற்றோடும் உறவு கொண்டிருக்கின்றது என்று பேசுகின்றது. பனுவலின் உள்கட்டமைப்புக் கூறுகள் தமக்குள் பிணைந்தும் முரண்பட்டும் புதிய தளம் நோக்கி நகர்கின்றன என்றும் அது பேசுகின்றது. அதனுடைய சிறப்பான கருத்தியல்களில் பன்முக வாசிப்பு என்பதும் கட்டவிழ்ப்பு என்பதும் மிக முக்கியமானவை ஆகும்.

• • •

ஓவிய மனநிலை

ஓவியத்தின் ஆதி வடிவம் கோட்டோவியம் என்றால் மிகையில்லை. ஓவியம் வரைவதற்கு நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு முதலியன அடிப்படை. இவ்வாறு வரையப்படுபவை "கோட்டோவியங்கள்" என்று தமிழின் ஓவிய இலக்கணம் சொல்கிறது. தமிழர் தாம் வரைந்த ஓவியங்களை முதலில் "கண்ணெழுத்து" என்றே வழங்கினர். ஆச்சரியமாக எழுத்து என்பதற்கு ஓவியம் என்றும் பொருள் உண்டு எனப் பரிபாடலும், குறுந்தொகையும் கூறுகின்றன. அந்த வகையில் எனக்கு மிகவும் பிடித்த மூத்த தமிழ் ஓவியர் பத்மஸ்ரீ மனோகர் தேவதாஸ் *(Manohar Devadoss)*. 1936ஆம் ஆண்டு தமிழ்நாட்டில், மதுரையில் பிறந்தார். ஓவியத்தில் ஆர்வம் உள்ள இவர் பாரம்பரியமிக்க, கலைநயமிக்க புராதன மதுரைக் கோவில், சென்னைப் பகுதியில் உள்ள புராதனக் கட்டடங்களைக் கருப்பு வெள்ளைக் கோட்டுச் சித்திரங்களாக வரைந்து உள்ளார். அவரது ஓவியம் ஒன்றை நான் பகிர்கிறேன். அவரின் *Multiple facets of my Madurai, Green well years* உள்ளிட்ட பல்வேறு புத்தகங்கள் பிரபலமானவை. சென்னையில் பரீட்ஷா ஞானியின் 'கேணி' சந்திப்புக் கூட்டத்தில் மனோகர் தேவதாஸ், அவரது காதல் வாழ்வு பற்றிய பேச்சில் அனைவரும் மயங்கித்தான் போனோம்.

• • •

இலக்கிய மனநிலை

இரண்டு நாவல்கள். ஒன்று பதினெட்டாம் நூற்றாண்டின் திண்டுக்கல் மாவட்ட நிலப்பரப்பையும் நாவிதர் சமுதாய வாழ்நிலையையும் களமாகக் கொண்டு விவரிக்கப்பட்ட நாவல்.. முத்துநாகுவின் சுளுந்தீ. மற்றொன்று சமகாலத்தில் அல்லோபதி மருத்துவத் துறையில் நிகழும் தீவிரமான ஊழலை மையமாகக் கொண்டு விரியும் உமர் பாரூக்கின் ஆதுரசாலை. இரண்டு புத்தகங்களும் தன்னளவில் சமகாலத்திய முக்கிய நாவல்களாக நான் பரிந்துரைக்கிறேன். முதலில் இந்த இரண்டு நாவல்களும் என்னைப் பொருத்தவரையில் ஆயாசம் தரக்கூடிய மிக எளிமையான மொழிநடையில் அமைந்தவை. ஆனால் இந்த இரண்டு நாவல்களும் பேசும் பொருள்கள் மிகத் தீவிரமானவை. நல்ல பயிற்சி பெற்ற மொழிவல்லுனர் மூலம் இந்த நாவல்கள் தொகுக்கப்பட்டிருந்தால் உலகத்தரமான ஒரு அமைப்பை இந்த நாவல்கள் பெற்றிருக்க வாய்ப்பிருந்திருக்கும் என்பது எனது துணிபு. சுளுந்தீ நாயக்கர்கால ஆட்சியில் தமிழ் உழவர்களையும் இன்றைய திண்டுக்கல் மாவட்டத்தின் குறிஞ்சி, முல்லை மற்றும் மருத நிலத் திரிபுகளையும் அவற்றின் உழுநில வேளாண் மரபையும் அவர்களை எவ்வாறு சுரண்டினார்கள் என்பதையும் சிரத்தையுடன் சித்தரிக்க முயல்கிறது. பண்டுவம் செய்யும் நாவிதர்களின் வாழ்வியல் மூலம் வெறும் இரு ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலவரத்தை அக மற்றும் புறநிலை வழியில் நிதானமாக விளக்குகிறது. நிறைய வரலாற்றுத் தகவல்கள் நாவல் நெடுக உள்வைக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் களப்பணி அசர வைக்கிறது. காளிங்கராயன் கால்வாய்க் கல்வெட்டு, உயிலோலைச்சுவடிகள், செண்பகனூர் ஆவணக் காப்பகத்தின் தகவல் திரட்டல் எனப் பல்வேறு ஆதாரங்களைத் துணைக்கு வைத்துக்கொண்டு இந்த நாவலை எழுதியுள்ளார். சித்த மருத்துவத்தில் பிளாஸ்டிக் சர்ஜரியை நமது முன்னோர்கள் கைவசப்படுத்தியிருக்கிறார்கள். அறுபட்ட மூக்கை ஒட்டவைப்பது அவர்களுக்குச் சாத்தியமாகியிருக்கிறது. ஆதிச் சித்த மருத்துவம் அய்ரோப்பாவிற்குச்

சென்று எப்படி நவீன அல்லோபதியானது என்கிற மிக சுவாரஸ்யமான வரலாற்றுத் தேடலை என்னுள் உருவாக்கியிருக்கிறது இந்த நாவல். சுளுந்து என்பது ஒரு மரவகை. அது நெருப்பைத் தக்கவைத்துக் கொள்ள உதவுகிறது. ஊருக்கு அது உலைசெய்ய உதவுகிறது. படிக்கும்போது மனதில் விரியும் காட்சிகள் பிரமாண்டமானவை. போலவே, ஆதுரசாலை நாவல் ஒரு பயங்கரமான ஊழல் தீயைப் பொதுவெளியில் கொளுத்திப் போடுகிறது. ஒரு பாராமெடிக் மருத்துவ மாணவனின் எளிய வாழ்வைச் சித்தரிக்கும் விதமாக நாட்டில் அல்லோபதி மருத்துவத்தை வைத்து மக்களை எவ்வளவு சுரண்டுகிறார்கள் என்பதை மிக விரிவாகவே பதிவு செய்கிறது நாவல். தனது சொந்த அனுபவத்திலிருந்து தெளிவான தரவுகளை வைத்து நாவலைப் புனைந்திருக்கிறார் உமர் ஃபாரூக். உண்மையில் மிகவும் பரவலாக்கம் செய்யப்பட வேண்டிய ஒரு புத்தகம். எனக்கு அல்லோபதி மேல் எந்த வெறுப்பும் இல்லை. மனித அறிவியல் புலத்தில் நம்மிடையே இருக்கும் பல மாற்று மருத்துவம் போலவே அல்லோபதியும் சிறந்த மருத்துவ முறைகளில் ஒன்று. ஆனால் அதன் சாத்தியப்பாடுகள் பற்றிய எந்த அடிப்படையும் இல்லாமல் இவ்வகையான மருத்துவ உலகம் எளிய மக்களிடம் இதை வியாபாரம் செய்வது என்ற நிகழ்வுப்போக்கு என்பது உலக அளவில் மனிதகுல வரலாற்றின் மிகப் பெரிய ஊழலாக மாறி நிற்கிறது. இந்த வேதனையான உண்மையின் ஒரு துளிதான் இந்த நாவல். இது தவிர கடந்த வருடங்களில் வந்த மற்றொரு தமிழ் நாவலான கவிப்பித்தனின் ‘மடவளி’யையும் (2017 விகடன் விருது) இந்த சமயத்தில் பரிந்துரைக்கிறேன். “மக்களாட்சியின் ஒரு அங்கமாகச் சொல்லப்படும் உள்ளாட்சித் தேர்தல்களின் உண்மையான முகத்தை அதன் ஒப்பனைகளையெல்லாம் கலைத்துவிட்டு அசலாக இந்த நாவலில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். ‘மடவளிகள்’ எனப்படும் வண்ணார்கள், நாவிதர்களின் வாழ்வியலையும், சமூகத்தின் எந்த நிகழ்வானாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வாறெல்லாம் நசுக்கப்படுகிறார்கள் என்பதையும் தேர்தலின் பின்புலத்தோடு சொல்கிற முதல் நாவலாக ‘மடவளி’ உள்ளது” என்று அறிமுகப்படுத்தப்பட்ட இந்த நாவலை இதே வரிகளிலேயே வழிமொழிகிறேன்.

• • •

பொதுவான மனநிலை

கற்கால மனிதர்கள் பற்றி ஒரு கட்டுரையைப் படித்துக்கொண்டிருந்தேன். இயல்பாக கற்காலக் கருவிகளின் வரலாறு பக்கம் மனம் திரும்பியது. மனிதகுலம் பயன்படுத்திய ஆதிக்கருவிகளில் ஒருவகை ஆக்லியன் கைக்கோடாரி *(Acheulean hand axe)*. ‘துரவி ஆக்கியெல்’ என்பவரின் நினைவால் இந்தப் பெயர் அளிக்கப்பட்டது. இது ஒரு நீர்த்துளி வடிவமாகச் செதுக்கப்பட்ட கல். இதற்குத் ‘தழும்பழிக் கோடாரி’ என்ற கண்றாவியான பெயரைத் தமிழ் விக்கிபீடியா அளித்துள்ளது. இன்றைய ஆஃப்ரிக்க நாடான கென்யாவின் ரிஃப்ட் பள்ளத்தாக்கில் கிடைத்த ஒரு கற்கோடாரிதான் இன்றைய தினத்தில் மிகப்பழமையான மனிதன் உபயோகித்த கருவி ஆகும். இது ஏறக்குறைய 17 லட்சம் வருடங்களுக்கு முந்தையது என ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்துள்ளனர். போலவே எத்தியோபியாவில் நமக்குக் கிடைத்த ஹோமோ செப்பியன்ஸின் தொல்லெச்சப் படிமம் ஏறக்குறைய லட்சத்தித்தொண்ணூறு ஆயிரம் வருடங்களுக்கு முந்தையது. அதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஓமோ 1 *(Omo 1)* என்ற பெயர் வைத்திருக்கிறார்கள். பூமியின் உணவுச் சங்கிலியின் தலைமை வேட்டையாளராக *(predators)* – உண்மையில் சூரையாளராக – ஏறக்குறைய இரண்டு லட்சம் வருடங்களுக்கு முன்னரே உருவாகிவிட்டார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். அதற்கான வலுவான சாட்சியங்கள் நம்மிடையே கிடைத்துக்கொண்டிருக்கிறது என்கிறார்கள் மானுடவியலின் ஒரு பிரிவான தொல்லெச்சப் படிமவியல் *(paleoanthropology)* ஆய்வாளர்கள். பொதுவாக இன்றைய மனிதர்களின் மொத்த வயது ஏறக்குறைய இரண்டரை லட்சம் வருடங்கள். கற்கோடாரியிலிருந்து இன்றைய அதிகணினி வரையில் கருவிகளை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதற்கு நாம் அறிந்தவரையில் மிகவும் நுண்மையான அமைப்பைக் கொண்ட மனித மூளை உதவியிருக்கிறது. மானிடவியல் ஒரு பெரும் எதிர்காலத்தை வைத்திருக்கிறது. அதற்கு நமது கடந்தகாலம் அளப்பரிய தகவல்களைக் காத்து வைத்திருக்கிறது.



படைப்பு
சமூகத்தின் இணைப்பு

சுதந்திரக் கூத்து

புது சரித்திரம்

விரைவில்..